# அறமும் அரசியலும்

டாக்டர்.மு.வரதராசன்

உள்ளுறை


| | | |
|---|---|---|
| | முன்னுரை | i |
| 1. | குறுகிய நோக்கம் | 1-27 |
| 2. | அறம் வாழுமா? | 28-63 |
| 3. | அறத்தின் ஆட்சி | 64-93 |
| 4. | கட்சி அரசியல் | 94-115 |
| 5. | உரிமைப் பஞ்சம் | 116-135 |


## முன்னுரை

அறமாவது, அரசியலில் அதற்கு இடமாவது என்று சிலர் தள்ளுகிறார்கள். அறம் தனி வாழ்க்கையிலேயே உதவாதபோது அரசியலுக்கு எப்படிப் பொருந்தும் என்று சிலர் மறுக்கிறார்கள். உலகம் இப்படித்தான் இருக்கும், நம் நாளைக் கழித்துவிட்டு நாம் சொல்லாமல் போகவேண்டும் என்று சிலர் அமைதி அடைகிறார்கள்.

தனிமனிதன் வாழ்க்கைக்கு உணவும் உறக்கமும் இருந்தால் போதும். மக்கள் பலர் கூடி வாழும் சமுதாய வாழ்க்கைக்கே அறம் கட்டாயம் வேண்டும். மக்கள் எல்லோரும் கூடி நடத்தும் அரசியலுக்கே அறம் சிறப்பாக வேண்டும். உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ, அதுபோல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும். அறம், யாரோ சில துறவிகளின் பேச்சு என்பது போய், வாழ்க்கைச் சட்டம் என்னும் தெளிவு வேண்டும். அரசியல் அல்லல் விளைப்பதற்கெல்லாம் முதல்காரணம் அறமாகிய அடிப்படையைப் புறக்கணிப்பது தான் என்று உணர வேண்டும்.

காற்று ஊரெல்லாம் கெட்டிருக்கும்போது, நம் நுரையீரலில் மட்டும் தூய்மை நிலவவேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? பொது வாழ்க்கையாகிய அரசியலில் அறத்தைப் புறக்கணித்த பிறகு தனி வாழ்க்கையில் மட்டும் அறத்தைப் போற்ற முடியுமா? வெளிக்காற்றின் தூய்மையைக் கெடுக்காமல் காப்பது முதல் கடமை. அதை விட்டு மூச்சைப் பிடித்துத் திணறிப் பயன் என்ன? ஆகவே அரசியலில் அறம் வாழப் பாடுபடாமல் தனிவாழ்க்கையில் திணறித் திண்டாடிவிட்டு, "அறமாவது, நடப்பதாவது, எல்லாம் ஏட்டுச் சுரைக்காய்" என்று ஏங்குவதால் பயன் என்ன?

இவற்றை எண்ணிப் பார்க்க இந்த நூல் துணை செய்யும் என்று நம்புகிறேன்.

மு.வ

## 1. குறுகிய நோக்கம்

### உலகம் போர்க்களம்

ஓர் ஊரில் அழகான தெருக்கள் பல அமைந்திருக்கின்றன. அவற்றுள் சில தெருக்கள் சிறியவை; சில தெருக்கள் பெரியவை. ஆனாலும் ஒவ்வொரு தெருவும் கண்ணுக்கு இனிய காட்சியாக இருக்கின்றது. இது வெளித் தோற்றம். வீடுகளின் உள்ளே சென்று பார்த்தால், எங்கோ ஒரு மூலையில் கொஞ்சம் அரிசி, கோதுமை, சோளம் முதலிய உணவுப் பொருள்கள் இருக்கின்றன. அதைவிடச் சிறிய மூலையில் திருக்குறள், கீதை, குரான் முதலிய நூல்கள்

தூசுபடிந்த நிலையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர மற்ற இடங்களிலெல்லாம் ஈட்டிகளும் துப்பாக்கிகளும் பளபள என்று மின்னிக் கொண்டிருக்கின்றன; தடிகளும் வாள்களும் கவர்ச்சியாக நிற்கின்றன. உண்ணும் உணவு இரண்டு பேர்க்கு இரண்டு நாளைக்குத் தான் ஆகும். ஆனால் இந்த ஈட்டிகளும் துப்பாக்கிகளும் பல தலைமுறைகளுக்கு நூற்றுக் கணக்கானவர்களுக்குப் போர் செய்யப் பயன்படும் என்று தோன்றுகின்றன. சுவர் ஓரத்தில் பெட்டிகள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. உறுதியான பெரிய பெரிய பூட்டுக்களால் பூட்டப்பட்டிருக்கின்றன. உள்ளே அடங்கிய பொருள் இன்னது என்று தெரிவதற்காக மேலே 'குண்டுகள்' 'வெடிமருந்துகள்', 'நச்சுப்புகை' என்று எழுதப்பட்டிருக்கின்றன. இரண்டே பெட்டிகள் பூட்டப்படாமல், மேலே சீட்டும் எழுதி ஒட்டப்படாமல் இருக்கின்றன. அவற்றை எளிதில் திறக்கலாம். ஒன்றில் உடைகளும் அணிகலன்களும் காய்கறி விதைகளும் தாறுமாறாகக் கிடக்கின்றன. மற்றொன்றில் தலைவலி மருந்து, வயிற்றுநோய் மருந்து முதலிய சில பொட்டலங்களும் கட்டி முதலியவற்றை அறுப்பதற்குச் சில கத்திகளும் கொஞ்சம் பஞ்சும் இருக்கின்றன. வீட்டிலுள்ளவர்கள் வாசற் படியில் நின்றுகொண்டு உறுதியான கதவுகளையும் ஒன்றுக்கு நாலைந்தாக உள்ள தாழ்ப்பாள் வகைகளையும் பார்த்துக் கொண்டு நிற்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு கையிலும் ஈட்டி, துப்பாக்கி அல்லது தடியையாவது வைத்திருக்கிறார்கள். அவர்களோடு பேசலாம் என்று வாயெடுத்தால், ஈட்டி, துப்பாக்கி அல்லது தடியை உயர்த்தி அதன் மூலமாகச் சைகை காட்டிப் பேசுகின்றார்கள். தெருவில் திரிகின்றவர்களைப் பார்த்தாலும் கைகோத்துக் கொண்டு திரிகின்றவர்கள் ஒருவரும் இல்லை. ஒருவர் தோள்மேல் மற்றொருவர் வாளைச் சாய்த்தபடியே நடந்து போகின்றார்கள். ஒரு தெருவினர் மற்றொரு தெருவினரைக் கண்டாலும் வாளால் வணக்கம் செய்கின்றார்கள். வாளோடு வாளைத் தட்டித்தான் வரவேற்புச் செய்கின்றார்கள்.

இப்படி ஓர் ஊரில் சில தெருக்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கற்பனை ஊரைப் போல் தான் இந்தக் காலத்து நாகரிக உலகம் வாழ்கின்றது. சில பெரிய நாடுகள், சில சிறிய நாடுகள் எல்லாம் சேர்ந்து வாழ்கின்றன. அவற்றுள் சில வல்லரசுகளாக அமைந்துள்ளன. எல்லா நாடுகளிலும் நாகரிகம் விளங்குகின்றது. ஆனால் உணவுப் பொருள் ஓரளவாகவே உண்டாக்கப்படுகின்றது. சில நாடுகளில் உணவுப் பொருள் போதாமல் அரைப் பஞ்சமும் கால் பஞ்சமும் இருந்து வருகின்றன. வாழ்க்கைக்கு உரிய உயர்ந்த நூல்களைப் போற்றும் முயற்சியும் குறைவாகவே

இருக்கின்றது. உடை முதலியவும் போதுமான அளவுக்கு
உண்டாக்கப்படவில்லை. மக்களின்

நோயைத் தீர்த்து உடல் நலம் அளிக்கும் மருத்துவ நிலையங்களும் கருவிகளும் போதிய அளவுக்கு இல்லை என்றே சொல்ல வேண்டும். ஆனால் எல்லா நாடுகளிலும் போர்க்கருவிகள் மட்டும் அளவுகடந்து உண்டாக்கப் பட்டுள்ளன. பலவகைச் சிறப்புகளோடு போற்றப்பட்டு வருகின்றன. வயிற்று உணவுக்கும் வாழ்க்கைப் பொருள்களுக்கும் கல்விநலத்திற்கும் உடல் நலம் காக்கும் மருந்து வகைகளுக்கும் செலவாகும் முயற்சியும் பணமும் மிகக் குறைவே, ஆனால் பகைவர் நாட்டை அழிப்பதற்கு என்று கனாக் கண்டு கொண்டு எல்லோரும் கூட்டுறவாகச் செய்யும் அழிவு வேலைக்கு - உலகத்தை அழிக்கும் போர்க் கொடுமைக்குச் - செலவாகும் முயற்சியும் பணமும் ஏராளம்! போர்க் கருவிகளைப் புதுமையாகக் காண்பதில் அறிஞர் காட்டும் ஊக்கமும் அரசியலார் தரும் ஆதரவும் வேறு துறையில் காட்டினால், உலகத்தில் எந்த மூலையிலும் உணவு உடை வீடு முதலிய பஞ்சங்கள் தலைகாட்டாமல் செய்துவிடலாம்; ஆனால் பஞ்சங்களும் குறைகளும் தீர வழி இல்லை; அதற்கு மாறாக இந்த உலகத்தைப் போல எத்தனையோ ஆயிரம் உலகங்களை அழிப்பதற்கு வேண்டிய அணுக்குண்டுகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நாட்டுத் தலைவரை மற்றொரு நாட்டு அரசியலார் வரவேற்பதானாலும், இராணுவ வரவேற்புத்தான். ஒரு நாட்டோடு மற்றொரு நாடு உறவு கொள்வதானாலும் படையும் வலிமையும் பற்றிய பேச்சுத்தான். ஒரு நாட்டோடு மற்றொரு நாடு பிணங்குவதானாலும் குண்டுகள் வெடித்து முழங்கும் முழக்கந்தான்.

எப்படித் தொடங்கியது?

இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்று யாரைக் கேட்பது? எல்லோரும் குற்றவாளிகளே என்ற நிலைமையில் அறத்தை மறந்து அரசியலில் குதித்திருப்பதால், அந்தக் கேள்வியை அப்படியே விட்டுவிட்டு, அந்தக் கற்பனை ஊரையே பார்த்து ஆராய வேண்டும்.

அந்த ஊரில் வீடுகள் கண்டோம். முதன் முதலில் வீடுகள் அமைந்த காரணமும் முறையும் என்ன? வெயில், பனி, மழை முதலியவற்றிலிருந்து காத்துக்கொள்வதற்காக முதலில் பந்தல் வேண்டியதாக இருந்தது. கொடிய விலங்குகள் துன்புறுத்தாமல் இருப்பதற்காகத் தடி முதலிய கருவிகள் போதாமல், உள்ளே புகாதபடி தடுக்க வேலி வேண்டியதாக இருந்தது. இது படிப்படியாக வளர்ந்து நாற்புறமும் சுவர் வைக்கும் நிலைமை வந்தது. எல்லோரும் சேர்ந்து ஒரே வீடு கட்டி வாழ்வது அருமையாக இருந்தமையால்,

தனித்தனியே கணவனும் மனைவியும் ஒவ்வொரு குடும்பமாகப் பொறுப்பு ஏற்றுத் தம்தம் கடமையைப் பார்த்துக் கொள்வது எளிதாக இருந்து, தனிதனிக் குடிசைகள் அமைந்தன. அன்றன்றைக்கு உணவு தேடி உண்ணும் வாழ்க்கையில் சில ஏமாற்றங்களும் ஏற்பட்டன. வெளியே போய் உணவு தேட முடியாதபடி மழை நாட்களில் தொல்லை ஏற்பட்டது. வெளியே சென்று தேடினாலும் கிடைக்காத குறையும் மற்றக் காலங்களில் சில நாட்களில் ஏற்பட்டது. ஆகவே, உணவுப் பொருளை அந்த அந்தக் குடிசைகளில் சேர்த்து வைக்கும் வழக்கமும் ஏற்பட்டது. ஆணும் பெண்ணுமாக, சிறு கூட்டமாக, ஒரு தெருவில் உள்ளவர்கள் குடிசைகளை விட்டு வெளியே போயிருந்த வேளையில் பக்கத்துத் தெருவில் உள்ளவர்கள் அங்கு வந்து அந்த உணவுப் பொருளை எடுத்து உண்டார்கள்; முயற்சி செய்து தேடுவதைவிட, மற்றவர்கள் தேடி வைத்ததை எடுத்துக் கொண்டுபோய் நுகர்வது எளிது அல்லவா? இதை உணர்ந்த தெரு மக்கள் அந்த அந்தக் குடிசைகளில் விலங்குகள் நுழையாதபடி சுவரும் வேலி முதலியனவும் அமைத்தது போலவே, பக்கத்துத் தெருவில் வாழும் மக்களின் கொள்ளையைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டி நேரிட்டது. கூட்டமாக எல்லோரும் தெருவை விட்டுப் போகாமல் காவலுக்குச் சிலரை வைத்துவிட்டுப் போக நேர்ந்தது. விலங்குகளைத் துரத்த வந்திருந்த தடியும் ஈட்டியும் மக்களைத் துரத்தியடிக்கவும் பயன்பட்டன. விலங்குகளின் அறிவு வளராது. மக்களின் அறிவு வளரும் அல்லவா? அதிலும், உழைக்கும் மக்களுக்கு அறிவு வளர்ச்சி குறைவு; உழைப்பு இல்லாத மக்களுக்கே அறிவு கூர்மையாக வளரும் அல்லவா? கொள்ளைக் கூட்டத்தார் வெறுங்கையோடு வராமல் திறமையான கருவிகளைச் செய்து கொண்டு கொள்ளை அடிக்க வந்தார்கள். அதனால் உணவு தேடும் வேலைக்கே முழு முயற்சியும் செய்வது போய் அதைக் காவல் காத்துப் போர் செய்வதற்கு உரிய கருவிகளைச் செய்வதிலும் முயற்சியைச் செலுத்த வேண்டியதாயிற்று.

அந்தக் தெருவின் மக்களிலேயே சிலர் சோம்பேறிகளாக இருக்க நேரும் அல்லவா? அறிவு வளர்ச்சி காரணமாகவோ உடல் மெலிவு காரணமாகவோ, சோம்பல் வளர்ந்த பிறகு, வெளியே சென்று உழைக்காமல் உள்ளதைத்தின்று நாளைக் கழிக்கச் சிலருக்கு எண்ணம் வந்தது. சிலர் அளவுக்கு மீறி உழைத்து அங்கும் இங்கும் அலைந்து கிடைத்ததை எல்லாம் கொண்டு வந்து வீடுகளில் சேர்த்து வைத்தார்கள். இதனால் சில வீடுகளில் உணவுப் பொருள் சேமிப்புக் குறைவுபட்டது; சில வீடுகளில் மிகுதியாயிற்று. இந்த வேறுபாட்டை மறைக்க முடியுமா? உழைப்பைக் குறைத்துக் கொண்டு அறிவை வளர்த்தவர்கள் அமைதியாக இருப்பார்களா? சேர்த்து வைத்தவர்களிடம் இன்சொல் கூறித் தந்திரமாகச் சிலர் பறித்து

உண்ணத் தலைப்பட்டார்கள். சிலர் அவர்கள் வெளியே போயிருக்கும் நேரம் அல்லது ஏமாந்திருக்கும் நேரம் பார்த்து வீடுகளின் உள்ளே மறைந்து புகுந்து சேர்த்துள்ள உணவை எடுத்து வரத் தொடங்கினார்கள். முன்னே பக்கத்துத் தெருவினர் செய்தது கொள்ளை. இது திருடு. கொள்ளையைத் தடுக்கக் காவலாளரும் (படை) தடி முதலியனவும் (போர்க்கருவிகள்) வைத்தும் பயன்படுத்தியது போல், திருட்டைத் தடுக்கவும் வழி கண்டார்கள். கதவு பூட்டும் அப்போது தான் மனித மூளையால் கண்டு பிடிக்கப்பட்டன. கதவைத் திறக்கும் நிலையையும் பூட்டை உடைக்கும் நிலைமையும் வந்த போது, ஊருக்குப் பொதுவான காவல் போதாது என்று, தெருக்காவலும் போதாது என்று, வீட்டுக்கு வீடு காவல் (போலீஸ் முதலியன) ஏற்படுத்தும் நிலைமை வந்தது. ஒருவரை ஒருவர் கண்டால் அன்பாகப் பழகி உறவோடு பார்க்கும் நிலைமை மாறியது. அறிவோடு பழகி ஐயத்தோடு நோக்கும் நிலைமை வந்தது. உண்பதும் உறங்குவதுமாக முடிந்திருந்த இயற்கை வாழ்க்கை மாறியது. உணவுப் பொருளைத் தேடும் முயற்சியைவிட, அதற்காகச் செலவிடும் காலத்தைவிட, தேடிய பொருளைக் காக்கும் முயற்சி மிகுதியாயிற்று. காப்பதிலேயே மிகுதியான நேரமும் செலவாயிற்று. வெயிலுக்கும் மழைக்கும் பனிக்கும் விலங்குக்கும் தடையாக எழுந்த வீடுகள், ஒருவரை ஒருவர் பிரித்துவைத்து ஐயமும் பகையும் கொண்டு வாழ்வதற்கு உரிய எல்லை அமைப்புகள் ஆயின. கண்ட இடமெல்லாம் வாழ்க்கைக்கு வேண்டிய உணவும் உடை முதலியனவும் இருந்த வீடுகளில், கண்ட இடமெல்லாம் கதவும் பூட்டும் ஈட்டியும் வாளும் அளவில்லாமல் காணப்படும் நிலைமை வந்தது. தொடக்கம் ஒன்றாக இருந்தது; முடிவு ஒன்றாக ஆயிற்று.

வந்தனை - நிந்தனை

உழைப்பு இல்லாதவனை ஒதுக்கி வைக்கத் தெரிந்திருந்தால், சேர்த்துவைக்கும் உணவுப் பொருளை ஊர்க்குப் பொதுவாகச் சேர்த்துவைக்கத் தெரிந்திருந்தால், அந்த அந்தத் தெருவில் உள்ளவர்கள் பகையில்லாமல் சேர்ந்து வாழ்ந்து ஒற்றுமைப்பட்டிருக்க முடியும். இப்படி ஒவ்வொரு தெருவிலும் உழைப்பு இல்லாத மக்களைத் தேடிக் கண்டு திருத்தியிருந்தால், ஒவ்வொரு தெருவின் மக்களும் உழைப்பாளிகளாக மாறியிருந்தால், எந்தத் தெருவிலும் கொள்ளைக் கூட்டம் என்று சிலர் ஒன்று சேர்ந்திருக்கமாட்டார்கள். வீட்டுக் காவல், தெருக்காவல் இவை இரண்டிற்காக ஈட்டி வாள் முதலியவை, இவற்றை அளவு கடந்து பெருக்கும் முயற்சி ஆகிய எல்லாம் குறைந்திருக்கும்;

உண்டுவாழ உணவைச் சேர்க்கத் தொடங்கிய முயற்சி ஒருவரை ஒருவர் கொன்று வாழும் கொலைக் கருவிகள் செய்யும் கதையாக முடிந்திருக்காது.

ஆனால், சிலர் வேறு வழியில் முயற்சி செய்து பார்க்கின்றார்கள். அவர்கள் நம்பிக்கையும் வேறுபட்டதாக இருக்கின்றது. பெரும்பாலான மக்கள் உழைக்கப் பிறந்தவர்கள் என்றும், அவர்களை ஆளும் அரசியலைக் கைப்பற்றுவதே தம் கடமை என்றும், தாம் ஆட்சி புரிந்தால்தான் போரையும் குழப்பத்தையும் ஒழித்து அமைதியை நிலைநாட்ட முடியும் என்றும், தம் முயற்சிக்குத் தடையாக, நிற்பவர்கள் உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் அவர்களை அடக்குவது அல்லது அழிப்பதே அறம் என்றும் நம்புகின்றார்கள்.

உலகம் நாடு நாடாகப் பிரிந்து ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சாரார் கையில் சிக்குண்டு இந்த நிலைமையில் இருந்து வருகின்றது. விஞ்ஞான வளர்ச்சியில் யந்திரங்கள் பெருகியவுடன் விரைவான மாறுதல் ஏற்பட்டு வருவதாயிற்று. பெரிய பெரிய கைத்தொழில் நிலையங்களும் போக்கு வரவுக் கருவிகளும் வியாபார அமைப்புக்களும் தனித்தனியே சேர்த்துவைக்கும் ஆற்றலை மிகுதிப்படுத்தி விட்டன. அதற்கு அடுத்தாற்போல், போர் முறையிலும் சிற்சிலரையோ சிறு கூட்டத்தையோ அழிக்கும் கருவிகள், இருந்த இடம்போய் கோடிக்கணக்கான மக்களையும் ஊர் ஊராகப் பெரிய பெரிய நிலப்பகுதியையும் சில நொடிகளில் அழிக்கவல்ல அணுக்குண்டுகளும் பிற கருவிகளும் வளர்ந்துவிட்டன. சேர்த்துவைக்கும் ஆற்றல் மிகுந்த காரணத்தால் வறுமைத் தொல்லை முன்னிலும் பன்மடங்கு தெளிவாக விளங்கிவிட்டது. அழிக்கும் ஆற்றல்மிகுந்த காரணத்தால், தனித்தனியாக ஒரு சிலர் அறநெறியில் வாழ்வதால் பயனில்லை என்பதும் விளங்கிவிட்டது.

விஞ்ஞான வளர்ச்சியும் யந்திரப் பெருக்கமும் இன்னொரு பெரிய மாறுதலைச் செய்திருப்பதை மறக்க முடியாது. ஒவ்வொரு நாட்டிலும் சிற்சிலர் தாம் மட்டுமே ஆளப் பிறந்தவர்கள், மற்றவர்கள் எல்லோரும் உழைக்கப் பிறந்தவர்கள் என்று எண்ணி வந்தார்கள். எண்ணி வருகின்றார்கள். அவர்கள் எண்ணத்தில் இடிவிழுந்துவிட்டது. உழைத்து உழைத்து வியர்வை சிந்தும் தொழிலாளிகள் தலை நிமிர்ந்து "நாங்களும் ஆளப் பிறந்தவர்களே; என்று வாய் திறந்து கூறத் தொடங்கினார்கள். சில நாடுகளில் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அமைச்சர்களாகி ஆட்சியும் புரிகின்றார்கள்.

இதற்குக் காரணம் என்ன? பழங்காலத்து உழைப்பு கைகால்களின் உழைப்பு; மணிக்கணக்காக உடம்பால் உழைக்கும் உழைப்பு; ஆகையால் மூளை வளர்ச்சிக்கு இடம் தராத உழைப்பு. மென்மையான உடம்பில் மட்டுமே மூளை வளரும் என்பதும், விலங்குபோல் உழைத்து முரட்டுத் தன்மை பெற்ற உடம்பில் மூளை நுட்பமாக வளராது என்பதும் அறிஞர்கள் கண்ட முடிவு அல்லவா? ஆகையால் பழங்காலத்தில் உழைப்பாளிகள் எண்ணும் ஆற்றல் இல்லாமல் ஆடுமாடுபோல் அடங்கி வாழ முடிந்தது. யந்திரங்கள் வந்த பிறகு, மக்கள் உடம்பில் அவ்வளவு வியர்வை சிந்த வேண்டியதில்லை; யந்திரங்களை இயக்கவும் ஓரளவு துணை செய்யவும் தெரிந்து கொண்டு மென்மையாக உழைத்தால் போதும். ஆகையால், இந்தக் காலத்து உழைப்பாளிகளுக்கு மூளை வளர்ச்சிக்கு இடம் இருக்கின்றது. ஆகவே பல காரணங்களை நயமாகவும் தந்திரமாகவும் மற்றவர்கள் கூறினாலும் அவர்கள் நம்புவதில்லை. எண்ணிப் பார்க்கத் தொடங்குகின்றார்கள். "உழவுக்கும் தொழிலுக்கும்

வந்தனை செய்வோம்" - வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று யாராவது தெருவில் பாடிக்கொண்டு சென்றாலும் கேட்டுக் கிளர்ச்சி பெற்றுத் தலைநிமிர்ந்து நடக்கும் அவ்வளவு மாறுதலை அவர்களுடைய மூளை வளர்ச்சி உண்டாக்கிவிட்டது. இது தான் மற்றவர்களின் எண்ணத்தில் விழுந்த இடி.

### பலவகை முயற்சி

அரசியலில் நல்ல மாறுதல் ஏற்பட்டால்தான் மக்கள் வாழ்க்கையில் அறம் நிலைக்க முடியும் என்று அறிஞர் சிலர் எண்ணுகின்றார்கள். அரசியலைப் பற்றிக் கவலை இல்லை. நம் வரையில் அறத்தைக் கடைப் பிடித்து மனச்சான்றை ஒட்டி வாழ்க்கை நடத்திவிட்டுச் சென்றால் போதும் என்ற கொள்கை இதுவரையில் இருந்து வந்தது. தனித்தனியாக ஒரு சிலர் அறநெறியில் வாழ்வதற்கும் வாழ்க்கைப் போராட்டம் தடையாக நிற்பதை இப்போது மெல்ல மெல்ல உணர்ந்து வருகின்றார்கள். "ஊர் எப்படியாவது போகட்டும், நம் வீட்டு வரையில் உணவுப் பொருள் சேர்த்து வைத்து உண்டு வாழ்வோம்; ஈட்டியும் கத்தியும் செய்வதில் காலம் கழிப்பது பாவம்", என்று சிலர் எண்ணிவந்த காலம் மலையேறி விட்டது. "உழைப்பில்லாமல் திருடி வாழ்கின்றவர்களுக்கு ஊரில் இடம் கொடுப்பதே பாவம், அவர்கள் திருடுமாறு நாம் ஏமாந்து வாழ்வதே அதைவிடப் பெரிய பாவம்", என்று எண்ணும் புதிய நிலை பிறந்து விட்டது. உலகத்தில் அறத்தை நிலைநாட்டுவதே பெரிய

கடமை, முதல் கடமை என்ற உணர்ச்சி புத்தர் முதலான பழங்காலத்துச் சான்றோர் எல்லோரிடமும் விளங்கியிருந்தது. ஆனால் அறநெறியையும்

அரசியலையும் பிரிக்காமல் பிணைத்து நோக்கி வாழ்க்கையோடு இணைத்துத் தொண்டாற்றி வழிகாட்டிய உலகப் பெரியார் காந்தி அடிகளே ஆவார். வறுமையையும் கொடுமையையும் ஒழிப்பதே அவர் ஆற்றிய தொண்டுகளின் அடிப்படை. கொடுமை (ஹிம்ஸை)யை ஒழிக்கவேண்டும் என்று அவர் மேற்கொண்ட பெருமுயற்சி உலகத்தில் கண்களை விழிக்கச் செய்துள்ளது.

இன்று வறுமையும் கொடுமையும் இல்லாத மூலை முடுக்கு இல்லை. இவற்றைத் தொலைக்க வேண்டும் என்றே எல்லா அரசியலாளரும் அறிஞரும் தொண்டரும் பேசி வருகின்றார்கள்; ஆனால் இந்த இரண்டுமோ வரம்பு கடந்து பெருகி வருகின்றன. வழக்கம்போல் சிலர், "எங்கள் கையில் உலகத்தைக் காக்கும் பொறுப்பை விட்டுப் பாருங்கள். அமைதியை நிலைநாட்டி விடுவோம்", என்று சொல்லி, அமைதிக்கு வழியாக அணுக்குண்டுகளைப் பரபரப்பாகச் செய்து கொண்டு வருகின்றார்கள். மற்றவர்களோ நாடுதோறும் கட்சிகளை அமைத்து, அந்தக் கட்சிகளுக்கு செல்வாக்குக் கொடுக்கும்படியாகப் பொது மக்களைக் கேட்டுக் கொண்டு "செல்வாக்குப் பெற்று, ஆளும் உரிமையும் பெற்றால் சட்டங்களை இப்படி இப்படி மாற்றி அமைதியை நிலைநிறுத்துவோம்," என்று உறுதி கூறுகின்றார்கள்.

## தொண்டும் கட்சியும்

கோடிக்கணக்கான மக்கள் கூடி வாழும் வாழ்க்கை அமைந்த அரசியலில், செல்வாக்கைப் பெருக்கினால் தவிர, அரசியல் தொண்டர்கள்

ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் தம் தம் செல்வாக்கைப் பெருக்குவதே அரசியல் தொண்டர்களின் முதல் கடமை ஆகின்றது. அதனால்தான் தம் கொள்கையைப் போற்றும் மக்கள் பெரும்பான்மையாக இருக்க வேண்டும் என்று முயல்கின்றார்கள். ஆனால் அரசியல் தொண்டர்கள் அறிந்த அளவு மக்கள் அறிவதில்லை. கால நிலைக்கும் இடத்தின் சூழலுக்கும் ஏற்றபடி மாறுதல் செய்ய வேண்டும் என்று தொண்டர்கள் கருதும்போது, வேண்டாம் என்று மறுக்கும் நிலையிலேயே மக்கள் இருக்கின்றார்கள். இதை அறிந்த வேறு சில தொண்டர்கள், கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முயல்கிறார்கள். இவர்கள் நேர்மை குறைந்தவர்கள்; தந்திரக்காரர்கள்.

ஆகையால் எப்படியாவது செல்வாக்குப் பெறுவதே நோக்கமாகக் கருதுகின்றார்கள். "நாமும் இப்போது மாறுதல் வேண்டாம்" என்றே சொல்லி விடலாம்; மக்களின் மனநிலையைப் பயன்படுத்திக் கொண்டு செல்வாக்கைப் பெருகச் செய்துகொண்டு ஒரு படி முன்னேறலாம். நம் பக்கம் பெரும்பாலோர் திரும்பிய பிறகு, படிப்படியாக மாறுதல் செய்து விடலாம்; இதுதான் தக்க வழி", என்று துணிந்து ஏமாற்றத் தொடங்குகின்றார்கள்.

இவ்வாறு அரசியல் கட்சிகள் இரண்டு ஏற்படுகின்றன. ஒரு கட்சியார் உண்மையை ஒளிக்காமல் எடுத்துச் சொல்லி மக்களிடத்தில் செல்வாக்குப் பெற முயல்கின்றவர்கள். மற்றொரு கட்சியார் உண்மையைக் கூறாமல் மக்கள் மனப்பான்மையையே எடுத்துச் சொல்லிச் செல்வாக்குப் பெற முயல்கின்றவர்கள், இரு கட்சியார் நோக்கமும் ஒன்றேதான். ஆனால் கட்சிப் போக்கு வேறு வேறு. நோக்கத்தின் ஒற்றுமையை இருசாராரும் மறைக்கின்றார்கள். போக்கின்

வேறுபாட்டையே பெரிதாக்குகின்றார்கள். தம் தம் வேறுபாட்டை எடுத்துரைப்பதால் வெற்றி பெற முயல்கின்றார்கள். கட்சிப் பிணக்கு, கட்சிப்பூசல், கட்சிப்போர் எல்லாம் பெருகுகின்றன. கட்சியை வளர்ப்பதே இன்றைய வேலை. மற்றக் கடமைகள் நாளைக்கே என்ற வெறி அவர்களைப் பற்றி அலைக்கின்றது. அரசியல் தொண்டு என்று தொடங்கியதை மறக்கின்றார்கள். அரசியல் செல்வாக்கு என்பதே வேட்டை ஆகின்றது. அரசியல் தொண்டர்கள் என்னும் அன்பு நிலை மாறி, அரசியல் தலைவர்கள் என்ற ஆசைநிலை எழுகின்றது. உட்பகையும் ஆரவாரமும் தாமாகவே வளர்கின்றன. இரண்டு கட்சியார்க்கும் இருந்த புறப்பகை போதாது என்று, அந்தந்தக் கட்சிகளுக்குள்ளேயே உட்பகையும் தலைவிரித்து ஆடத் தொடங்குகின்றது. பயன் என்ன? நன்மை செய்யத் தொடங்கினவர்கள், அறிந்தோ அறியாமலோ தீமை செய்து பழகுகின்றார்கள். வழி காட்டத் தொடங்கினவர்கள் எதிர்கட்சியை வெல்ல முனைகின்றார்கள். அரசியல் முன்னேற்றம் என்று தொடங்கினவர்கள் கட்சி முன்னேற்றம் என்று நின்று விடுகின்றார்கள்.

ஆட்சிமுறைகள்

வெற்றி யாருக்கு? உண்மையை உரைத்தவர்களுக்கா? உண்மையை மறைத்தவர்களுக்கா? மக்கள் பலரும் அறிவு பெற்று வாழும் நாட்டில் உண்மையை உரைத்தவர்களுக்கே வெற்றி உண்டு. அறிவுடைய மக்கள்

அரசியல் தொண்டர்கள் கூறுவதைக் கேட்பார்கள்; கேட்டுக் கண்மூடி ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆராய்ந்தே கொள்வார்கள். ஆனால் எல்லோரும் அறிவும் பொறுப்பும் உள்ள மக்களாக விளங்கும் நாள் இன்னும் வரவில்லை. அதனால் தான், குடியாட்சி என்னும் ஜனநாயகம் இன்னும் குறையுற்றே வருகின்றது. முடியாட்சியும் தடியாட்சியும் உலகம் தோன்றிய நாள்முதல் இன்றுவரையில் எங்கேனும் ஓர் இடத்திலாவது இருந்து வருகின்றன.

குடியாட்சி அமையும் தகுதி வரும் வரையில் உலகம் காத்திருக்காது. ஆகையால் இந்த இடைப்பட்ட நிலைமையில் அறிஞர் ஆட்சி வேண்டியதாக உள்ளது. அந்த அறிஞர் ஆட்சியில்தான் கட்சிப் பிணக்கும் பூசலும் போரும் மலிகின்றன. இந்தப் பிணக்கும் பூசலும் போரும் கண்டு மக்கள் சோர்ந்து நிற்கும் நிலையில் தடியாட்சி இடம் பெற்றுவிடுகின்றது. முடியாட்சியைப் போலவே தடியாட்சியும் கட்சியற்றது. தடியாட்சி உள்ள நாட்டில் ஒரு கட்சி தான் தெருவில் உலவ முடியும். மற்றொரு கட்சி சிறைக் கம்பிகளுக்கு உள்ளே அடங்கிக் கிடக்க வேண்டும்; அல்லது நாடு கடந்து வெளியேற வேண்டும்; அல்லது வாழ்வைத் துறக்க வேண்டும்.

அப்போதும் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்து அமைதியாக இருப்பது உண்டு. கட்சிப் பிணக்கும் பூசலும் இல்லாதது கண்டு தடியாட்சியே ஒரு வகையில் நல்லது என்று ஆறுதல் அடைவதும் உண்டு. குழந்தை நடை கற்கும்போது தட்டுத் தடுமாறி விழுவது இயல்பே. ஆனால் அதற்காகக் குழந்தையின் நடையைத் தடைப்படுத்துவது அறமா? தடைப்படுத்தினாலும் எத்தனை நாள் அந்தத் தடை நிற்க முடியும்? இயற்கையின் ஆணை வீண்போகுமா? அந்தக்குழந்தை எப்படியும் நடை கற்றுக் கொள்ளும்; நடந்தே தீரும். அப்படியே தடியாட்சி சிறிது காலம் இருந்தாலும், குடியாட்சி ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

அவ்வாறு குடியாட்சி ஏற்படுகின்ற வரையில் இருவகைக் கட்சி இருந்தே தீரும். இரண்டுக்கு மேற்பட்ட பல கட்சிகள் இருந்தாலும் அவற்றின் நோக்கங்களைக் கருதி இருவகையாகவே பகுத்துக் கொள்ளலாம். ஒருவகைக் கட்சியார் இன்றைய வெற்றியை பெரிதாகக் கொண்டு உண்மையை ஒத்திவைப்பார்கள். மற்றொரு வகையார், நாளைய நன்மையைக் கருதி வெற்றியை ஒத்தி வைப்பார்கள். சுருங்கக் கூறினால், ஒருவகையார் நிகழ் காலத்தில் நாட்டம் உடையவர்கள், இன்றைக்கு என்பவர்கள். மற்றொரு வகையார் எதிர் காலத்தில் நாட்டம் உடையவர்கள் நாளைக்கு என்பவர்கள்.

இருவகையாரும் நன்மையை விரும்புகின்றவர்களே. ஆனால் அதைப் பெரும் முயற்சியில்-நாடும் நாட்டத்தில் அவர்கள் வேறுபடுகின்றார்கள். இவ்வாறு இரு கட்சியாரும் வேறு வேறு உலகத்தினராக வாழ்கின்றார்கள். அந்த உலகங்களை இன்றையுலகம் என்றும் நாளையுலகம் என்றும் குறிப்பிடலாம்.

இன்று : நாளை

புளியங் கொட்டையை மண்ணில் ஊன்றி மறைத்து நீர் வார்த்த பிறகு சிறிது நேரம் கழித்ததும் முளைத்திருக்குமா என்ற அறியும் ஆவலோடு சிறுவர்கள் தோண்டிப் பார்ப்பதில்லையா? இந்தச் சிறுவர்

மனப்பான்மை வளர்ந்தவர்களுக்கும் அமைந்திருக்கின்றது; வாழ்க்கைக்கு வேண்டிய பெரிய துறைகளில் பொது மக்களுக்கு இந்த மனப்பான்மையே இருக்கின்றது. அதனால், எதற்கும் உடனே பயன் விளைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் இயற்கையமைப்பு உடனே பயன் தருவது குறைவாகவே இருக்கின்றது. தீமை செய்வன எல்லாம் உடனே பயன் தருகின்றன. நல்லன உடனே பயன் தருவது அருமை. அழிவு வேலை விரைவில் பயன் விளைக்கின்றது. ஆக்க வேலையோ நெடுங்காலம் கழித்தே பயன் விளைக்கின்றது. உண்ட உடனே நஞ்சு தன் ஆற்றலைப் புலப்படுத்துகின்றது. ஆனாலும் பாலும் பழமும் அவ்வாறு உடனே பயனைப் புலப்படுத்துவதில்லை. இயற்கை இவ்வாறு அமைந்திருப்பது வியப்பாகவே உள்ளது.

உண்மையை ஒத்திவைக்கும் இன்றைய உலகத்தாரின் முயற்சி விரைவில் பயன் தரத் தக்கதாக இருக்கின்றது; வெற்றியை ஒத்திவைக்கும் நாளையுலகத்தாரின் முயற்சியோ அவ்வாறு இல்லை. ஆகையால் மக்களின் போற்றுதல் இன்றையுலகத்தார்க்கே எளிதில் கிடைக்கின்றது. அவர்களும் மக்கள் மனப்பான்மைக்கு ஏற்றவாறு உரைக்கின்றார்கள்; மக்களும் கேட்டதைக் கேட்டவாறே கொள்கின்றார்கள்; எண்ணுவதும் ஆராய்வதும் உணர்வதும் ஆகிய முயற்சித் துன்பங்களும் இல்லை! இன்னொரு வகையாக நோக்கினால், கண்மூடி அழைத்துச் செல்கின்றவர்களுக்குச் செல்வாக்குக் கிடைக்கிறது; பெருங்கூட்டம் அவர்களை நம்பிக் கண்மூடி மந்தையாகத் திரளுகின்றது.

எந்தக் கூட்டமும் மூடிய கண்ணைத் திறந்து பார்க்கும் நிலை எய்தும்; தூங்கினவர் விழிப்பது போன்றதுதான் அது. துன்பம் வரும் போது எண்ணாதவரும் எண்ணத் தொடங்குவார்; ஆராயாதவரும் ஆராய

முற்படுவார்; உணர்வு அற்றவரும் உணரத் தலைப்படுவார். துன்பம் இவ்வளவு ஆற்றலுடைய விழிப்பு மருந்து. அரசியலில் இன்றையுலக்கதாரைக் கண்ணை மூடிப் பின்பற்றிய மக்களும் இவ்வாறுதான் விழிப்படைகின்றார்கள். வறுமையும் கொடுமையும் குறைவதுபோய் மலிந்துவிட்டால், துன்பம் எல்லாரையும் தாக்குவதாக வளர்ந்துவிட்டால், இந்த மக்கள் அவர்களைக் காரணம் இல்லாமல் ஆதரித்தது போலவே, காரணம் இல்லாமல் வெறுக்கவும் முனைகின்றார்கள். விருப்பு விரைவில் மாறுவதுபோல் வெறுப்பு விரைவில் மாறுவதில்லை. ஆகையால் இந்த வெறுப்பு வீண் போகாமல், செயல்படுகின்றது; நீடித்த வெறுப்பு, மெல்ல மெல்ல நாளையுலகத்தார்க்கு ஆதரவாக மாறுகின்றது. அப்போது அரசியலில் செல்வாக்கு உள்ளவர்கள், பெற்ற செல்வாக்கை இழந்துவிட மனம் இல்லாமல், அடக்கு முறையைக் கையாண்டு அமைதியையும் தம் செல்வாக்கையும் நிலை நிறுத்த முயல்வார்கள். குடியாட்சியாகத் தொடங்கிய முயற்சி மெல்ல மெல்லத் தடியாட்சியாக மாறும் நிலைமை இது.

உலக வரலாற்றில் எந்தப் பகுதியை நோக்கினாலும் இந்த உண்மை விளங்குகின்றது. அரசியல் காரணங்களால் மக்கள் துன்பம் உற்ற காலங்களில், அவர்களின் துன்பத்திற்கு காரணமாக இருந்தவர்கள் தந்திரத்தைக் கையாண்ட அரசியல் தலைவர்களே. உண்மை வழியை - நிலையான நன்மை தரும் வழியை - நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம், இன்று எப்படியாவது வெற்றி பெற்றே தீர வேண்டும் என்று தந்திரத்தைக் கையாண்ட அரசியல் தலைவர்களே, தந்திரம் பலிக்காதபடி பொது மக்கள் விழித்துக் கொண்ட போதுதான் இவர்கள் தடியாட்சியில் இறங்குகின்றார்கள். இன்று வெற்றி கிடைக்காவிட்டாலும் சரி, நிலையான நன்மைக்குப் பாடுபடுவதே நம் கடமை என்று தொண்டு ஆற்றிய தலைவர்களால் உலகம் அல்லல் பட்டதுமில்லை; படுவதுமில்லை.

இங்கும் : எங்கும்

அரசியல் வாழ்க்கையில் ஒரு பகுதியைக் கண்டோம். இன்றையுலகம் என்றும் நாளையுலகம் என்றும் நோக்கி நன்மையை ஒத்தி வைத்தவர்களையும் வெற்றியை ஒத்தி வைத்தவர்களையும் கண்டோம். காலத்தால் குறுகிய நோக்கமும் காலத்தால் பரந்த நோக்கமும் கொள்வதால் வரும் பாகுபாடுகள் இவை. இனி மற்றொரு பகுதியைக் காணலாம். அதாவது இடத்தால் குறுகிய

நோக்கமும் இடத்தால் பரந்த நோக்கமும் கொண்டு அரசியலில் முயற்சி செய்கின்றவர்களைப் பற்றிய பகுதி.

ஒரு தெருவில் இருபது முப்பது சிறுவர்கள் சேர்ந்து விளையாடுவதாக வைத்துக் கொள்வோம். அங்கே ஒரு வீட்டின் திண்ணையில் பொழுதுபோக்காக ஒருவர் உட்கார்ந்திருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அந்தச் சிறுவர்களின் விளையாட்டில் வழக்கம்போல் ஏதாவது சிறு குழப்பம் நேர்கின்றது. அதைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்துள்ள அந்தத் திண்ணையார் சிறுவர்களை நோக்கி "போகட்டும். அந்தக் குழப்பத்தை விட்டு விடுங்கள். முன்போலவே ஒற்றுமையாக விளையாடுங்கள்", என்று சொல்கின்றார். சிறுவர்களோ இந்த அறிவுரையைப் பொருட்படுத்தவில்லை. "இந்த ஆள் சும்மா இருக்காமல் அறிவு சொல்ல வந்து விட்டாரே", என்று எள்ளி நகையாடுகின்றார்கள். திண்ணையார் பொறுமையோடு கொஞ்ச நேரம் இருந்த பிறகு, அவர்களில் நான்கு பேரைத் தனியே அழைத்து, "நீங்கள் செய்ததுதான் சரி அவர்கள் தான் தப்பு செய்தார்கள். அவர்களோடு சேர வேண்டாம். நீங்கள் தனியே பிரிந்து விளையாடுங்கள்", என்று சொல்கின்றார். உடனே அந்தச் சிறுவர்கள் உள்ளம் குளிர்ந்து அவர் சொன்னபடி கேட்டு நடக்கத் தொடங்குகின்றார்கள்; பத்துப் பதினைந்து பேர் தனியே பிரிந்து மற்றவர்கள் மேல் வெறுப்பும் பகையும் பொறாமையும் காட்டி விளையாடுகின்றார்கள். திண்ணையாரைத் தலைவராகப் மதித்துப் போற்றுகின்றார்கள். வழிப்போக்கர் ஒருவர் அங்குச் சிறிது நேரம் நிற்கின்றார். எதிர்க்கட்சியாக உள்ள மற்றப் பிள்ளைகள் அவரை வலிய அழைக்கின்றார்கள். அவரும் போகின்றார்; அவர்கள் கொடுக்கும் தலைமைப் பதவியைப் பெறுகின்றார்; திண்ணையாருக்கு நிகரான தலைவராக விளங்குகின்றார்.

இது சிறுவர்களின் மனப்பான்மை மட்டும் அல்ல; வளர்ந்த மக்களுக்கும் இந்த மனப்பான்மை இருக்கின்றது. வேறுபாடு கருதாத ஒற்றுமையை அறிவுறுத்தினால் கேட்பார் எவரும் இல்லை. தனித்தனியே பிரிந்த பிரிவுகளை உறுதிப்படுத்தி அவைகளுக்கு ஏற்றபடி தூபமிட்டால் தலைமைப் பதவி உண்டு; மதிப்பு உண்டு; போற்றுதல் உண்டு.

நம் இனம், நம் வகுப்பு, நம் நிறம், நம் மதம், நம் நாடு என்று உலகத்தில் பிரிந்துள்ள பிரிவுகள் எல்லாம் இப்படி ஏற்பட்டவைகளே. இவ்வாறு இடத்தால் வரையறைப்படுத்திக் கொண்டு, ஒரு வகையாரோடு நின்று தொண்டு செய்தால், வெற்றி பெற வழி இருக்கின்றது. இவ்வாறு குறுகிய

நோக்கத்தோடு பேசும் பேச்சும் செய்யும் செயலும் உடனே பயன்படுகின்றன. பரந்த நோக்கத்தோடு எல்லோரும் வாழ வேண்டும் என்றும், விட்டுக் கொடுத்து வாழவேண்டும் என்றும், நம் உரிமையைக் காத்துக் கொண்டே பிறர்க்கும் உதவவேண்டும் என்றும் பேசினாலும், தொண்டு செய்தாலும் கேட்பாரும் இல்லை; கொள்வாரும் இல்லை.

இந்த நிலைமையில் அரசியல் நின்று விட்டாலும் கவலை இல்லை. முன்பே பகையையும் பிரிவையும் வளர்த்த அவர்களே தந்திரம் உள்ளவர்களாய் இப்போதும் அரசியலைக் கெடுக்க முன்வருகிறார்கள். பகையும் பிரிவும் வெறுப்பும் மெல்ல மெல்ல மறைந்து போகும் வேளையில் இவர்கள் மக்களின் மனப்பான்மைக்கு ஏற்றபடி பேசி,

செயலளவில் தந்நலம் வளர்த்துக் கொள்கின்றார்கள். மக்கள் இனம், வகுப்பு, நிறம், மதம், நாடு என்ற காரணங்களை வைத்துப் பிரிவுபட்டு வாழ்கின்றார்கள். அவ்வாறு வாழும்போது பரந்த நோக்கம் உடையவர்களுக்கும் இடம் இருப்பதில்லை. ஆனால், இனம், வகுப்பு, நிறம், மதம், நாடு இவற்றின் பெயரால் விதைத்த பகைவித்துக்கள் வீண்போவதில்லை. அவைகள் கொலையாய், கொள்ளையாய், குழப்பமாய், போராய் மூளுகின்றன. அப்பொழுது கொலை கொள்ளை குழப்பம் போர் முதலியவற்றிற்கு இரையாகி அல்லல்படும் மக்கள், மனம் மாறி ஒற்றுமையையும் அன்பையும் வற்புறுத்தும் அரசியல் தலைவர்கள் சொல்லும் வழிகளைக் கேட்டு நடக்கின்றார்கள்; கேட்டு நடக்க முயல்கின்றார்கள். இந்த நிலைமையில் பகையைப் பெருக்கிவந்த பழைய தந்திரக்காரர்கள் அரசியலில் புகாமல் இருந்தால், உலகத்தில் அமைதி வளரும். ஆனால் அவர்கள் வாளா இருக்க முடியுமா? அப்போதுதான் வாய்ப்புக் கிடைத்தது என்று உணர்ந்து விழிப்போடு எழுகிறார்கள். உண்மையை மறைத்து மக்களின் மனப்பான்மைக்கு ஏற்றபடி பேசி நடிக்கின்றார்கள். "ஆம். ஆம் நாம் எல்லோரும் ஒரே கடவுளின் மக்கள். நமக்குள் எந்த வேற்றுமையும் புகக்கூடாது. வேற்றுமைகளை வைத்துக்கொண்டு நாம் பட்டது போதும். இனியாவது எல்லோரும் ஒன்று என்பதை மறக்காமல் வாழ்க்கை நடத்த வேண்டும்; இதுவரையில் நமக்குள் இருந்த பகையை மறந்துவிட வேண்டும். இது நோன்பாகக் கொள்ள வேண்டும்." என்றெல்லாம் பேசுகின்றார்கள். பொதுமக்கள் இந்தப் பேச்சை எல்லாம் கேட்டு வியப்பு அடைகின்றார்கள். "நேற்று வரையில் நம்மை எல்லாம் பிரிந்திருக்கச் செய்து பகையை வளர்த்த இவர்களே இப்படிப் பேசுகின்றார்களே! எவ்வளவு மனமாற்றம்!" என்று ஏமாந்த மக்களாய் எண்ணி மயங்குகின்றார்கள். பரந்த

நோக்கத்தோடு வகுப்பு, இனம், நிறம், மதம், நாடு என்னும் பற்றுக்களை எல்லாம் கடந்து வாழ வேண்டும் என்று நெடுங்காலமாக உண்மையாகவே வழிகாட்டி வந்தவர்களையும் மக்கள் மறந்து விடுகின்றார்கள். நேற்று வரையில் பகையையும் பிரிவையும் வளர்த்துவந்து, இன்று உண்மை உணர்ந்தது போல் நடிக்கும் தந்திரக்காரர்களின் வலையில் மயங்கி விழுந்து மறுபடியும் அவர்களுக்கே செல்வாக்கைக் கொடுத்து அரசியலை ஒப்படைக்கின்றார்கள். அரசியலில் பொறுப்புக் கிடைத்ததும் தந்திரக்காரர்கள் பழைய அழிவு வேலையையே புதிய போர்வையில் செய்ய முனைகின்றார்கள். முன்னே சொன்னதும் செய்ததும் ஒன்றாக இருந்தன. இப்போது சொல்வதெல்லாம் பெரிய பெரிய உண்மைகள்; செய்வதெல்லாம் சிறு சிறு தன்னலச் செயல்கள்; பேசுவதெல்லாம் உயர்ந்த கொள்கைகள்; அமைப்பதெல்லாம் தாமும் தம் குடும்பங்களும் மட்டும் வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகள். பரந்த நோக்கம் பேச்சளவில்; குறுகிய நோக்கமே செயலளவில்; அதனால் பொதுமக்கள் மீண்டும் ஏமாற்றம் அடைகின்றார்கள்.

இந்த நிலை வந்த பிறகு மற்றவர்கள் உற்றுப் பார்த்து உணர்கின்றார்கள். பரந்த நோக்கம் என்ற பேச்சையே வெறுக்கின்றார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தொடரும் கசப்பாகின்றது. வகுப்பு, இனம், நிறம், மதம், நாடு என்ற பிரிவினைகளே இயற்கை என்றும், இந்தப் பிரிவுகளையும் பகையுணர்ச்சிகளையும் வளர்ப்பதே கடமை என்றும் மக்களுக்கு எடுத்துரைக்கின்றார்கள். ஒற்றுமை, பரந்த நோக்கம் என்ற பேச்சுக்களை நம்பிக் கெட்டோமே என்ற ஏமாற்ற உணர்ச்சியால், மக்கள் பிரிவினைகளை வளர்ப்பதே.

அறம் என்று உணர்ந்து எழுச்சி பெறுகின்றார்கள். ஆகவே குறுகிய நோக்கமும் பகை பிரிவுகளும் மறுபடியும் வளர்கின்றன; முன் மண்சுவர்களால் பிரிவினைகள்; இப்போது இரும்புச் சுவர்களால் பிரிவினைகள். இவ்வளவுக்கும் காரணம் தந்திரக்காரர்களின் தன்னலச் செயலே ஆகும்.

உடனே பெறும் பயன்

குறுகிய நோக்கம் உடையவர்கள் செய்யும் முயற்சியால் உடனே பயன் விளையும். களாக்கனி உடனே கிடைக்கும்; பலாப்பழம் கிடைக்க வேண்டுமானால் காத்திருக்க வேண்டும். நாளை வரும் பலாப்பழத்தைவிட இன்று பெறும் களாக்கனியே மேல் என்பதுதான் பொதுமக்களின் எண்ணம். ஆகையால் குடும்பமும் இனமும் நாடும் குறுகிய நோக்கத்தாரின் முயற்சியைப்

போற்றும்; துணை நிற்கும்; அவர்களுக்குப் பெருமையும் கொடுக்கும்; தலைமையும் நல்கும். இந்தப் பெருமையும் தலைமையும் ஒருவனுக்குக் கிடைத்தால் அவன் தன் நோக்கத்தின் குறையை உணராமல் இறுமாந்திருப்பான். ஆனால் உண்மை என்ன? அது களாக்கனிதான்; சிறு பயன்தான்; இன்று இன்பம் போல் காட்டி நாளை வரும் குழப்பம்தான். நன்மை என்பது ஏமாற்றமே ஆகித் தீமை என்பதே மெய்ப்பயன் ஆகும். இதற்குச் சான்றுகள் எங்கெங்கோ தேட வேண்டியதில்லை. மண்ணாசை கொண்டு மற்ற நாடுகளை வென்று அடக்கப் பெரும்போர்களை நடத்திய அரசியல் தலைவர்கள் முதலில் கொண்ட ஊக்கமும் பிறகு உற்ற அழிவும் சான்று கூறுகின்றன; அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில்

தொடக்கத்தில் இருந்த அமைதியும் பிறகு மலிந்த குழப்பமும் சான்று பகர்கின்றன. பெற்றோரின் மருட்டலும் உருட்டலும் அடியும் உதையும் முதலில் குழந்தையை அடக்கி அமைதியை நிலைநாட்டுகின்றன. ஆனால் அந்தக் குழந்தை வளர்வதில்லையா? வளர்ந்து கையும் காலும் பயன்படுத்திக் கற்றுக் கொண்ட பிறகு, அந்தக் குடும்பம் என்ன ஆகின்றது? அடியும் உதையும் அவனிடமிருந்தே ஆற்றலோடு புறப்படவில்லையா? முதலில் ஆலவிதை; பிறகு ஆலமரந்தான்.

தன் குடும்பம் வாழ உடனே வழிகாண வேண்டும் என்பது தான் திருடன் நோக்கம். திருடிய பொருளால் இன்று பெறும் நன்மையே பெரியது என்று அவன் கருதுகிறான். திருடாமல் பட்டினியிருந்து பசித்துன்பத்தால் வாடினாலும் நாளைக்கு நல்வழியில் உழைத்து உயிர் வாழலாம் என்று அவன் நாடவில்லை. பொய்யனும் புறங்கூறுவோனும் அவ்வாறே. உண்மையை இன்று சொல்லி நாளைக்கு நல்ல பெயரும் நல்ல வாழ்வும் பெறுவதற்குப் பொறுமை வேண்டும்; அதைவிட இன்று பொய்யே சொல்லி வாழும் வாழ்வையே பொய்யன் மதிக்கிறான்; அதனாலேயே பொய் சொல்லத் துணிகின்றான். புறங்கூறுவோனும் அப்படியே உடனே பெறும் நன்மையை நாடிப் புறங்கூறுகின்றான். பகைவனை அன்போடு நோக்கிப் பல தீங்கும் பொறுத்து இன்று இடர்ப்பட்டு நாளைக்கு நலமுறலாம் என்று எண்ணுவது அருமை அல்லவா? பகைவனுக்கு உடனுக்குடன் இடரிழைத்து வாய்ப்புக் கிடைத்த போது கொலை முதலியனவும் செய்வதால் உடனே ஆறுதல் கிடைப்பதாகத் தோன்றுகிறது; அதனால்தான் பொறுமையற்றவர்கள் தீயராய்க் கொடியராய்க் கொலைஞராய் மாறுகின்றார்கள். ஆனால் உலகம் இவர்களைப் பழிக்கின்றது. துன்புறுத்துகின்றது; சட்டம் இயற்றித் தண்டனை விதிக்கின்றது.

திருடரையும் பொய்யரையும் கொலைஞரையும் ஒறுத்துத் துன்புறுத்தும் இதே உலகம் பெருங்கொள்ளையும் பெரும்புளுகும் பெருங்கொலையும் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ கொண்டு நடத்தும் இனத் தலைவர்களையும் நாட்டுத் தலைவர்களையும் என்ன செய்கின்றது? முன்னவரைத் தண்டிக்கும் உலகம் பின்னவரைப் போற்றுகின்றது. ஒரு வகையார்க்குப் பழி; அதே செயலைப் பெரிய அளவில் செய்யும் மற்றொரு வகையார்க்குப் புகழ். ஒரு வகையார்க்குச் சட்டப்படி பெருந்துன்பம். அவர்களின் தமையன்மாராகிய மற்றொரு வகையார்க்குப் பெரிய நன்மைகள். என்ன தலைகீழ் அமைப்பு!

காரணம் என்ன? முன்னவர் எளிமையும் பின்னவர் அருமையுமே காரணம் என்று கூறலாம். விளங்கக் கூறினால், எளிய திருடர், எளிய பொய்யர், எளிய கொலைஞர் ஆகிய இவர்கள் எளிய முறையில் உலகத்தாரின் அறிவுக்கு எட்டுமாறு திருடுகின்றார்கள். பொய்க்கின்றார்கள், சொல்கின்றார்கள். இனம், நாடு என்னும் காரணங்களால் புகழ் பெற்று விளங்கும் பெருந்திருடர், பெரும் பொய்யர், பெருங்கொலைஞர் ஆகிய இவர்களோ உலகத்தாரின் அறிவுக்கு எட்டாத முறையில் திருட்டும் பொய்யும் கொலையும் மேற்கொள்கின்றார்கள். அந்தச் செயல்களுக்கும் வேறு வேறு பெயர்களை வைத்து வழங்கி வேறுபடுத்துகின்றார்கள். திருடு என்று சொல்லாமல் அரசியல் தந்திரம் என்கின்றார்கள்; வெறும் பெயர்கள் உண்மையை மறைத்து வருகின்றன.

எத்தனை நாள் இந்த மறைப்பு நீடிக்க முடியும்? உலகம் உணர்ந்து விழித்தெழும் நாள் வரும். அன்று ஏமாற்றத் தெரியாதவர்கள் உலகத்தின் கையால் ஒதுக்கப்படுகின்றார்கள் என்பது தெளிவாகும்; ஏமாற்றத் தெரிந்தவர்கள் உலகத்தின் தலையால் தாங்கப்படுகின்றார்கள் என்பதும் தெளிவாகும்.

குற்றம் இன்னது என்று ஆராய்ந்தால், குறுகிய நோக்கம் உடையவர்களுக்குத் தலைமைப் பொறுப்பைத் தந்த குற்றம் உலகத்தைச் சாரும். பொது மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு தம் நிலையை உயர்த்திக்கொண்ட குற்றம் தலைவர்களைச் சாரும்.

அருள் நெஞ்சத்தால் பண்பட்ட தலைவர்கள் ஒரு போதும் இவ்வாறு செய்யமாட்டார்கள். மற்ற நாடுகளின் துன்பத்திற்காகவும் குழைந்து உருகித் தொண்டு செய்ய முற்படுவார்கள். இது பிறந்த மண், இது புகுந்த மண், இது

பிற மண் என்று கருதாமல் பள்ளம் உள்ள இடமெல்லாம் பாய்ந்து ஓடும் நீர்போல், அவர்களின் நெஞ்சம் குறைகண்ட இடத்தில் எல்லாம் பாய்ந்து சென்று தொண்டு செய்ய விரும்பும். களவு, பொய், கொலை என்பனவற்றை ஏமாறவோ, ஏமாற்றவோ, பழம் பெயராலோ புதுப் பெயராலோ செய்து உடனே வெற்றி பெற வேண்டும் என்னும் குறுகிய நோக்கம் அவர்களிடம் இல்லை.

இன்றைய உலகில் உதவி குறைந்துபோய் உறிஞ்சல் மிகுந்து வருகின்றது. நேர்மை குறைந்து போய்த் தந்திரம் வளர்ந்து வருகின்றது. அமைதி அற்றுப்போய்ப் போர்த்தொல்லை நிலவி வருகின்றது. நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம், குடும்பத்திற்குச் குடும்பம் போர்க்கோலம் தாங்குவதும் வஞ்சம் சூழ்வதும் உறிஞ்சலை மேற்கொள்வதும் இயற்கையாகிவிட்டன. இந்த நிலைமையை மாற்ற எத்தனை அரசியல் நூல்கள் பெருகினாலும் பயன் இருக்காது ; எவ்வளவு அறிஞர்கள் பெருகினாலும் பயன் இருக்காது; எத்தனை போர்களுக்கு முடிவு கண்டாலும் பயன் விளையாது; எத்தனை அமைதி உடன்படிக்கை மாநாடுகள் கூடினாலும் பயன் விளையாது.

## 2. அறம் வாழுமா?

மக்கள் குறையா?

குறுகிய நோக்கம் உடையவர்களின் தன்னலத்துக்கு உலகம் இரையாகாமல் பரந்த நோக்கம் உடையவர்களின் தொண்டுக்கு இடம் தந்து தற்காப்புச் செய்து கொள்ளும் நல்ல நிலை வரவேண்டும். இன்னொரு வகையாக நோக்கினால், குறுகிய நோக்கம் உடையவர்களின் தலைமையை ஒரு பக்கம் ஒதுக்கும் வல்லமை மக்களுக்கு வர வேண்டும்; அருள் நெஞ்சம் பெற்றவர்கள் காட்டும் வழியில் நடக்கும் ஆற்றல் மக்களுக்கு வரவேண்டும்.

இன்று மக்களின் நிலைமை அப்படிப்பட்டதாக இல்லை. குற்றம் மக்கள் மேல் இல்லை. மக்கள் வாழ்க்கை அமைந்த அமைப்பிலேயே உள்ளது. நோயாளியைப் பார்த்து "எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உன் நோயைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. உன் உடலைப் பற்றிய எண்ணமே வரக்கூடாது. இந்த நூலைப்படித்துக் கொண்டிரு. அல்லது அந்தத் சோலையைப் பார்த்துக் கொண்டிரு. அதில் கிளிகளும் புறாக்களும் பறந்து

பறந்து விளையாடும் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிரு. குயில்களும் பூவைகளும் பாடும் பாட்டுகளைக் கேட்டு கொண்டிரு", என்று அறிவுறுத்தினால் பயன் உண்டாகுமா? நோயாளியின் மனம் நூலில் செல்லுமா? கிளியும் புறாவும் ஆடும் ஆடல் அவனுடைய கண்ணைக் கவருமா? குயிலும் பூவையும் பாடும் பாடல் அவனுடைய செவியை இன்புறுத்துமா? வயிற்றில் உள்ள வேதனையும் நாடி நரம்புகளில் உள்ள அரிப்பும் எரிப்பும் அவனுடைய மனத்தை அடிக்கடி வருத்திக் கொண்டிருக்கும் அல்லவா? அவன் தன்னை மறந்தாலும் தன் நோயை மறக்க முடியாதே! நூலையும் சோலையையும் மறந்து உடலையும் உடல் உற்ற வேதனையையுமே நினைத்துக் கொண்டிருப்பான் அல்லவா? "மகிழ்ச்சியாக இரு. உடலைப்பற்றி எண்ணாதே", என்ற உபதேசம் அவனுக்கு ஏற்குமா? ஏற்காதது அவன் குறையா? சொன்ன மருத்துவரின் குறையா? அவனுடைய உடலில் உள்ள நோயின் குறையே அல்லவா?

இப்படிப்பட்ட நோயாளியைச் சீர்ப்படுத்துவது அருமை; ஆனால் கெடுப்பதோ எளிது. மயக்க மருந்தைக் கையில் எடுத்துக் கொண்டு போய், "ஐயா, வாயைத் திறந்து இதை விழுங்கிவிடு. அரை நாழிகையில் இதனுடைய பயனைப் பார். உன்னுடைய நோயே உனக்குத் தெரியாது. தூக்கம் வரும். தூங்கி எழுந்த பிறகு உடல் நன்றாக இருக்கும், என்று சொல்லி, அந்த மருந்தைக் கொடுத்தால், அந்த நோயாளி முதலில் தயங்கினாலும், ஒருமுறை உட்கொண்டு பயன்கண்ட பிறகு, அவரையும் அவர் மருந்தையும் மறக்கவே மாட்டான். மருத்துவ அறிஞரை விட மயக்கப்பொருள் விற்பவரே வல்லவர் என்று மதிப்பான்; மருத்துவரின் பத்திய முறையைவிட இந்த மயக்கப் பொருளே சிறந்தது என்று நம்பிவிடுவான். அடுத்த முறையில் நாடி நரம்புகளில் நோயின் தொடக்கம் காணும் போதே, அவரை நாடுவான்; அவர் இல்லாவிட்டாலும் அந்த மயக்கப்பொருளை நாடுவான். நாளடைவில், உணவை மறந்தாலும் தொழிலை மறந்தாலும் மறக்க முடியாத அவ்வளவு வேட்கை அந்த மயக்கப் பொருள்மேல் வளர்ந்துவிடும். இப்படித்தான், அபினியும் கஞ்சாவும் மக்கள் வாழ்க்கையில் இடம் பெற்றன; கள்ளும் சாராயமும் இடம் பெற்ற கதையும் உண்மையில் இதுதான். மிக்க உழைப்பாலோ, களைப்பாலோ, கவலையாலோ நாடி நரம்புகள் சோர்வடையும் நிலையும் நோய் போன்றதுதான். அந்த நிலையில் பலர் நேரான சீரான முறைகளைக் கையாளாமல் புலன்களை மயக்கி நோயும் சோர்வும் உணராதபடி செய்யும் அபினி, கஞ்சா, சாராயம், கள் ஆகியவற்றை நாடி நாடிப் பழகிப் பழகி நாளடைவில் அவற்றிற்கு அடிமைகளாக மாறிவிடுகின்றார்கள்.

இத்தகைய குடிகாரர் என்ன செய்கின்றார்கள்? உடல் நலம் கருதி நல்வழி எடுத்துச் சொல்லும் அறிஞர் சொல்லைக் கேட்காமல், மயக்கப் பொருள் விற்கும் கடைக்காரரையே நாடுகின்றார்கள். அறிஞர், சொல்லுவது அரிய வழி என்றும், தம்மால் முடியாதது என்றும் அஞ்சுகின்றார்கள். ஆனால் கடைக்காரரிடம் கைகண்ட மருந்து கிடைப்பதாக நம்புகின்றார்கள்; நாடுகின்றார்கள்.

அரசியலைப் பொறுத்தவரையில் இன்று பொது மக்கள் குடிகாரரின் நிலையிலே இருக்கின்றார்கள். தங்களுக்கு உள்ள குறைகளைத் தீரக்களைவதற்கு உரிய வழிகளை நாடி நடக்கும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை. பரந்த நோக்கம் உடைய அறிஞர் காட்டும் வழியில் நடப்பது அருமை என்றும் தொல்லை என்றும் உணர்ந்து ஒதுங்குகின்றார்கள். குறுகிய நோக்கம் உடையவர்கள் அழைப்பதற்கு முன்னே தாமே ஓடிப்போய் அவர்களைத் தலைவர்களாக்கிப் புகழ்ந்து ஏவல் கேட்கக் காத்து நிற்கின்றார்கள்; அவர்கள் சொல்லியாவாரெல்லாம் நடக்கின்றார்கள்; அவர்கள் சொல்லும் வழிகள் எல்லாம் எளிய வழிகள் என்றும் உடனே பயன் அளிக்கும் வழிகள் என்றும் உணர்ந்து போற்றுகின்றார்கள்.

சில வேளைகளில் குடிகாரர் அறிஞர்களை வெறுப்பதும் உண்டு; கள்ளின் தீங்கை எடுத்துச் சொல்லும் போது சினம் கொள்வதும் உண்டு; எதிர்ப்பதும் உண்டு. அரசியலில் பொதுமக்களும் பரந்த நோக்கம் உடைய நல்லறிஞரை வெறுப்பதும், சினப்பதும், எதிர்ப்பதும் உண்டு.

பொதுமக்களைக் குறை கூறுவதால் பயனில்லை. அவர்கள் அறியாமை உடையவர்கள். அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு அரசியலில் முன்னேறும் தன்னலத்தாரைக் குறை கூறலாம். ஆனால் அவர்களுடைய தன்னலத்திற்கும் காரணம் இருக்கின்றது. வாழ்க்கைப் போராட்டம் அவர்களை மட்டும் விட்டுவிடுமா? எப்படியாவது வாழ்க்கைப் போட்டியில் வெற்றிபெற வேண்டுமென்று தவறான வழியிலும் சென்று பொதுமக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு தலைமை பெறுவதற்கு முயல்கின்றார்கள். அபினி முதலிய மயக்கப் பொருள்களை விற்கும் கடைக்காரர்களைக் குறைகூறிப் பயன் என்ன? எப்படியாவது வாழ வேண்டும், வாழ்ந்து முன்னேற வேண்டும். நிலையும் புகழும் பெற வேண்டும். அதற்காகப் பொருள் வேண்டும். பொருள் சேர்ந்துவிட்டால் அறிஞர்களும் நம்மைப் புகழ்வார்கள். ஆகையால் எந்தத் தொழில் செய்தாவது பொருள் திரட்ட வேண்டும் என்று பல நாள் பலவாறு

எண்ணித்தான் சிலர் அபினிக் கடை கள்ளுக்கடை முதலிய கடைகளை வைத்து வாணிகம் செய்கின்றார்கள். ஆகவே, செய்ய வேண்டிய கடமை என்ன? கள்ளுக்கடை முதலியவற்றை மூடுவதா? கள் வாணிகம் செய்வோரைத் தடுப்பதா? இரண்டும் கருதியவாறு வெற்றி பெறுவது அருமையே. கள்ளச் சாராயம் உண்டாக்குவது கள்ளச் சாராயம் விற்பது இவற்றைத் தடுக்க வேண்டிய வேறு கடமை வந்து சேரும். அரசியலில் பொதுமக்கள் தவறான வழியில் போகாதபடி தடையுத்தரவுகள் பிறப்பிக்கலாம்; இரண்டும் செய்த பிறகும் இடையூறுகள் மலிந்து கொண்டே போகும். எதிர்க்கட்சி யிலிருக்கின்றவர்கள் ஆளும் கட்சியில் வந்து சேர்வார்கள்; நேர்முகமான எதிர்ப்புக்கள் குறைந்து மறைமுகமான இடையூறுகள் பெருகும்.

## கவலையும் சோர்வும்

ஆகவே, உண்மையாகச் செய்யத்தக்க வழி என்ன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏன் சிலர் கள்ளுக்கடை முதலியவைகளை நடத்த முன்வருகின்றார்கள் என்று அதன் காரணத்தையும் காண வேண்டும். அந்தக் கடைகளில் குடிப்பதற்காகப் பலர் சென்றுவரக் காரணம் என்ன என்று அதன் அடிப்படையைக் காண வேண்டும். மக்கள் அறிவுடையவர்களாக விளங்குமாறு கல்வியறிவைப் பரப்புதல் ஒருவழி என்று தோன்றலாம். ஆனால் கற்றவர்களிடையே கால்பகுதியினர் குடிகாரரே என்னும் உண்மையை ஆராய்ந்தால், கல்லாதவரிடையே குடிகாரர் தொகை மிகுதி என்று சொல்லமுடியாது. ஆகையால் கல்வியறிவால் மயக்கப்பொருள் நாடும் வேட்கை குறைந்துவிடும் என்று சொல்ல முடியாது. கல்வியறிவால் அரசியல் அறிவு வளர்ந்தால் பொதுமக்கள் திருந்திவிடுவார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது. அரசியலிலும் கல்லாத பேர்களே நல்லவர்கள் என்னும் நிலைமை இருந்து வருகின்றது. நூற்றுக்கு நூறுபேர் கற்றவர்களாக உள்ள நாடுகளிலும் அரசியலில் கயமை இருந்து வருகிறது அல்லவா?

நோயும் சோர்வும் குடிகொள்ளாதபடி நலமும் ஊக்கமும் குன்றாதபடி உடலைக் காக்கும் வாய்ப்பும் ஆற்றலும் மக்களுக்கு உண்டாகுமாறு செய்வதாக வைத்துக் கொள்வோம். இப்போது பலருக்கு வாய்ப்பு இல்லை; சிலருக்கு வாய்ப்பு இருந்தும் ஆற்றல் இல்லை. அதாவது, நலம் காக்கும் உணவு உண்ண வேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் இருந்தும், வறுமைத் தொல்லையால், அப்படிப்பட்ட நல்ல உணவு கிட்டுவதில்லை. அந்த நல்ல உணவு சிலருக்குக் கிடைத்தும், அதைப் பயன்படுத்தி உடலைக்காக்கும் ஆற்றல் சிலருக்கு இல்லை. சோர்வு உண்டாகாமல் வாழ வேண்டும் என்ற

எண்ணம் பலருக்கு இருந்தும், உழைப்பைக் குறைத்துக்கொள்ள முடியவில்லை; கலையின்பத்தைப் பெற முடியவில்லை. உழைப்பைக் குறைத்தலும் கலைச்செல்வம் நுகர்தலும் சோர்வு போக்குவதற்குக் கைகண்ட மருந்துகள். அளவோடு உழைத்துவிட்டு இயற்கையின் எழிலில் தோயவல்லவர்க்கு உடல் சோர்வுக்கும் இடம் இல்லை; உள்ளச் சோர்வுக்கும் இடம் இல்லை. உழைப்பை அளவுபடுத்திச் செய்து முடித்தபின் இசைக்கலையில் மூழ்கியிருக்க வல்லவர்களையும் இந்த இருவகைச் சோர்வும் அணுகுவதில்லை. ஓரளவாக உழைத்துக் காவிய உலகத்தில் களிக்கவல்லவர்களுக்கும் சோர்வு என்பது இருப்பதில்லை. மற்றக் கலைகளும் அவ்வாறே பயன்பட வல்லவை. ஆனால், உழைப்பை அளவுபடுத்தி வைத்திருப்பது எங்கே? நாளெல்லாம் உழைத்தும் குடும்பத்திற்கு அரைவயிற்றுக் கஞ்சிக்குக் காசு கொண்டுபோக முடியாத ஏழைகளின் வாழ்க்கையில் உழைப்பை அளவு படுத்துவது முடியுமா? மற்றவர்களுடைய வாழ்க்கையில் உழைப்பது ஒரு பங்காக இருந்தாலும், அதை நினைத்து வீட்டுத் திண்ணையிலோ கடை முனையிலோ இருந்து இருந்து கவலைப்பட்டு அடையும் சோர்வு மிகுதியாக இருக்கின்றது. இவ்வாறு பெரும்பாலோர் வாழ்க்கையில் உழைப்பும், உழைக்கும் தொழிலைப் பற்றிய கவலையும் பெருகியிருப்பதால், சோர்வைக் குறைக்க வழி உண்டோ? தவிர, கலையுலகமோ பெரும்பாலும் ஏழைகளுக்கு எட்டாத உலகமாக இருக்கிறது. கலையின்பத்தில் மூழ்க ஓய்வுதான் இல்லை என்றால், வாய்ப்பும் இல்லாமல் வாட நேர்கின்றது. பெரும்பாலோர் நிலை இது. மற்றவர்களுக்கோ உழைப்பே இல்லாத காரணத்தாலும், உழைப்புக் குறைந்த காரணத்தாலும், வாழ்க்கையே செயற்கையாக மாறி விடுகின்றது. அழகும் இழந்து சோர்வு மலிந்த உடலோடு வாழ்கின்றார்கள். பக்கத்தில் வானொலிக் கருவி இசை முழங்கும்; இசைத் தட்டு ஒருபக்கம் காத்திருக்கும். குயிலும் பூவையும் பாடும் சோலை ஒரு பக்கம் அழகை அள்ளி வீசும். நீல வானத்தின் கோலக் காட்சிகள் மாறிமாறிக் கவர்ச்சியூட்ட முயலும். ஆனாலும் இந்த உழைப்பில்லாத மக்களின் நாடி நரம்புகள் உயர்ந்த குடிவகைகளை நாடி ஏங்கிக் கொண்டிருக்கும். உழைப்புக் குறைந்த வாழ்க்கையால், அவர்களின் நாடி நரம்புகள் ஓட்டமும் உயிர்த்தன்மையும் குறைந்து தேங்கிச் சாய்க்கடைகளாய் அழுகிக்கொண்டிருக்கும். ஆகையால் இயற்கையான ஆற்றல் இழந்து செயற்கை உணர்ச்சி ஊட்டும் குடிவகைகளை வரவேற்கும் நிலையிலிருக்கும்.

இவ்வாறு நோக்கினால், உலக வாழ்க்கையை நன்றாக நடத்துவதற்கு இன்றியமையாத வாய்ப்பு, பலருக்கு இல்லை; வாய்ப்பு இருந்தும் ஆற்றல் இல்லாதவர் சிலர்.

ஊக்கம் குன்றிச் சோர்வு மிகுந்த பிறகு பழைய நிலையை அடைவது எளிய முயற்சியில் முடியுமா? உண்மையில் அழிவு வேலையைவிட ஆக்க வேலைக்கு முயற்சி மிகுதியாக வேண்டும் அல்லவா? ஆகவே, ஆக்க வேலையை மெல்ல மெல்லச் செய்து பண்படுத்தும் முறையை யார் நம்புவார்கள்? உடனே ஏதாவது ஒரு குறுக்கு வழியால் பயனை அடைய முடியுமா என்று மனம் விரும்புவது இயற்கை. அந்தப் பயன் நீடிக்குமா, தீமை தருமா என்பதை ஆராய்ந்து சீர்தூக்கும் பொறுமை அற்ற நேரம் பார்த்துப் பலருடைய வாழ்க்கையில் மயக்கப் பொருள் இடம் பெறுகின்றது; நாளடைவில் செல்வாக்கும் பெறுகின்றது. பெற்றுவிட்ட செல்வாக்கைத் தகர்க்க முடியாத நிலையை அடைந்து பழங்குடிகாரர்களாக மாறிவிடுகின்றவர்களை நினைத்தால் இரக்கமே தோன்றுகிறது. அவர்கள் செவி, அறிஞர் மொழியைக் கேட்குமா? கேட்டாலும் பயன்தான் உண்டா? மயக்கப் பொருள் விற்கும் கடைக்காரரின் வாணிகத்தைத் தடுத்துத்தான் பயன் என்ன? பழங் குடிவகை போகலாம்; புதுவகை வரலாம். உடனே மயக்கிக் கெடுப்பது நீங்கலாம். மெல்ல அசைத்துக் கெடுப்பது புகலாம். கள் நீங்கலாம்; காபி வரலாம். சாராயம் போகலாம்; டீ புகலாம்.

அரசியலிலும் இப்படித்தான் ஒன்று நீங்கி மற்றொன்று வரலாம். ஓர் அமைப்பு ஒழிந்து மற்றோர் அமைப்பு இடம் பெறலாம். ஆனால் தீமை முற்றும் அகலுமா? தூய்மை நிரம்புமா?

### பண வேட்டை

உடல் வகையில் உணர்ந்த உண்மையைத்தான் அரசியல் துறையிலும் உணர வேண்டும். பொதுமக்கள் ஏன் மயக்கப் பொருளை நாடுகின்றார்கள் என்று அடிப்படைக் காரணத்தைக் காண்பதுபோல், அரசியலில் கொடுமைக்கும் தந்திரத்திற்கும் ஏமாற்றத்திற்கும் ஏய்ப்புக்கும் ஏன் மக்கள் பலியாகின்றார்கள் என்று அடிப்படைக் காரணத்தைக் காண வேண்டும். உடல் நலம் காத்து உழைப்பை அளவு படுத்திக் கலைத்துறையால் ஊக்கம் பெறும் வாழ்க்கை இருந்தால், மயக்கப் பொருளை நாடும் நாட்டமே மக்களிடம் இருக்காது அல்லவா? அதுபோலவே, பொருட் கவலை இல்லாமல் அறம் நாடி அமைதி போற்றும் வாழ்க்கை இருந்தால், மக்கள் அரசியலிலும் சீர்திருந்துவார்கள்; தகாதவர்களுக்குத் தலைமையும் பொறுப்பும் கொடுத்துப் பலியாக மாட்டார்கள்; யாரோ சிலர் தன்னலத்தால் விளைக்கும் பூசல்களுக்கும் போர்களுக்கும் காரணமில்லாமல் தலை கொடுத்து அல்லல்பட மாட்டார்கள். ஆகவே, மக்களின் உடல் நலத்தையும் ஊக்கத்தையும் காப்பது போலவே,

அவர்களின் பொருள் நிலையையும் அமைதியையும் போற்ற வேண்டும்; அதாவது, வறுமையையும் கவலையையும் அகற்றும் நல்ல அரசியலை அமைக்க வேண்டும். வறுமையால் வாடிக்கொண்டு கவலைப்படுகின்ற கொடிய நிலை ஒழிந்து, எல்லாருக்கும் தொழில் உண்டு. தொழில் செய்தால் பொருள் உண்டு. வாழ்க்கை உண்டு என்ற நல்ல நிலை இருந்தால் மயக்குவோரின் வலைகளில் சிக்குண்டு தம்மைத் தாமே கெடுத்துக் கொள்ள மாட்டார்கள். அப்போது அந்த அரசியலில் பணவேட்டை இருக்காது; அறநாட்டமே இருக்கும். அது நோயுற்ற அரசியலாக இருக்காது; மயக்க வெறி தேடி அலையும் நிலை மக்களுக்கு இருக்காது. பரந்த நோக்கமுடையவர்கள் செய்யும் தொண்டு அவர்களால் வரவேற்கப்படும். அரசியல் உலகத்தில் நெருஞ்சியும் கள்ளியும் விளையாமல் நெல்லும் கரும்பும் விளையும். போருக்கும் பூசலுக்கும் வித்து இடுவோரின் முயற்சி பலிக்காமல், ஆக்கத்திற்கும் அமைதிக்கும் தொண்டு செய்வோரின் முயற்சி பயன்தரும்.

இன்று பெரும்பாலும் அரசியலில் உழைப்பவர்கள் நோயாளியைப் பார்த்து உடலை மறந்திருக்கும்படி உபதேசம் செய்கின்றவர்கள். இவர்களைப் பார்த்துச் சுட்டிக் கூற வேண்டியது, "நோயாளியின் நோயைப் போக்குங்கள். முதலில் அதைச் செய்யுங்கள். பிறகு உடலை மறந்திருக்கக் கற்றுக்கொடுங்கள்", என்பதே ஆகும். உண்மையாகவே, நோயில்லாமல் நலமாக இருப்பவர்கள் தம் வயிற்றைப் பற்றி எண்ணுவதே காணோம்.

அரசியலில் உள்ள நோய் நிலையைப் பண வேட்டை என்று குறிப்பிடலாம். அந்த நோயைத் தீர்த்து நல்வாழ்க்கை தேடுவோரின் நோக்கம் அறநாட்டம் என்று குறிப்பிடலாம். பொருட்கவலை உற்ற மக்களைப் பார்த்து, இன்று அறிஞர்கள், "அருமை மக்களே! நீங்கள் பொருட் கவலையை மறந்து, அறத்தில் கவலை கொள்ளுங்கள். அறத்தை நாடினால் பொருட்கவலை தானே தீர்ந்துபோகும்," என்று உபதேசம் செய்கின்றார்கள். ஆனால் இந்த முயற்சி எவ்வளவு பயன் தந்தது? உலகத்தில் அறத்தைப் பற்றிய தெளிவு ஏற்பட்ட நாள் முதலாக இதை விடாமல் செய்தே வருகின்றார்கள். புத்தர், ஏசு முதல் எல்லாப் பெரியோர்களும் இதைச் செய்து வந்திருக்கின்றார்கள். ஆனால் எவ்வளவு பயன் தந்தது? அரசியல் தலைவர்களில் பலர் இதையே வேறு வேறு வடிவில் எடுத்துக்கூறி வற்புறுத்துகின்றார்கள். பயன் என்ன? இன்று வரையில் பொருட்கவலை எள்ளளவும் குறையவில்லை. படிப்படியாக வளர்ந்து மிகுந்து கொண்டே வருகின்றது. அறத்தைப் பற்றிய நாட்டமோ மெல்ல மெல்லக் குறைந்து கொண்டே வருகின்றது. முன்னோர்கள் காலத்தில்

தனிப்பட்ட செல்வர் வறியர் சிற்சிலருடைய வாழ்க்கையில் இருந்த பொருட் கவலை இப்போது அன்பு வளர்க்கும் காதலருடைய உள்ளங்களிலும் எந்நாளும் நிறைந்திருக்கின்றது; அறிவு வளர்க்கும் கல்வி நிலையங்களிலும் கலை மண்டபங்களிலும் புகுந்திருக்கின்றது. சுருங்கச் சொன்னால், பழங்காலத்தில் அறம் குடிகொண்டிருந்த நிலையங்களிலும் இப்போது பண வேட்டையே இடம்பெற்று வாழ்கின்றது. ஆகவே, சான்றோர் செய்த முயற்சிகள் எவ்வளவு பயன் விளைத்தன என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அற நாட்டம்

அறத்தை நம்பி அமைதியாகக் குடும்பத்தின் அளவில் நின்று வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள்,"நல்லவர்களுக்குக் காலம் இல்லை. நமக்கெல்லாம் இடம் இல்லை". என்று சொல்லி மூலையில் வாடுகின்றார்கள். குடும்பத்தைவிட்டுச் சிறிது விரிந்த எல்லையில் நின்று ஊர்த் தொண்டோ வேறு உதவியோ செய்து வாழ முயல்கின்றவர்களும்,"நாமெல்லாம் என்ன செய்தாலும் பயன்படாது; பேசாமல் மூலையில் அடங்கிக் காலம் கழிப்பதே நல்லது", என்று மெல்ல மெல்ல ஒதுங்குகின்றார்கள், சமயம், மொழி முதலான துறைகளில் இருந்து தொண்டு செய்ய முன்வருகின்றவர்களும் நாளடைவில் சோர்வு அடைந்து “உலகம் பொல்லாதது" என்று சொல்லிப் பின்வாங்குகின்றார்கள். அறத்தைப் போற்றும் மனத்தோடு அரசியலில் ஈடுபட்டவர்களோ, "ஏமாற்றமும் வெறுப்பும் அடைந்தவர்களாய், நம்மைப் போல் உண்மையானவர்களுக்கு அரசியலில் இடம் இல்லை. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசிப் பொதுமக்களை ஏய்த்து வஞ்சித்துப் பதவி வேட்டை ஆடுகின்றவர்களையே பொது மக்களும் நம்புகின்றார்கள்; ஆடு, ஊன் கடைக்காரனைத்தான் நம்புகின்றது. அறம் வேறு, அரசியல் வேறு", என்று விட்டுத் துறந்து ஒதுங்குகின்றார்கள். இவர்கள் ஒரு பக்கம் இருக்க, அறத்தை நம்பாமல், மதிக்காமல், பொருளே சிறந்தது, பணந்தான் உலகம் என்று உணர்ந்து வாழ்க்கையை மாற்றிக்கொள்கின்றவர்களுக்குக் குடும்பம் துணை செய்கின்றது; ஊர் உதவுகின்றது; அரசியலும் போற்றுதல் செய்கின்றது. இவர்களும் வீழ்ச்சி அடையலாம்; அது வேறு. வீழ்ச்சி எல்லோருக்கும் பொது; புதுமை அல்ல. ஆனால் ஓரளவு செல்வாக்கும் புகழும் பெற இவர்களால்தான் முடிகின்றது. அவ்வளவு உயர்வும் நலமும் அறநாட்டம் உடையவர்களுக்கு இல்லை. இந்த உண்மையை மறைத்துப் பயன் இல்லை; உள்ளவாறே கண்டு உண்மை என்று உணர்ந்தால், நம் கடமை இன்னது என்பது தெளிவாகும்.

அறநாட்டம் உடைய சான்றோர்கள் செய்த முயற்சிகள் இன்று வரையில் போதிய பயன் அளிக்கவில்லை என்பது வெளிப்படை. இந்த நன்முயற்சிகள் செய்த அந்தந்தக் காலத்திலேயே அவர்கள் அறநாட்டத்தை வற்புறுத்தி வந்திருக்கின்றார்கள்; அறநாட்டத்தை மாய்க்கும் பகையான பணவேட்டையைச் கடிந்து வந்திருக்கின்றார்கள். இந்தப் பணவேட்டையைச் சமூகத்திலிருந்தே ஒழிக்க வேண்டும். அதற்கு உரிய நெறியில் அரசியலை அமைக்க வேண்டும் என்னும் கருத்து உலகத்திற்கே புதியது. இந்த நூற்றாண்டில் அரசியல் அறிஞர்கள் தெளிந்து கண்ட உண்மை அது. "வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்", "கொள்வார் இலாமையின் கொடுப்பாரும் இல்லை" என்னும் பொன்மொழிகளும் புலவரின் உயர்ந்த கற்பனையே அல்லாமல் உலகத்தில் கண்டறிந்த காட்சி அல்ல. ஆகையால், சமூகத்தையே அப்படி அமைக்க வேண்டும் என்னும் அரசியல் கொள்கை பண்டைக் காலத்தில் இருந்ததில்லை. அவர்கள் வற்புறுத்தியதெல்லாம், தனிப்பட்டவர்களின் உய்வும் உயர்வும் குறித்ததே ஆகும். அதனால், தனிப் பட்டவர்களைப் பார்த்து, தனித் தனியே பணவேட்டையை விட்டொழிக்குமாறு வற்புறுத்தி இருக்கின்றார்கள். தனித் தனியாகப் பணவேட்டையை விட்டு அவரவர்கள் நல்ல நிலை அடையலாம் என்று வழிகாட்டினார்கள். அந்த நல்ல நோக்கத்தோடுதான் துறவுநிலையும் வற்புறுத்தப்பட்டது. ஒருவன் துறந்து தனியே வாழாமல், மனைவி மக்களோடு குடும்பம் காரணமாகப் பணவேட்டையில் ஈடுபட்டுக் கெட்டுவிடுவான் அல்லவா? அதனால், குடும்பத்தைத் துறந்து தனியே வாழ்தலும் அறமாகக் கூறப்பட்டது. குடும்பத்தைத் துறக்காமல் இல்லறத்தில் வாழ்கின்றவர்களும் பணவேட்டைக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்றே அன்பைப் பெருக்கி விருந்தோம்பும் அறம் வகுத்துக் கூறப்பட்டது. வீடு முதல் நாடுவரையில் எல்லாப் பற்றும் விட்ட பிறகும், உடம்பு காரணமாகப் பொருட்பற்று நிரம்பிப் பணவேட்டை இடம் பெறும் என்று கருதியே யாக்கை நிலையாமை எடுத்துக்கூறப்பட்டது. இவ்வாறே அகப்பற்றும் புறப்பற்றும் (அகங்காரம், மமகாரம்) இரண்டும், நீங்கினால்தான், மனிதன் நல்வாழ்க்கை வாழ்ந்து சீர்பெறலாம் என்று அறநெறியில் வாழ்ந்த சான்றோர் வற்புறுத்தி உள்ளார்கள். அடிப்படைக் காரணம், உலக வாழ்க்கைத் துறைகள் எல்லாம் செய்வதால், அவற்றைத் துறப்பதே நல்லது என்று எடுத்துக் கூறி வந்தார்கள். இதனால் பயன் என்ன? நாட்டின் மூலைமுடுக்குகளில் ஒரு சிலர் அவ்வப்போது அறவோராக, உண்மையாளராக பண்பட்டவர்களாக வாழ்ந்து உயர முடிந்தது.

பொது வாழ்க்கையில் அறத்திற்கும் உண்மைக்கும் பண்பாட்டுக்கும் இடமில்லை. ஆத்திகப்போர்வை - ஒழுக்கக்கேடு, அரிச்சந்திர வழிபாடு - கள்ள வாணிகம், திருக்குறள் பெருமை - விலங்குணர்ச்சி இப்படிப் போலி வாழ்க்கை பெருகி விட்டது. சுற்றிலும் பாலைவனக் காட்சி, இடையிடையே சிற்சில நீரூற்று இதுதான் இன்றைய உலகம்.

தனி மனிதன் - உலகம்

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என ஆசையை மூன்று வகைப்படுத்திக் காட்டி அவற்றைத் துறக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள். மண்ணாசையும் பொன்னாசையும் சேர்ந்த ஒன்றே பணவேட்டை எனலாம். இவற்றோடு பெண்ணாசையையும் சேர்த்துக் கடிந்து கூறினார்கள். சிலர் இல்வாழ்க்கையும் தகாது என்ற கடிந்தார்கள். புலன்களுக்கு அடிமைப் பட்டு இந்திரிய வயமயங்கி இந்த ஆசைவலையில் அகப்பட்டுக்கொண்ட பிறகு மேலும் மேலும் பொருளாசையே இழுத்துச் செல்கின்றது; பொருள் மிகுந்தால்தான் இல்வாழ்க்கையில் இன்பம் என்ற அந்த ஆசை இழுக்கின்றது. வரம்பு மீறிய வாழ்க்கையில் தலைப்பட்டுப் பிறமகளிரை நாடுகின்றவர்களுக்குப் பொருளின் தேவை மிகுதியாகின்றது. ஆகவே, பெண்ணாசையும் திரும்பத் திரும்பப் பண ஆசைக்கே தூண்டுகோலாகின்றது. இவ்வாறு மூன்று ஆசையும் சேர்ந்து பணவேட்டையில் மனத்தை அலையச் செய்து, அறநாட்டத்தைப் புறக்கணிக்கச் செய்கின்றன.

இந்தக் கருத்துகளையே வேறொரு வகையில் மற்றொரு சான்றோர் விளக்கியுள்ளார்; கடவுள், பணம் இந்த இரண்டையும் ஒரு சேர வழிபட முடியாது என்றார். கடவுளின் நெறியில் நிற்கவேண்டுமானால், பண வேட்டைக்கு ஆளாகக் கூடாது என்பதே அவர் கருத்து. 'ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையும்; முத்தி வாயிலில் செல்வர் நுழைய முடியாது' என்னும் கருத்தும் செல்வப் பற்று - பணவேட்டை - ஒருவரைக் கடவுள் நெறியிலிருந்து இழுத்துக் கெடுக்கவல்லது என்பதையே தெளிவிக்கின்றது. கடவுள் நெறி அறத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் பணவேட்டையை - பொருட்பற்றை - இவ்வாறு சான்றோர் கடிந்து கூறி வந்தார்கள்.

ஆனால், இந்தச் சான்றோர் செய்த முயற்சிகள் எல்லாம் தனிமனிதன் திருந்திச் சீர்படுவதைப் பற்றியதே ஆகும். தனித்தனியாக மக்கள் சீர்பட்டுவிட்டால் சமுதாயம் சீர்படும். உலகம் திருந்தும் என்பது அவர்கள்

நம்பிக்கை. அவர்கள் வாழ்ந்த உலகமும் அவ்வாறே அமைந்திருந்தது. ஒரு குடும்பத்தார்க்கும் மற்றொரு குடும்பத்தார்க்கும் ஓரளவான தொடர்பே இருந்தது. ஓர் ஊரில் இருந்த ஒருவர்க்கும் மற்றோர் ஊரில் இருந்த இன்னொருவர்க்கும் இருந்த தொடர்பு குறைவாகவே இருந்தது. ஒரு நாட்டு மக்களுக்கும் மற்றொரு நாட்டு மக்களுக்கும் தொடர்பு அதை விடக் குறைவாக இருந்தது. தொடர்பே இல்லை என்று கூறத்தக்க நிலைமை இருந்தது; இன்றைக்கோ, உலகமே ஒரு குடும்பமாகிவிட்டது. ஒரு குடும்பத் தலைவி உடல் நலம் இல்லாமல் வாடினால், குடும்பத்தார் எல்லோருடைய மகிழ்ச்சியிலும் குறை தோன்றுவது போல, இங்கிலாந்தில் ஏதோ ஒரு தொழிற்சாலை வேலை நிறுத்தம் செய்தால், ஆஸ்டிரேலியா மக்களின் வாழ்க்கையை அது தாக்குகின்றது. அபிசீனியாவில் இதாலி போர் தொடங்கினால், அது இந்தியாவில் உள்ள பொருளாதார நிலைமையைத் தாக்குகின்றது. ஐப்பானில் அணுக்குண்டு வீழ்ந்தால் அது தமிழ் நாட்டு அரிசியின் விலையைத் தாக்குகின்றது. வட இந்தியாவில் டில்லியில் ஒரு குடும்பத்தில் உள்ள செல்வரின் மனப்போக்கில் மாறுதல் நேர்ந்தால், அது தென்னிந்தியாவில் வடஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலூக்காவில் பூங்குளம் கிராமத்தில் உள்ள குடியானவர்கள் வயிற்றைக் கிள்ளுகின்றது. இந்த நிலைமை புத்தர்பெருமான் காலத்தில் இல்லை; ஏசுநாதர் காலத்தில் இல்லை; திருநாவுக்கரசர் காலத்தில் இல்லை; தாயுமானவர் காலத்திலும் இல்லை.

ஆகையால், உலகமெல்லாம் ஒரு குடும்பம் போல் அமைந்து இன்ப துன்பங்களைச் சேர்ந்து அனுபவித்து நன்மை தீமைகளை ஒருங்கே பங்கிட்டுக் கொள்ளும் புது நிலைமை வந்திருப்பதை எந்தக் காரணத்தாலும் மறக்கக் கூடாது. ஆகாய விமானம், தபால், தந்தி, வானொலி முதலிய கருவிகள் உலகத்தை ஓர் ஊர்போல் செய்து விட்டன; ஒரு குடும்பம்போல் பிணைத்து வருகின்றன. நாடு, மொழி, சமயம், இனம் முதலான காரணங்களால் மக்கள் பிரிந்து நிற்கவேண்டும் என்று அந்தந்தத் தலைவர்கள் முயல்கின்றார்கள்; அவர்களின் முயற்சிக்கெல்லாம் உண்மைக் காரணங்களும் உண்டு; போலிக் காரணங்களும் உண்டு. இருந்தாலும், இந்த முயற்சிகளை எல்லாம் கடந்து, உலகம் ஊராக அமைந்துவிட்டது. குடும்பமாக நெருங்கி வருகின்றது. எந்த மூலையில் என்ன மாறுதல் நேர்ந்தாலும் அது எல்லாப் பகுதிகளையும் தாக்குகின்றது.

இவ்வாறு இன்ப துன்பங்களையும் நன்மை தீமைகளையும் உலகப் பொதுவாக்கிப் பகுத்து நுகரும் அமைப்பு வந்துவிட்ட பிறகு, தனிமனிதன்

திருந்தினால் உலகம் திருந்தும் என்ற நம்பிக்கையைக் கைவிடுவதே அறிஞர் கடமையாகும். தனிமனிதன் திருந்துவதற்கு வாய்ப்பு இருந்த காலத்திலேயே முன்னோர் செய்த முயற்சிகள் போதிய பயன் தரவில்லை. தனிமனிதன் எல்லாத் துறையிலும் உலகத்தோடு நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ள இந்தக் காலத்தில் அத்தகைய முயற்சி பயன்தரும் என்று நம்புவது தகுமா?

ஆகவே, இன்று அறிஞர்கள் மேற்கொள்ளவேண்டிய கடமை தனிமனிதரைத் திருத்துவது அல்ல; சமுதாயத்தைத் திருத்துவதே ஆகும்; ஆசையோடு போராடுவது அல்ல. அமைப்போடு போராடுவதே ஆகும்; பொருட்பற்றைப் போக்குவது அல்ல; பணவேட்டையைப் போக்குவதே ஆகும். அப்போதுதான் ஒருவர் இருவர் அறத்தை நாடி உலகம் பொல்லாததென அல்லல்படும் நிலைமைபோய், உலகமெல்லாம் அறத்தை வாழ்க்கைக்கு அடிப்படையாகக் கொள்ளும் நிலைமை வரும். மற்றவர்கள் எப்படியாவது போகட்டும். நான் மட்டும் முத்தி பெற வேண்டும் என்ற தன்னலம் அகன்று எல்லாவுயிரும் இன்புற்றிருக்க நினைக்கும் அருள் நெஞ்சம் வாழும். கலையும் கோயிலும் ஒருவர் இருவர் உண்மை நெறிக்கோ, சிற்சிலர் போலி வாழ்வுக்கோ பயன்படாமல், மக்கள் எல்லோருடைய மனவளர்ச்சிக்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் உறுதுணையாகப் பயன்படும் திருக்குறள் அறத்துப்பால் படித்துப் பாராட்ட வேண்டிய பகுதியாக நில்லாமல், ஒழுகி உயரவேண்டிய வழிகாட்டும் வாய்மொழியாக விளங்கும்.

துறவு நெறி

தனிமனிதர்க்கு அறத்தின் சிறப்பை எடுத்துச் சொல்லி ஆசையை அகற்றச் சொல்வது, காலால் நடந்து குறித்த இடத்தை அடையச் சொல்வது போன்றது. காலால் நடப்பதால் தவறியோ இடறியோ விழ நேராது; விழுந்தாலும் பெரிய அடிபடாது; வண்டி ஏறும் ஆசையை விட்டொழித்தால், வண்டியால் வரும் துன்பமும் தொல்லையும் அகலும். ஆகையால் காலால் நடந்துபோவது எவ்வளவோ நன்மை உடையதுதான். குடும்பப் பற்றையும் மற்றச் சூழ்வுத் தொடர்புகளையும் விட்டுத் துறவியாய்த் தனியே வாழ்ந்து அறநெறி போற்றி உயரும் வாழ்வும் இப்படிப்பட்டதுதான்.

எந்த வண்டியும் இல்லாத மிகப் பழங்காலத்தில் தனி மனிதரைப் பார்த்து, "காலால் நடப்பது நல்லது; ஒரு துன்பமும் இல்லை; வாழ்க்கையில் இன்பமும் அமைதியும் பெறலாம்", என்று எவரும் உபதேசம் செய்ய வேண்டிய காரணமே இல்லை. மாட்டுவண்டி ஏற்பட்ட காலத்திலும், அது

காலால் நடக்க முடியாதவர்களுக்கும் நடந்து களைத்தவர்களுக்குமே பயன்படக் கூடியதாக இருந்தது. வல்லமையும் ஊக்கமும் உடையவர்கள் மாட்டு வண்டியை விடக் காலால் நடப்பதையே விரும்பியிருப்பார்கள். ஆனால், குதிரை வண்டி ஏற்பட்ட காலத்தில், காலால் நடப்பவர்களின் தொகை மெல்ல மெல்ல குறைந்துவரத் தொடங்கியிருக்கும்; காலால் நடப்பதை விட விரைந்து செல்லலாம், முயற்சி குறையும், வேறு வேலை செய்ய ஊக்கமும் இருக்கும். நேரமும் இருக்கும் என்று பல நன்மைகளை எண்ணிப் பார்த்து அதைப் பயன்படுத்தத் தொடங்கி யிருப்பார்கள். நன்மை செய்த குதிரை வண்டி பல துன்பங்களுக்கும் காரணமாக இருந்திருக்கும். பாதையில் விரைந்து செல்லும் வேகத்தால் ஏற்படும் அதிர்ச்சி காரணமாகவோ, முரட்டுத்தன்மை காரணமாகவோ, பலமுறை வண்டி குலுங்கியிருக்கும். சில முறை கவிழ்ந்திருக்கும். அப்போதெல்லாம் உள்ளே உட்கார்ந்திருந்தவர்களுக்குக் குதிரையின் மேல் வெறுப்பு வளர்ந்திருக்கும்; இறங்கிக் காலால் நடக்கவேண்டும் என்ற துணிவும் பிறந்திருக்கும். சில வேளைகளில் வண்டி கவிழ்ந்த வேகத்தில் சிலருக்கு அடிபட்டிருக்கும். அடிபட்டவர்களோ, அவர்களின் உடம்பில் கசிந்த இரத்தத்தைக் கண்டவர்களோ, அச்சம் மிகுந்து வண்டியை விட்டுக் கீழே இறங்கி அந்த நொடியிலிருந்தே நடந்துபோகத் துணிந்திருப்பார்கள்.

பழங்காலத்தில் சான்றோர் பலர் குடும்ப வாழ்க்கையிலும் மற்றத் துறைகளிலும் வரும் இடுக்கண் பலவற்றையும் எண்ணி எண்ணிப் பற்றற்ற வாழ்க்கையை-துறவறத்தை-வற்புறுத்தினார்கள். நல்ல இல்வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே வாழ்க்கையின் அதிர்ச்சிகளை - வறுமை, நோய், மூப்பு, மரணம் என்னும் அதிர்ச்சிகளைக் கண்டு நடுங்கி வாழ்க்கையையே வெறுத்தார்கள்; துறந்தார்கள்; மற்றவர்களுக்கும் துறவின் சிறப்பை எடுத்துரைத்தார்கள்.

இவ்வாறு வாழ்க்கையின் அதிர்ச்சிகளையும் துன்பங்களையும் கண்டு கண்டு ஆசை துறந்த நெறியில் வாழத் தலைப்பட்டவர்களே தனிப்பட்ட மனிதர்க்கு இந்தப் பற்றற்ற வாழ்க்கையை உபதேசம் செய்தவர்கள். குடும்பங்களும் இனங்களும் அமைந்த சமுதாயத்தில் இவர்கள் இப்படிப்பட்ட அறத்தொண்டு செய்தவர்கள். இவர்கள் தொண்டு ஓரளவு பயன் தந்தது. ஆனால் பலரையும் மாற்ற முடியவில்லை. பலரையும் திருத்த முடியவில்லை. ஒரு சிலரே பற்றற்றுத் துறவறம் பூண்டார்கள். மற்றவர்கள் அதைப் போற்றுவதோடு நின்றார்கள். குதிரை வண்டி வந்த காலத்திலும் சிலர் மட்டுமே காலால் நடக்கும் துணிவு கொண்டார்கள். அதிர்ச்சி, அடி, இரத்தம்

வடிதல் எல்லாம் கண்ட பின்னும் குதிரை வண்டியில் ஏறிச்செல்லும் பழக்கத்தை வெறுக்காதவர்கள் பலர் இருக்கவில்லையா? இதுவே துறவறம் வளர்ந்த நிலை.

பக்தி நெறி

இதற்கு அடுத்தபடியாக மற்றொரு வழி வகுக்கப்படுவதாயிற்று. சான்றோர் சிலர் வேறு வகையாக எண்ணிப் பார்க்கத் தொடங்கினார்கள். "குதிரை வண்டியைத் துறந்து காலால் நடப்பது என்றாலும் முடியாது. முடிந்தவர்கள் காலால் நடந்து போகட்டும். மற்றவர்கள் குதிரை வண்டியைப் பயன்படுத்திக் கொள்வதே நல்லது. விரைந்து போகலாம்;

உடம்பின் ஆற்றலைக் காக்கலாம்; ஓய்வும் இன்பமும் பெறலாம். ஆகையால் குதிரை வண்டியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். குலுங்கலும் கவிழ்தலும் நேராதபடி சீராக அமைந்த நல்ல வகையில் பழக்கலாம்; அப்படிச் செய்தால் அதிர்ச்சி அடி ஒன்றும் நேராது", என்று கருதினார்கள். வாழ்க்கையில் வறுமை துன்புறுத்துகின்றது. நோய் துயரம் தருகின்றது. மூப்புத் தொல்லை விளைவிக்கின்றது; மரணம் அச்சுறுத்துகின்றது; உண்மைதான். ஆனால் அதற்காக ஒதுங்குவதா? ஓடுவதா? அது கூடாது. நிற்போம், நிலைப்போம். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். இன்பமும் துன்பமும் இறைவன் திருவருளே தேறும் வகையும் திகைப்பும் அவனே. தீமை நன்மை முழுதும் அவனே. வறுமையும் செல்வமும் அவன் இன்னருளே. நோய் நல்குவது நம்மை ஆட்கொள்ளவே. நோய் தீர்ப்பது அவன் கடமையே. மூப்பு உடம்பின் இயற்கையே. மரணத்திற்கு ஏன் அஞ்ச வேண்டும்? மரணம் நெருங்கும்போது எமன் வருவதைத் தடுப்போம். இன்று முதல்கொண்டே இறைவனை வழிபட்டால், இறைவனே வந்து ஆவித்துணையாகக் காத்தருள்வான். அவனுடைய திருவடி நிழலில் உயிர் இன்புறும்", என்பதே அவர்கள் கொள்கை. இது பக்திநெறி எனப்படும். இந்தச் சான்றோர்கள் துறவறத்தை அங்கங்கே சுட்டிச் சுட்டிச் சென்றிருக்கிறார்களே அல்லாமல் வற்புறுத்த வில்லை. அவர்கள் வற்புறுத்தியதெல்லாம், மண் பெண் பொன் வைத்துக் கொண்டும் வாழலாம். எங்கே எந்நிலையில் வாழ்ந்தாலும் இறைவனை வழிபட்டால் போதும் என்னும் பக்தி நெறியே ஆகும். உலகெங்கும் இந்த நெறி வேறு வேறு வடிவில் பரவியிருக்கின்றது. வடிவம் பல ஆனாலும் அடிப்படை ஒன்றே. பொருள் சேர்த்து வாழும் வாழ்க்கையே ஆனாலும், அறத்தை

மறக்காமல் போற்ற முடியும், அதற்குக் கடவுளன்பு - பக்தி - வேண்டும் என்பதே அடிப்படை ஆகும்.

உலக வளர்ச்சி

இன்று உலகம் உள்ள நிலை வேறு. இது வண்டியே இல்லாத காலமும் அல்ல; மாட்டுவண்டிக் காலமும் அல்ல; தனித்தனியே குதிரைவண்டிகள் வைத்துச் சென்ற காலமும் அல்ல; எல்லாரும் ஒரு சேர ஏறி உட்கார்ந்து கொண்டு, ஓட்டுவதற்கு ஒருவர் இருவரை ஏற்படுத்திச் செல்கின்ற புகைவண்டிக் காலம். காலால் நடக்கும் பழக்கத்தில் அதிர்ச்சிக்கே இடமில்லை; தடுமாறி வீழ்ந்தாலும் துன்பம் குறைவே. மாட்டு வண்டியில் பயணம் செய்யும் போதும் அவ்வளவு அதிர்ச்சி இல்லை; தவிர, அதற்குக் கவர்ச்சியும் குறைவு; ஊக்கமுடையவர்கள் அதைப் புறக்கணித்து நடந்துபோக முயல்வது வழக்கம். குதிரை வண்டியில் அதிர்ச்சி உண்டு; துன்பம் உண்டு; ஆகையால் சிலர் வெறுப்பார்கள்; பலர் வேறு வழி இல்லை என்று அதன் நன்மைகளைப் போற்றிப் பயன் பெறுவார்கள்; அவர்களில் சிலர் சீர்ப்பட்ட சாலைகளில் ஓட்டித் துன்பங்களைக் குறைத்துக் கொள்வார்கள்; சிலர் குதிரையை அன்போடு பழக்கி மருளாதபடி முரணாதபடி காத்துக் கொள்வார்கள். ஆனால் புகைவண்டிப் பயணத்தில் என்ன செய்வது? செல்லும் வழியில் தண்டவாளத்தை யாரோ ஒருவர் எங்கோ ஓரிடத்தில் நகர்த்தி வைத்தாலும் வண்டியில் செல்லும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு எவ்வளவோ துன்பம் விளைகின்றது. வண்டியிலுள்ளவர்களில் ஒருவர் அபாயச் சங்கிலியைக் காரணம் இருந்தோ இல்லாமலோ பிடித்து இழுத்தாலும் வண்டி நின்று, ஆயிரக்கணக்கான பயணிகளின் காலத்தை வீணாக்குகின்றது. வண்டி ஓட்டும் பொறுப்பை உடையவர் கைத்தவறு காரணமாகவோ உடல் சோர்வு காரணமாகவோ, மனக்கோளாறு காரணமாகவோ, சிறுதவறு செய்தாலும், புகைவண்டியில் எவ்வளவோ தொல்லைகள் நேர்ந்து, எத்தனையோ உயிர்கள் மாள வேண்டியிருக்கின்றது.

வாழ்க்கை தனி மனிதர் கையில் இருந்த காலம் ஒன்று. அப்போது பணவேட்டை இல்லை; அறநாட்டமும் இல்லை. இது காலால் நடக்கும் நிலை.

வாழ்க்கை குடும்பத்தின் பொறுப்பில் அமைந்தது. அப்போது பொருள் சேர்க்கும் ஆசை மெல்ல அரும்பியது. அறத்தைப் பற்றிய எண்ணமும் வளர்ந்தது. ஆனால் ஒன்றைப் பழித்து ஒன்றைப் புகழும் காரணம் எழ வில்லை. இது மாட்டுவண்டிப் பயண நிலை. வாழ்க்கை பல குடும்பங்கள்

சேர்ந்த ஓர் ஊரின் பொறுப்பிலும் ஓர் இனத்தின் பொறுப்பிலும் அமைந்தது. அப்போது ஒரு பக்கம் பொருள் சேர்க்கும் வேட்டை பெருகியது. அதனால் அறம் சுருங்கித் துன்பம் நேர்வதைக் கண்டவர்கள் விட்டு ஒதுங்கி வாழ வேண்டும் என்று துறவறத்தை வற்புறுத்தினார்கள். மற்றொரு பக்கம், பொருள் சேர்த்தாலும், அதனால் துன்பம் வந்தாலும், எல்லாம் இறைவன் செயல் என்று அவனருளைப் போற்றி வழிபட்டு வாழ்வதை வகுத்தார்கள். ஆக, பொருளாசையைத் துறந்தால்தான் அறநெறி வாழும் என்று சிலர் உணர, எந்நிலையில் இருந்தாலும் கடவுளன்பு இருந்தால் அறநெறி வாழும் என்று சிலர் உணர்ந்தார்கள். அவரவர்கள் அவ்வவ்வாறே மற்றவர்களுக்கு வழி காட்டினார்கள். இது குதிரை வண்டிப் பயணநிலை.

வாழ்க்கை பெரிய நாடுகளின் பொறுப்பிலும் எல்லா நாடுகளும் சேர்ந்த உலகத்தின் பொறுப்பிலும் அமைந்தது. பணவேட்டை அளவின்றிப் பெருகியது. அறநாட்டம் குன்றியது. யந்திர நாகரிகமே இதற்குக் காரணம். ஆகையால், யந்திரங்களைப் போற்றாமல் குடிசைக் கைத்தொழில்களைப் போற்றினால் பழைய எளிய, இயற்கை நிலையில் அறநெறியில் வாழலாம் என்று சிலர் நம்புகின்றார்கள். சிலர் இதற்கு மாறாக, யந்திர நாகரிகம் காரணம் அல்ல, யந்திர நாகரிகத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத அரசியல் அமைப்பே காரணம், பணவேட்டைக்கு இடமில்லாத அரசியல் அமைந்தால் அறநெறி தானே அமையும் என்று சிலர் நம்புகின்றார்கள். இருவகை நம்பிக்கைக்கு இடையே இன்று உலகம் ஒரு குடும்பம் போல் பிணைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. நன்மையும் தீமையும் எல்லோருக்கும் பொதுவாக விளையும் முறையில் வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. இதுவே புகை வண்டிப் பயணநிலை. இவற்றுள் எது நடைமுறையில் வெற்றிதரக் கூடியது? குடிசைக் கைத்தொழிலுக்குத் திரும்புவதா? அல்லது, யந்திர நாகரிகத்தைப் பயன்படுத்திக்கொண்டு பணவேட்டையை ஒழிப்பதா? வேறுவகையாகக் காணின் உலகத் தொடர்பைச் சுருக்கித் தனிமனிதரைத் திருத்துவதா? அல்லது, அரசியல் பொருளாதார அமைப்பை மாற்றி அமைத்து மக்கள் எல்லோரையும் உயர்த்துவதா?

முன்னது வெற்றிபெற வேண்டுமானால் வாணிகப் பெருக்கம், கைத்தொழிற்சாலை வளர்ச்சி இவை உலகமெல்லாம் போற்றப்படாமல் கைவிடப்படவேண்டும். போக்குவரவுக் கருவிகள் குறைய வேண்டும்; பழங்காலத்தைப் போல் கிராமங்கள் பெருக வேண்டும்; நகரங்கள் தேய வேண்டும். இவை நடக்கக் கூடியனவாகத் தோன்றவில்லை. ஒரு சிறந்த

காரணத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். மக்கள் உடலுழைப்பைக் குறைத்துக் குறைத்து மென்மையாக வளர்ந்து வளர்ந்து அறிவை வளர்த்து ஓய்வைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்ட பின் பழைய நிலையை விரும்பிப் பின்செல்வார்களா? புகை வண்டியில் ஏறி எளிதில் விரைவில் பயணம் செய்வதை விட்டுக் காலாலேயே நூற்றுக்கணக்கான மைல்கள் நடந்து செல்ல முன் வருவார்களா? ஒரு சிலர் நடந்துசென்று வலியத் துன்பத்தை ஏற்கலாம். அதனால் பொது மக்களின் வாழ்க்கையில் ஏதாவது மாறுதல் ஏற்படுத்த முடியுமா? ஒரு நாடோ அல்லது ஓர் இனமோ இவ்வாறு பழைய வாழ்க்கைக்குத் திரும்பலாம்; அதனால் பயன் விளையுமா? மாறாக மற்ற நாடுகளின் செல்வாக்காலும் மற்ற இனங்களின் எழுச்சியாலும் நசுக்குண்டு தாழ்வுற வேண்டிவரும்.

அறத்தின் நிலைமை

மிகப் பழங்காலத்தில் பொருள் சேர்த்து வைக்கும் வழக்கமே ஒரு சிலரிடத்தில் மட்டும் ஒரு சில காலங்களில் மட்டும் தொடங்கியது. அப்போது பெரும்பாலோர் வாழ்க்கைப் பறவைகளின் வாழ்க்கைப்போல் இருந்தது. களஞ்சியங்களில் சேர்த்து வைக்காமல், அந்தந்த வேளை உணவுக்கு அவ்வப்போது தேடி உண்ணும் பழக்கம் இருந்தது. அன்றாட உணவைப்பற்றிய கவலை அன்றன்றைக்கே தீர்ந்தது. அந்த நிலையில் பொருள் ஆசை எது? அறத்தை அறிவுறுத்தும் காரணமும் ஏது?

அதற்கு அடுத்தபடி, பயிரிட்டு அறுவடை செய்து களஞ்சியங்களில் சேர்த்து வைத்த நிலை. அப்போது அந்தந்த ஆண்டுக்கு உரிய உணவைப் பற்றி உழவர்கள் கவலைப்பட்டார்கள். உழவர்கள் தவிர மற்ற மக்கள் உழவர்களின் உதவியை எதிர்பார்த்துக் கவலை இல்லாமல் காலங் கழித்தார்கள். 'பழுமரம் தேடும் பறவைபோல்' கலைஞர்கள் வள்ளல்களை நாடி அவர்களின் உதவியைப் பெற்று மகிழ்ந்த காலம் அது. வெவ்வேறு தொழிலாளிகளும் உழவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்துவிட்டு உழவர்களின் களஞ்சியங்களை நம்பிக் கவலை இல்லாமல் காலம் கழித்த நிலை அது. அந்த நிலையிலும் பணவேட்டை இல்லை; ஆனால், ஒரு சாராரிடம் உணவுப்பொருள் சேர்ந்து நின்றபடியால், மற்றவர்கள் அதை நம்பி வாழ்ந்த படியால், அறத்தைப் பற்றிய உணர்வு வேண்டியிருந்தது. விருந்தோம்பல், அன்புடைமை, ஈகை முதலியவை அறப்பகுதிகளாக

வற்புறுத்தப்பட்டன. 'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி 'வேளாண்மை செய்தற் பொருட்டு' என அறவுரை கூறப்பட்டது .

அதற்கு அடுத்தபடி ஓர் ஊர்க்கும் மற்றோர் ஊர்க்கும் உறவும் தொடர்பும் மிகுந்த காலத்தில் வாணிகம் மெல்ல மெல்லத் தலையெடுத்தது. ஒரு பொருள் கொடுத்து மற்றொரு பொருள் வாங்கும் பண்டமாற்று வளர்ந்தது. பண்டம் இல்லாதபோது விலை மதிப்புள்ள பொன் வெள்ளி முதலியவற்றைக் கொடுத்து உணவுப் பொருளைப் பெறும் வழக்கமும் தோன்றியது. அவ்வாறு பண்டமாற்றும் காசு வாணிகமும் வேரூன்றிய பிறகு, பொய்யும் ஏமாற்றமும் புகுந்தன. காசு சேர்த்து வைத்தால் கவலையின்றி வாழலாம் என்னும் நம்பிக்கை வளர்ந்தபின் சேர்த்து வைக்கும் பணவேட்டை மெல்லத் தலையெடுத்தது. சேர்த்து வைத்த பொன்னுக்கும் வெள்ளிக்கும் காவல் வேண்டுமாகையால், படையும் போர்முறையும் அமைந்தன. வலியார் நன்றாக வாழ வகையும் மெலியார் அடங்கி நிற்க வழியும் தோன்றின. இவையெல்லாம் ஒன்றிலிருந்து மற்றொன்று வளர்ந்தமைந்த பிறகு, அறம் படிப்படியாக மறையும்போல் தோன்றியது. பண்டமாற்றில் தொடங்கிக் காசு வாணிகத்தில் அரும்பிய பணவேட்டை வலியார் மெலியாரை அடக்கும் அடக்குமுறையில் முடியவே, பொய் ஏமாற்று முதலியன வாழ்வு பெற்றன. அருள் நெஞ்சம் பெற்ற சான்றோர்கள் இவற்றை எல்லாம் கடிந்து கூறி அறநெறியில் வந்த பொருளே வாழ்க்கைக்கு உதவும், மற்றவை உதவாமல் அழியும் என்று எடுத்துக்கூறி அறத்தை வற்புறுத்தினார்கள். திருவள்ளுவரின் அறத்துப்பால் முழுவதும் இத்தகைய சமுதாயத்தை நோக்கி எழுதப்பட்ட அறிவுரைகளே ஆகும்.

இன்று உள்ள அமைப்பில் பண்டமாற்று ஒரு மூலையில் ஒடுங்கியது. காசு வாணிகம் அளவில்லாமல் பெருகியது. யந்திர நாகரிகம் பெருந்துணை செய்து, பெரிய பெரிய கைத்தொழிற்சாலைகளையும் பெரிய வாணிக நிலையங்களையும் அவற்றிற்குக் காவலாக அழியாத நிதி நிலையங்களையும், அவை அழியாதபடி காக்க அவற்றைத் தாங்கி நிற்கும் அரசியல் கட்சிகளையும், பொருளாதாரத் திட்டங்களையும், அனைத்தையும் காக்கப் பெரிய பெரிய தரைப்படை, விமானப்படை, கடற்படை முதலிய படைகளையும், இந்தப் படைகளைக் கொண்டு அழிவுவேலை ஆற்றலுடன் நடைபெறுமாறு வெடிகுண்டு, நச்சுப் புகை, அணுக்குண்டு முதலிய போர்க் கருவிகளையும் கண்டு அமைத்துள்ளது. பணவேட்டைக்குச் செல்வாக்கும் அரசியல் தலைமையும் தற்காப்பு வன்மையும் வாய்த்துள்ளன. இவற்றிற்கு இடையில் அறநாட்டம் எங்கோ ஒரு மூலையில் பழங்காலத்துப் பண்டமாற்றுப்போல் ஒடுங்கி நிற்கின்றது.

அறம் - பணம் : போர்

ஆனாலும் அறம் வெல்லும்; பணம் தோற்கும். இந்த வெற்றியும் தோல்வியும் வந்தே தீரும். வெற்றி தோல்வி காண்பதற்கு உரிய போர்க்களம் இன்று வரையில் அமையவில்லை; இப்போதுதான் அமைந்துள்ளது. அவ்வாறு அமைந்திருப்பதைப் பல துறையிலும் விழிப்புடன் காண வல்லவர்களுக்கு உண்மை விளங்கும்.

முதலாவதாக, குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். இன்று குடும்பத் தளவில் காதல் வாழ்க்கை நடத்தும் கணவன் மனைவி இருவர்க்கும் பிணக்கோ பூசலோ பிரிவோ முறிவோ நேர்ந்தால், அவை பெரும்பாலும் பணத்தை அடிப்படைக் காரணமாகக் கொண்டிருப்பதை உணரலாம். காதலே இல்லாத ஆணும் பெண்ணும் பணம் கிடைப்பதே காரணமாகக் கணவனும் மனைவியுமாக வாழ்க்கை நடத்துவதையும், பணம் கிடைக்கும் நெறியில் முட்டுப்பாடு நேர்ந்தால் உடனே பிரிவும் முறிவும் செய்தலையும் காணலாம். தாய் தந்தையர்க்கும் மக்களுக்கும் நடக்கும் பூசல்களுக்கும் பணமே பெரும்பாலும் அடிப்படையாக இருப்பதைக் காணலாம். உடன்பிறந்தார் தம் உறவையும் கடமையையும் மறந்து செய்யும் பூசல்களுக்கும் வழக்குகளுக்கும் அடிப்படையில் பணமே காரணமாக விளங்குவதைக் காணலாம். பணம் உள்ள இடத்தில் சுற்றமும் நட்பும் பெருகுதலும் இல்லாத இடத்தில் சுருங்குதலும் காணலாம். ஆகவே அறம் ஒரு பக்கம் நிற்க, பணம் பல்வேறு வடிவம் எடுத்துக் குடும்பத்தளவில் போர் தொடங்கி இருக்கின்றது. அறத்தின் கோயில்களாக விளங்க வேண்டிய இல்வாழ்க்கை, காதல், ஆண் - பெண்-உறவு, பெற்றோர்-மக்கள்-அன்பு, உடன் பிறந்தார், கடமை, சுற்றத்தார் தொடர்பு, நட்பு என்பவைகளின் இடத்தையெல்லாம் பணம் கைப்பற்றிக் கொண்டிருக்கும் போது, அமைதி இருக்க முடியுமோ?

ஏழைப்பெண் செல்வமுள்ள ஆணைக் காதலிக்க முடியவில்லை. வறியவனான ஆண் செல்வக் குடும்பத்துப் பெண்ணை விரும்புவதற்கும் இடம் இல்லை. இவ்வாறு காதலிலும் திருமணத்திலும் இல்வாழ்க்கையிலும் பணமுள்ள இடமும் பணமில்லா இடமுமாகத் தெளிவான பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. ஏழைகளுக்கு ஏழைகளே சுற்றத்தாராக அமைவதும் நண்பராக அமைவதும், செல்வர்க்குச் செல்வரே அமைவதும் காணலாம். ஆகவே, நட்பிலும் சுற்றத்திலும் பணம் காரணமாகத் தெளிவான பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன.

இவ்வாறே இனத்தை இடமாகக் கொண்டும் பணம் போர் தொடங்கி யிருக்கின்றது. இன்று இனங்கள் பலவாகப் பிரிந்து ஓர் இனம் மற்றோர்

இனத்துடன் பகைத்து நிற்பதைக் காணலாம். அந்தப் பகைக்கு அடிப்படையில் பணம் காரணமாக இருக்கின்றதே அல்லாமல், உண்மையான இனப்பற்றுக் காரணமாக இருக்கவில்லை; ஓர் இனத்தால் பல ஏழைகள் ஒன்று சேர்ந்து, தம் வறுமைக்கும் துன்பத்திற்கும் காரணம் மற்றோரினத்தில் உள்ள செல்வர்கள் என்று எண்ணும் எண்ணம் வளர்ந்து விட்டது. ஆகவே இனத்தின் பெயரால் பணம் பிரிவுகளை அமைத்து விட்டது.

இவ்வாறே நிறத்தின் பெயரால் ஒருவகை மக்கள் மற்றொரு வகையாருடன் பகைத்து வாழ்கின்றார்கள். ஒரு நிறத்தார் வறுமையால் வாடி, தம் வறுமைக்குக் காரணம் மற்றொரு நிறத்தார் செய்யும் கொடுமையே என்று எண்ணுகின்றார்கள். இவர்களோ தம் செல்வ வளத்தைக் கண்டு அவர்கள் பொறாமைப்பட்டுக் கலகம் செய்வதாக எண்ணுகின்றார்கள். இவ்வாறு பெயரளவில் நிறம் காரணமாக வைத்துக்கொண்டு, பணப் பெருக்கமும் வறுமையும் உண்மைக் காரணமாகக் கொண்டு பூசலும் புன்மையும் பெருக்கி வாழ்கின்றார்கள். நிறத்தின் பெயரால் பணம், பகை அமைத்துள்ள கதை இது.

ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாருடன் பகைத்து வாழ்வதற்கும் அடிப்படைக் காரணம் இப்படிப்பட்டதே. ஒரு வகுப்பார் சீரும் செல்வமும் பெற்று மற்றொரு வகுப்பாரைக் கைத்தூக்கிவிடாமல் வறுமையிலே விட்டு ஒதுங்கினால், தாழ்வுற்று வருந்தும் வகுப்பார் முன்னேற்றம் பெற்றவர்களோடு பகை வளர்க்க இடம் ஏற்படுகின்றது. வகுப்பின் பெயரால் பணம் போர் தொடங்கியுள்ள நிலை இது.

மதத்தின் பெயரால் மக்கள் பிளவுபட்டு நிற்பதும் இப்படிப்பட்டதே. ஒவ்வொரு மதத்தாரிலும் ஏழைகளும் உண்டு; செல்வரும் உண்டு. ஏழைகள் தாம் படும் துன்பங்களுக்கு எல்லாம் காரணம் மற்ற மதத்தார் செய்யும் கொடுமைகளே என்று ஆத்திரம் கொள்ளுகின்றார்கள். செல்வர்களோ தமக்கு வரும் இடையூறுகளுக்கு எல்லாம் மற்ற மதத்தாரின் பொறாமையும் பகையுமே காரணம் என்று புழுங்குகின்றார்கள். இந்த ஆத்திரமும் புழுக்கமும் தீமை விளைக்காமல் அடங்குவதில்லை; மதத்தின் பெயரால் கொலையும் கொள்ளையும் கொடுமை பலவுமாய் வெளியாகின்றன. உண்மைக் காரணம் மதம் அல்ல; பண வேட்டையே அடிப்படையில் இருந்து இந்தக் கொடிய கொள்ளையும் கொலையும் செய்கின்றது. இதுதான் மதத்தின் பெயரால் பணம் அமைக்கும் போர்க்களம்.

உலகப்போர் என்ன பெயர் கொண்டு தொடங்குகின்றது? நாட்டுப்பற்று (தேசாபிமானம்) என்னும் பெயரால் தொடங்குகின்றது. ஆனால் உண்மையை ஆராய்ந்தால், ஒரு நாடு மற்றொரு நாட்டைப்போல், அல்லது அதைவிட மிகுதியாகப் பணத்தைப் பெருக்க வேண்டும் என்று செய்கின்ற முயற்சியே இந்தப் பெரும் போர்களுக்குக் கால்கோள் விழாவாக அமைகின்றது. மற்ற நாட்டைப் போல் பணப் பெருக்கம் வேண்டுமானால், கைத்தொழிற் பொருள்களை விற்கச் சந்தைகள் வேண்டும்; அடங்கி உதவ வறிய நாடுகள் வேண்டும், மூலப்பொருள்களை அனுப்ப வேறுநாடுகள் வேண்டும். இவ்வாறு சந்தைகளும் நாடுகளும் வசப்பட வேண்டுமானால் படை வல்லமை வேண்டும், படை வல்லமையால் எழுந்து தலையெடுக்கும் மற்ற நாடுகளை அடக்கி ஒடுக்க வேண்டும், இடையூறுகள் செய்யும் மற்ற நாடுகளை எதிர்த்து ஒழிக்க வேண்டும் என்று இவ்வாறே படிப்படியே பணவேட்டை உலகப்போராக மூண்டு, மக்கள் தொகையில் பெரும் பங்கை அழித்துவிடுகின்றது. நாட்டுப்பற்று என்ற பெயரால் பணவேட்டை போர்த் தொல்லையை விளைக்கும் கதை இது.

பணக்கவலை இன்று எவரையும் விட்டபாடில்லை. யாரோ சில ஏழைகளைத்தான் பணக்கவலை வாட்டுகின்றது என்று எண்ணிவிடக் கூடாது. கூலிவேலைக்காரர்க்கு அந்தந்த வேளைக்கு வேண்டிய வயிற்று உணவு பற்றிய கவலை இருக்கின்றது. தொழிற்சாலைகளில் உள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கு அந்த வாரத்து உணவுக்கு வேண்டிய பணத்தைப் பற்றிய கவலை இருக்கின்றது. கற்றுப்பட்டம் பெற்றுக் 'குமஸ்தா' முதலான வேலைகளில் உள்ள எழுத்துத் தொழிலாளர்க்கும் அந்தந்த மாதத்துச் செலவுக்கு வேண்டிய பணக்கவலை இருக்கின்றது. சிறு கடைகளில் வியாபாரம் செய்கின்றவர்களுக்கும் அந்தந்தக் காலத்துச் செலவுக்கு வேண்டிய பணக்கவலை உள்ளது. பெரிய கடைகளை உடைய வியாபாரிகளுக்கு அந்தந்த ஆண்டுக்கு உரிய வருவாய் பற்றிய பணக்கவலை உள்ளது. நிதிநிலையம், பங்குநிலையம் முதலியன வைத்து நடத்தும் பெரிய வியாபாரிகளுக்கும் மற்றவர்களைப்போல் பெருஞ்செல்வராக வாழவேண்டுமே என்ற பொல்லாத பணக்கவலை உள்ளது. பல ஆண்டுகள் கழிந்த பிறகு தம் முதுமையில் தேவையான பொருள் வேண்டும் என்ற பணக்கவலை, தம் வயிற்றில் பிறக்கும் மக்களுக்கும் அவர்களுடைய மக்களுக்குமாகப் பொருள் சேர்த்து வைக்க வேண்டும் என்ற பணக்கவலை என்று எப்படியெல்லாம் பணக்கவலை வேறு வேறு வடிவம்கொண்டு வளர்ந்து வருகின்றது. வயிறு நிறைகின்ற வரைக்கும் வயிற்றைப் பற்றிய கவலை, வயிறு நிறைந்த பின் வீடு வாசல் நகை பற்றிய கவலை, அவைகளும் நிறைந்த பின் பெட்டி பேழை நிதிநிலையம் முதலியன நிரம்புதல் பற்றிய கவலை: இவ்வாறு வெவ்வேறு வளர்ச்சி இருந்து வருகின்றது.

மூட்டை தூக்கிக் கூலிவேலை செய்வது முதல் மின் விசிறியின் கீழே அமர்ந்து கையெழுத்து இடுவது வரையில் எல்லா முயற்சிகளும் பணக்கவலை பற்றிய முயற்சிகளே. கப்பலில் கடல் கடந்து சென்று முயலும் முயற்சி, கடல் புகுந்து நீரில் மூழ்கிச் செய்யும் முயற்சி, வானக்கப்பலில் ஏறிச் சென்று செய்யும் முயற்சி, நிலம் கடந்து நெடுந்தொலைவு சென்று செய்யும் முயற்சி, நிலம் குடைந்து ஆழத்தில் சென்று அஞ்சுதலோடு செய்யும் முயற்சி, மின் வலியாலும் மற்ற விஞ்ஞானக் கருவிகளாலும் வியக்கத் தக்க முறையில் செய்யும் பல்வேறு முயற்சிகள் எல்லாம் பணவேட்டை காரணமாக ஏற்பட்டவைகளே.

அறம் அழியாது

ஆயினும், இவ்வளவு முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாகின்றன. மக்கள் பலரும் பண வேட்டைக்கு அடிமையாகி அலைகின்றார்களே அல்லாமல் பணத்தைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்று அமைதியாக வாழ முடியவில்லை. பணம் கருவி, வாழ்வே குறிக்கோள். ஆனால், இன்று என்ன ஆயிற்று? வாழ்வுக்கு வழி இல்லை; பணத்திற்கே அலைந்து அலைந்து அழிவதாக இருக்கின்றது. வாழ்வு ஒரு வீடு; பணம் சமையலுக்கு உதவும் என்று சேர்த்த நெருப்பு. வீட்டில் வாழக் கொண்டு வந்த நெருப்புப் பற்றி எரியத் தொடங்கி வீட்டையே அழிக்கின்றது. வீடும் போகின்றது; சமையலுக்கும் இடமில்லை; நெருப்பு மட்டும் கொழுந்துவிட்டு ஓங்கி எரிகின்றது. எரியட்டும்; எல்லாம் போகட்டும்; மனிதன் இருக்கின்றான்; பல்லாயிர ஆண்டுகளாக வளர்ந்துபெற்ற மக்கட் பண்பையும் உயிராற்றலையும் எந்தத் தீயும் அழிக்க முடியாது; இவற்றைக் கொண்டு வேறு வீடு கட்ட முடியும்; இந்த வீடு பற்றி எரிந்த பிறகு, இதனால் கற்ற உண்மையை மறக்காமல், அந்த புதிய வீட்டில் நெருப்புக்குத் தனி இடமும் தனி அடுப்பும் வைத்துப் பற்றி எரியாதபடி காத்துக்கொள்வான்; எதற்குக் கொண்டு வந்த நெருப்பு என்பதை மறக்காமல் அதற்குப் பயன்படுத்துவான். வயிற்றில் பசி கிள்ளும்போது சமையலை மறக்க முடியுமா? புதிய வீட்டில் புதிய முறையில் நெருப்பை வேலியிட்டுக் காத்துச் சமையல் செய்து பசியைத் தணிக்கக் கற்றுக்கொள்வான்.

மனிதன் மனத்தில் உணர்வு உள்ள வரையில் அறத்தை அழிக்க முடியாது. இன்னொருவன் படும் துன்பத்தைக் கண்டால் நெகிழும் மனப்பண்பு உள்ள வரையில் அறம் இருந்தே தீரும். பசி உள்ள வரையில் சமையலை

மறக்க முடியாததுபோல், மனப்பண்பு உள்ள வரையில் அறத்தை மறக்க முடியாது. அறத்தைக் காக்கத் துணை செய்யும் என்று போற்றிய அந்த நெருப்பு - பணம் - இன்று வாழ்வையே பற்றி எரித்துக் கொழுந்துவிட்டு ஓங்குகின்றது; அறநாட்டத்திற்கே இடமில்லாமல் செய்துவிடுகின்றது. போகட்டும்; பழைய சமுதாய அமைப்பு மறைந்து சாம்பலானால், புதிய சமுதாய அமைப்பு ஒன்றைக் காண மக்களால் முடியும்! அந்த அமைப்பில் பணம் இருக்கும்; பணவேட்டைக்கு இடம் இருக்காது. அறம் வாழும்; அறநாட்டம் அடிப்படையில் சமுதாயத்திற்குப் பயன்பட்டு வாழ்க்கை திருந்தும். அன்று தான் விமானங்களில் வானில் பறக்கக் கற்ற மக்கள், கப்பல்களாலும் நீர்மூழ்கிகளாலும் கடலில் நீந்தவும் மூழ்கவும் கற்ற மக்கள், நிலத்திலும் அமைதியாகவும் இன்பமாகவும் வாழ முடியும் என்பதை மெய்ப்படுத்துவார்கள்; பணம் ஒரு கருவி, அறம் நெறி, வாழ்வே குறிக்கோள் என்பதை மெய்ப்படுத்துவார்கள்.

## 3. அறத்தின் ஆட்சி

### தவறான ஏக்கம்

வாழ்க்கையில் உள்ள குறையை உணரவல்லவர்கள் பெருகினால் குறை ஒழியும் நாள் விரைவில் வரும். ஆனால், குறையை இவ்வாறு உணராமல் பணவேட்டைக்கு இரையாகின்றவர்களின் தொகையே மிகுதியாக இருக்கின்றது. வயிற்று உணவுக்கே வழி இல்லாதவர்கள் வீடும் வாசலுமாக வாழ்கின்றவர்களைப் பார்த்து ஏங்குகின்றார்கள்; அவர்களைப் போல் ஓரளவு பொருள் கிடைத்துவிட்டால் கவலை எல்லாம் தீர்ந்து போகும் என்று எண்ணி மயங்குகின்றார்கள். வீடும் வாசலுமாக வாழ்கின்றவர்களோ நகையும் பகட்டுமாக வாழ்கின்றவர்களைப் பார்த்து ஏங்குகின்றார்கள்; அவர்களைப் போல் பொன்னும் பொருளும் பெற்றுவிட்டால் கவலையற்ற வாழ்வு கிட்டிவிடும் என்று எண்ணி கலங்குகின்றார்கள்; நகையும் பகட்டுமாக வாழ்கின்றவர்களோ பங்கும் பாங்கியுமாக வாழ்கின்றவர்களைப் பார்த்து ஏங்குகின்றார்கள்; அவர்களைப்போல் பெரிய வாணிகப் பங்கும் நிதிநிலையப் பொறுப்பும் பெற்றுவிட்டால் எல்லாக் கவலையும் அகன்றுவிடும் என்று ஆசைப்படுகிறார்கள். வாணிகத்திலும் பிறவற்றிலும் பொருள் குவித்தவர்களோ, மற்றவர்கள் கொள்ளும் பொறாமையையும் செய்யும் பொல்லாங்குகளையும்

கண்டு ஏங்குகின்றார்கள்; அரசியல் பதவியும் ஆட்சியுரிமையும் நிலையாகப் பெற்றுவிட்டால் மற்றவர்களைத் தலையெடுக்காதபடி மயக்கி அடக்கிவிட்டால், கவலை தீர்ந்த வாழ்வு வாழ முடியும் என்று நம்பி அரசியலைக் கைப்பற்ற அலைகின்றார்கள். இந்த ஆசைகளுக்கு ஓர் அளவே இல்லை; அலைவுகளுக்கு ஓர் எல்லையே இல்லை. ஒரு வகையாரைப் பார்த்து மற்றொரு வகையார் பொறாமைப்பட்டுப் பணவேட்டையிலும் முடிவில் பணவேட்டைக்கு அரண் செய்வதற்காக அரசியல் வேட்டையிலும் உழல்கின்றார்கள்.

இன்று ஒருவருடைய இன்ப துன்ப உணர்வுகளை அளந்தறிய முடியவில்லை. உள்ளத்தில் கவலையும் துன்பமும் பெருகியிருந்தாலும் வெளியே பகட்டாக வாழ்கின்ற வாழ்க்கையைக் கண்டு, அவர்கள் இன்பமாக வாழ்வதாக மற்றவர்கள் எண்ணுகின்றார்கள்; அவர்களைப் போல் பணம் சேர்த்துப் பகட்டாக வாழ்ந்தால் இன்பம் கிடைக்கும் என்று மயங்குகின்றார்கள். இந்த மயக்கத்தைப் போக்குவது எப்படி? அவர்கள் வாழும் வாழ்க்கையை ஆராய்ந்து காட்ட வேண்டும். அவர்கள் உள்ளத்திலும் பணக்கவலையும் அதன் காரணமாக மற்றக் கவலையும் இருப்பதை உணர்த்த வேண்டும். அதை எப்படிச் செய்வது?

ஒருவன் இன்புறுகின்றானா, அல்லது துன்புறுகின்றானா என்பதைக் கண்ணும் செவியும் காட்ட முடியுமா? புறத்தில் அழுக்கற்ற ஆடை ஒளி வீசலாம்; ஆனால் அகத்தில் அழுக்காறு நெளியலாம். புறத்தில் செல்வக் கோலம் திகழலாம்; அகத்தில் 'இல்லையே, போதவில்லையே' என்று வறுமை வாட்டலாம். புறத்தில் பெருமை விளங்கலாம், அகத்தில் சிறுமை இருக்கலாம். புறத்தில் வீரம் தோற்றலாம்; அகத்தில் கோழைத் தன்மையும் அச்சமும் இருக்கலாம். இவைபோலவே, புறத்தில் இன்பம் விளங்கலாம்; அகத்தில் துன்பம் வதைக்கலாம்.

உடம்பினுள் எந்த எலும்பு எவ்வாறு இருக்கின்றது என்பதையும் எந்தக் கருவி எவ்வாறு வேலை செய்கின்றது என்பதையும் ஊடுருவிக் கண்டு அறிவதற்கு எக்ஸ்ரே என்னும் சிறந்த கருவி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. உடம்பு அப்படியே இருக்கும்போதே அதன் உள் அமைப்புகளைக் காண அந்தக் கருவி பெருந்துணை செய்கின்றது. இவ்வாறே, புறத்தோற்றம் அப்படியே இருக்கும்போதே, அதை ஊடுருவிச் சென்று அகத்தில் உள்ள இன்ப துன்ப உணர்வுகளை அறிவிக்க வல்ல ஒரு புதிய கருவி அமைந்தால் உலகம் எவ்வளவோ சீர்ப்பட்டு விடும். இன்ப துன்பம்

உள்ளத்தில் உணரும் உணர்வுகளே என்று உலகம் உணர்ந்து கொண்டால், செல்வருடைய புறத்தோற்றத்தைக் கண்டு மற்றவர்களும் பணவேட்டைக்குப் புறப்படமாட்டார்கள். ஏழைகளின் புறத்தோற்றத்தைக் கண்டு ஒதுக்கவும் மாட்டார்கள். அற நெறியைக் கடைப் பிடித்து வாழ்கின்றவர்கள் உள்ளத்தில் அமைதியாகவும் இன்பமாகவும் விளங்குவதைத் தெளிந்து கொள்வார்கள். அற நாட்டம் இல்லாமல் அலைந்து அலைந்து பணம் குவிப்பவர்களின் உள்ளத்தில் கவலையும் குழப்பமும் துன்பமும் விளங்குவதையும் தெளிவாக உணர்வார்கள்.

உயர்ந்த புலவர்கள் தம் கலைத்திறமையால் இதை ஓரளவு விளக்கியுள்ளார்கள். செல்வாக்கும் செல்வமும் நிரம்பியவர்கள் உள்ளம் உடைந்து வருந்தி அழியும் காட்சியை அவர்களின் கலை காட்டுகின்றது. வறுமைக்கும் இடையே இடையூறுகளுக்கு நடுவே வாழ்ந்தவர்கள் செம்மையும் பெருமிதமும் குன்றாத உள்ளமும் விழுமிய நோக்கமும் உடையவர்களாய் வாழ்ந்த காட்சியையும் அவர்களுடைய கலை தெளிவாக்குகின்றன.

கலையின் வாயிலாகவோ, புதிய ஒரு கருவியின் வாயிலாகவோ, உண்மையாக இன்புறுகின்றவர்கள் யார் என்றும், உண்மையாகத் துன்புறுகின்றவர்கள் யார் என்றும் உலகம் உணர்ந்து கொண்டால் இந்தப் பணவேட்டையை மங்கச் செய்யலாம்; அற நாட்டம் உடையவர்கள் இடர்ப்பட்டாலும் இன்னலுற்றாலும் அமைதியாக வாழ்ந்து சிறப்புறுகின்றார்கள் என்பதை உலகம் உணர்ந்து கொண்டால், அறத்தின் பெருமையும் எளிதில் விளங்கி விடும்.

அகத்தில் இன்ப துன்ப உணர்வுகளை ஆராய்ந்து உண்மையான இன்ப வாழ்விற்குக் காரணம் கண்டு அற நாட்டம் கொள்ளாமல் போனாலும் போகட்டும். புறத்தில் நிகழும் நன்மை தீமைகளையாவது நன்றாக ஆராய்ந்தாலும் போதும்; இந்த ஆராய்ச்சியின் பயனாக அற நாட்டம் அமையும். நன்றாக ஆராயாதபடி உள்ள நோயும் சோர்வும் உடனே பயன் தருகின்ற மயக்கப் பொருளை நாடத் தூண்டுகின்றனவே அல்லாமல், நின்று பயன் தருகின்ற பத்திய முறையையும் கலைத் துறையையும் நாடுமாறு செய்யவில்லை. வாழ்க்கை முறையிலும் அரசியலிலும் குடிகாரராக மாறிவிட்ட பலரும் குறுகிய நோக்கம் ஒழிந்து நன்மை தீமைகளை ஆராய்வது எப்படி?

ஊழ்

முன்னோர்கள் ஒரு வழியை அமைத்து ஆராய உதவினார்கள். அறத்தின் ஆட்சி முறையை ஊழ் என்று பெயரிட்டு விளக்கினார்கள். அறம் இயற்கையாவது போல, ஊழ் இயற்கையின் சட்டமாகின்றது. அந்த ஊழ் வலியது, வெல்ல முடியாதது. விடாது தொடர்வது என்றார்கள். இதை விளக்கமாக உணர்த்தினால் குறுகிய நோக்கம் ஒழியும் என்று நம்பினார்கள். இன்று எப்படியாவது வெற்றி பெற்று நல்ல நிலையில் வாழ்ந்தால் போதும் என்று நாளை வாழ்க்கையைப் புறக்கணிப்பது குறுகிய நோக்கம் அல்லவா? அப்படிப்பட்டவர்களைப் பார்த்து, "வாழ்க்கை என்பது இன்று அல்லது இந்தத் திங்கள் அல்லது இந்த ஆண்டு என்று வரையறுக்க முடியாதது. இன்றுள்ள வாழ்க்கையைத் திடீரென்று அமைத்துவிட முடியாது. நேற்று வரை வாழ்ந்த வாழ்க்கையின் அடிப்படையில் இன்றைய வாழ்க்கை அமைகின்றது. இன்றைய வாழ்க்கையில் முளையும் முளையே நாளைய வாழ்வாக வளர்கின்றது. ஆகவே நினைத்தவுடனே ஒரு மரத்தைப் படைத்து வளர்த்துச் செழிக்கச் செய்து அதன் நிழலில் அமைந்திருக்க முடியாது. நெடுங்காலத்திற்கு முன் இட்ட வித்தே இன்றைய வாழ்க்கையாகிய மரம். இந்த மரத்தில் கனியும் கனிகளே நாளை வாழ்விற்கு உரிய வித்துக்களை உடையவை. நாளைய வாழ்வு என்னும் மரம் செழிக்க வேண்டுமானால் நல்ல வித்து இப்போதே விதைத்து வளர்க்க வேண்டும். எதை விதைக்கின்றீர்களோ அது விளையும். விதைக்கும் போது கவலைப்படாமலிருந்துவிட்டு அறுக்கும் போது அல்லல்பட்டால் பயனிருக்காது. ஆகையால் நல்லதைச் செய்யுங்கள் நல்லது விளையும்", என்று எடுத்துரைத்தார்கள்.

இந்த உண்மையை உணர்ந்து ஊழை மதிக்கத் தொடங்கினால், குறுகிய நோக்கம் ஒருவாறு ஒழியும். இன்றே வெற்றி பெற வேண்டும். அதற்காக என்ன தீமையாவது செய்ய வேண்டும் என்னும் தன்னலமும் தகாத செயலும் இல்லாமல் காத்துக் கொள்ளலாம். இன்று தோல்வி வந்தாலும் வரட்டும், இடர் வந்தாலும் வரட்டும் நாளை வாழ்வு சீர்ப்படும் என்னும் பொறுமையும் நம்பிக்கையும் வளரும். மெல்ல மெல்லக் காலங்கடந்து நோக்கும் பரந்த நோக்கம் பெறலாம். இந்த நல்ல நோக்கத்தோடு தான் முன்னோர்கள் ஊழை விளக்கினார்கள். அதன் வழியாக அறத்தின் பெருமையை விளக்கிப் பரந்த நோக்கம் கொள்ளச் செய்தார்கள்.

ஆனால் முன்னோர்கள் ஊழைப்பற்றி விளக்கியபோது, காலத்தால் பரந்த நோக்கத்தை மட்டுமே விளக்கினார்கள். அதாவது, இன்று என்று வரையறைப்படுத்தித் தன்னலத்தால் நோக்கும் நோக்கத்தைக் கடந்து நேற்றைய வாழ்வின் தொடர்பையும் நாளைய வாழ்வின் அமைப்பையும்

எண்ணச் செய்தார்கள். இது மட்டும் போதாது; காலத்தால் பரந்து நோக்கி எதிர்காலத்தை உணர்வது மட்டும் போதாது. இடத்தாலும் பரந்து நோக்கும் நோக்கம் வேண்டும். இன்றைய வாழ்வுக்கு மற்றக்காலங்கள் எவ்வளவு தொடர்பாக அமைந்திருக்கின்றனவோ, அவ்வாறே இந்த ஓர் உடம்பின் வாழ்வுகளும் தொடர்பானவை; ஒன்றுக்கு ஒன்று காரண காரியமாக அமைந்தவை. ஒரு குடும்பத்தின் வாழ்வுக்கு மற்றக் குடும்பங்களின் வாழ்வும் காரணமாக இருக்கின்றது. ஒரு வகுப்பாரின் வாழ்வுக்கு, ஓர் இனத்தாரின் வாழ்வுக்கு, மற்ற வகுப்பு இனங்களின் வாழ்வும் காரணமாக இருக்கின்றது. ஒரு நாட்டின் வாழ்வுக்கு மற்ற நாடுகளின் வாழ்வும் காரணமாக இருக்கின்றது. இவ்வாறு உலகமெல்லாம் ஒருவகையாகப் பிணைக்கப்பட்டு ஒரு பகுதியின் நன்மை தீமைகளுக்கு மற்றப் பகுதிகளின் நன்மை தீமைகள் காரணமாக இருக்கின்றன. இதை உணர்வதே இடத்தால் பரந்த நோக்கம் ஊட்டுவதாகும்; இதுவே ஊழ் இடம்பற்றி ஆட்சி புரியும் பகுதியாகும்.

இந்தப் பகுதியை முன்னோர்கள் அவ்வளவு தெளிவாக விளக்கவில்லை. அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவ்வாறு விளக்கவேண்டிய காரணம் எழவில்லை. காலத்தின் தொடர்பால் வாழ்க்கை மாறி அமையும் நிலைமை அவர்கள் வாழ்ந்த போது இருந்தது. ஆனால், இடத்தின் தொடர்பால் அமையும் நிலைமை இல்லை; ஒரு நாட்டு வாழ்க்கையால் மற்றொரு நாடு மாறி அமையும் நிலைமை இல்லை; இன்று உள்ள அவ்வளவு இல்லை. முன்கண்டவாறு, அந்தக் காலம் தனி மனிதர் வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் இன வாழ்க்கையும் விளங்கிய காலம்; காலால் நடக்கும் நிலையும், மாட்டுவண்டிப் பயண நிலையும், குதிரை வண்டிப் பயண நிலையும் இருந்த காலம். நாட்டுக்கு நாடு தொடர்பு பட்டு உலகமெல்லாம் ஒரு சேரப் பிணைக்கப்பட்ட வாழ்க்கை - புகைவண்டிப் பயண நிலை - அந்தக் காலத்தில் இல்லை. ஆகையால் முன்னோர்கள், காலத்தால் பரந்த ஊழ்ப் பகுதியைத் தெளிவாக விளக்கினார்கள்; இடத்தால் பரந்த ஊழ்ப் பகுதியை அவ்வாறு விளக்கவில்லை.

குடும்ப வாழ்க்கை நன்றாக அமைந்து சீரெய்திய காலம் ஆகையால், குடும்ப அளவில் அந்த ஊழ்ப் பகுதியை விளக்கியிருக்கின்றார்கள். ஒருவன் செய்யும் நல்வினை அவனுக்கே அல்லாமல் அவனுடைய குடும்பத்தாருக்கும் நன்மை செய்யும் என்றும், ஒருவன் செய்யும் தீவினை அவனையும் கெடுத்து அவனுடைய குடும்பத்தையும் சாரும் என்றும் முன்னோர்கள் ஒருவாறு விளக்கியிருக்கின்றார்கள். இது அந்தக் காலத்திற்குப் போதும். குடும்ப வாழ்க்கை என்பது இன வாழ்க்கையாய்ப் பரந்து எல்லை கடந்து

உலகக் குடும்பமாய் விரிந்துள்ள இந்தக் காலத்திற்கு அது போதாது. அந்தக் காலத்தில் தம் குடும்பத்தின் அளவில் நின்று தம் முயற்சியால் வீடு கட்டி, தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் உடை முதலியவற்றையும் தாமே செய்து கொள்ளும் நிலைமை இருந்தது. தம் சிற்றூரில் கிடைக்காத உப்பு முதலியவற்றையும் பண்டமாற்று மூலமாகவே பெற்றுக் கொள்ள முடிந்தது. மற்ற ஊர்களின் உதவியையும் மற்ற நாடுகளின் உதவியையும் அவர்கள் எதிர்பார்க்க வேண்டியதில்லை. இந்தக் காலத்திலோ, மற்ற ஊர்களின் உதவியும் மற்ற நாடுகளின் உதவியும் இல்லாமல் தனி ஒருவன் தனக்கு வேண்டிய உணவு முதலியவை பெற்று வாழ முடியாது. இந்தக் காலத்து மனிதன் குடும்பத்தில் பழகும் அளவுக்கு ஏறக்குறைய உலகத்திலும் பழகுகின்றான். குடும்பம் என்ற சிறிய எல்லை விரிந்து விரிந்து உலகம் என்ற பெரிய எல்லையை அணுகி வருகின்றது எனலாம். அல்லது, உலகம் என்ற பெரிய எல்லை சுருங்கிச் சுருங்கிக் குடும்பம் என்ற சிறிய எல்லையை நெருங்கி வருகின்றது எனலாம். இன்றைய வாழ்க்கையில் குடும்பம் ஓர் உலகமாக உள்ளது; உலகமும் ஒரு குடும்பமாக உள்ளது.

வினை விளைவு

தனியே நின்று ஒத்த இருவர் செய்யும் பழங்காலத்துப் போர் போன்றது அந்தக் காலத்து ஊழ்வினை விளைவு. கூடி நின்று பலர் செய்யும் போர் போன்றது, இந்தக் காலத்து ஊழ்வினை விளைவு. தனியே விதைத்துத் தனியே அறுப்பது அந்தக் காலத்து முறை. கூட்டமாகக் கூடி விதைத்துக் கூடி அறுப்பது இந்தக் காலத்து முறை. இன்று ஒவ்வொருவர் எண்ணத்திற்கும் செயலுக்கும் அவருடைய சூழ்வு - சுற்றுப்புற உலகம் - காரணமாக இருக்கின்றது. ஒவ்வொருவர் செய்யும் நன்மை தீமையிலும் உலகம் முழுமைக்கும் பங்கு இருக்கின்றது. எங்கோ விளையும் மண்ணெண்ணெய் உலகம் முழுமைக்கும் பயன்படுவது போல, எங்கோ நடக்கும் போர் உலகம் முழுமைக்கும் அல்லல் விளைப்பது போல, எவரோ எந்த நாட்டிலோ செய்யும் நன்மை தீமைகள் எல்லார்க்கும் எல்லா நாட்டுக்கும் உரியவை ஆகின்றன. இட்லர் செய்த செயல்களும் உலகத்தைத் தாக்கின. காந்தியடிகள் ஆற்றிய தொண்டுகளும் உலகத்தைத் தாக்கின. இவர்கள் செல்வாக்கு மிகுந்தவர்கள்; ஆகையால் ஆற்றல் மிக்க தீமை நன்மைகளை விளைத்தார்கள். செல்வாக்குக் குறைந்த வேறு வேறு நாட்டு உழவர்களும் தொழிலாளர்களும் தம் தம்மால் இயன்றதைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் செயல்களும் ஓரளவு நன்மை தீமைகளை உலகத்திற்குப் பொதுவாக விளைத்துக் கொண்டிருக்கின்றன.

இன்றும் தனி மனிதனாய் ஒருவன் செய்யும் செயல் அவனுக்கே தனியாக விளைந்து நன்மை அல்லது தீமை செய்கின்றது. "நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்" என்பது இன்றைக்கும் உண்மையாகவே உள்ளது. அது போலவே, குடும்பத்தைச் சார்ந்து குடும்பத்திற்காக ஒருவன் செய்யும் வினை அந்தக் குடும்பத்தைத் தாக்குகின்றது. இனத்தை சார்ந்து இனத்திற்காகச் செய்யும் நல்வினை தீவினையும் இவ்வாறே அந்த இனத்தைத் தாக்குகின்றன. நாட்டைச் சார்ந்து நாட்டிற்காகச் செய்யும் நன்மை தீமையும் இவ்வாறே பயன் விளைக்கின்றன. இனி வருங்காலத்தில், இவை எல்லாவற்றையும்விட உலகத்தைச் சார்ந்த நன்மை தீமைகளாகவே பல செயல்களும் பயன் விளைக்கும்.

அகப்பற்றும் புறப்பற்றும்

ஒருவன் விடும் மூச்சு உலகத்தில் பரந்து உலவும் காற்றோடு கலந்து உலகத்தார் அனைவரையும் ஓரளவு தாக்குகின்றது அல்லவா? அவன் விடும் மூச்சில் நோய் பரப்பும் நுண்ணுயிர் இருந்தால் அவை எங்கும் கலந்து மற்றவர் உட்கொள்ளும் மூச்சில் புகவில்லையா? ஒருவன் தனியே இருந்து புகைக்கும் நறுமணம் அவ்வாறே எங்கும் கலந்து எவர்க்கும் பொதுவாகின்றது. உலகத்தில் உள்ள தட்பவெப்பங்களும் அந்த அந்த இடங்களுக்கே சிறப்பாக உரியவை ஆயினும், பொதுவாக உலகத்தில் உள்ள எல்லாப் பகுதிகளையும் ஓரளவு தாக்குகின்றன. மக்களின் எண்ணங்களும் செயல்களின் பயன்களும் இவற்றைவிட நுட்பமானவை; ஆற்றலுடையவை; ஆகவே உலகத்திற்குப் பொதுவாக உலகமெல்லாம் பரவக்கூடியவை.

இவ்வாறு 'நான்' என்ற தனி எண்ணத்தை (அகங்காரத்தை) 'எனது' என்ற தனி உரிமையை (மமகாரத்தை)யும் குறுகிய நோக்கம் என்று ஒழித்து, எல்லாம் ஆன பரம்பொருளையும் எல்லாம் கடந்த கடவுள் தன்மையையும் பரந்த நோக்கமாக வற்புறுத்த எழுந்த உயர்ந்த கொள்கையில் பிறந்ததே ஊழ் என்பதாகும். ஆனால், குறுகிய நோக்கமுடைய மனிதன்-தன்னலம் உடைய மனிதன்-அந்த ஊழையும் தன் குறுகிய நோக்கத்திற்கும் தன்னலத்திற்கும் பயன்படுத்தி வருகின்றான். எப்படியாவது பொருள் சேர்த்து வைத்துக்கொண்டு, தன் ஒருவனுடைய நல்வினையால் சேர்ந்த பொருள் என்றும், தன் ஒருவனுக்கே உரியபொருள் என்றும், அகப்பற்றும் புறப்பற்றும் (அகங்காரம், மமகாரம்) கொண்டு நாத்திகனாக நடக்கின்றான். மனச்சான்று தன்னோடு போராடும் போது, ஏதேனும் இரண்டு உதவியும் அருச்சனையும்

செய்துவிட்டு, அவை தான் செய்தவை என்றும், அவற்றின் பயன் தனக்கே உரியவை என்றும் நாத்திக நெறியிலேயே நம்பி மயங்கி மனச்சான்றை அடக்கிவிட முயல்கின்றான். இவையெல்லாம் அறநெறிக்கு முற்றிலும் மாறுபட்டவை. குறுகிய நோக்கத்தை ஒழிக்கப் பிறந்த ஊழ் குறுகிய நோக்கத்தை வளர்க்கப் பயன்பட்டது. தன்னலத்தை வெல்லுவதற்காகக் காணப்பட்ட ஊழ் தன்னலத்தைப் பெருக்குவதற்குப் பயன்பட்டது. ஆனால் குறுகிய நோக்கம் உடையவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ள முடியுமே அல்லாமல், ஊழை ஏமாற்ற முடியாது.

எல்லையற்று விரிவாக உணர்கின்ற நல்லுணர்வே வாழ்க்கை என்றும், குறுகிக் குறுகிச் சுருங்கி நிற்கின்ற உணர்வே சாவு என்றும், விவேகாநந்தர் முழங்கியுள்ளார். தனி மனிதன் சொத்து உரிமையே மெய்ந்நெறிக்குப் புறம்பானது என்றும், குற்றம் என்றும் இராமதீர்த்தர் வற்புறுத்தியுள்ளார். இவற்றை எல்லாம் ஆத்திகர் எண்ணிப் பார்க்காமல் புறக்கணிப்பதால்தான், உலகத்தில் அறம் தேய்கின்றது.

இனம் - ஊழ்

செல்வர்கள் என்று ஓர் இனமாய் இயைந்து வாழ்கின்றவர்களைக் காண்கிறோம். அவர்கள் தம்மைப் போல் செல்வமுள்ளவர்களிடமே பழகுகின்றார்கள்; பொருள் கொடுத்தல் வாங்கலும் செல்வரிடமே செய்து கொள்கின்றார்கள். பெண் கொள்வதும் கொடுப்பதும் இவ்வாறே பண்டமாற்றுப்போல் செல்வர்களிடத்திலேயே பழக்கப்படுத்திக் கொள்கின்றார்கள். ஏழைகளிடம் பணம் சேராதபடியும் தம்மிடமே பணம் திரளும்படியும் தக்க ஏற்பாடுகள் செய்கின்றார்கள். அதன் பயனாக, அவர்களிடம் உள்ள பொருளைக் கவரவும் திருடவும் கொள்ளை கொள்ளவும் ஏழைகளின் மனத்தில் எண்ணங்கள் எழுகின்றன. அவர்களிடமிருந்து தம்மையும் தம் பொருளையும் காத்துக் கொள்வதற்காகச் செல்வர்கள், வீட்டுக்குப் பூட்டும் தாழும் காவலும் படையும் பிறவும் அமைத்துக் கவலைப் படுகின்றார்கள். பக்கத்தில் உள்ளவர்களின்மேல் ஐயமும் நம்பிக்கைக் குறைவும் ஏற்பட்டால், அந்த மனத்தில் கவலைக்கு அளவு உண்டா? தனித்திருக்கும்போதும் தனியே செல்லும் போதும் இருண்ட இராக்காலத்திலும் எல்லாரும் உறங்கும் காலத்திலும் செல்வர்களின் மனத்தில் இன்பம் இல்லை. அமைதியும் இல்லை. துன்பமும் குழப்பமுமே உண்டு. தம் வாழ்க்கைக்குச் சிறு கருவியாய் வயிறு வளர்ப்பதற்கு இவ்வளவு கவலையும் அல்லலும் அடைகின்றார்கள். இனத்தின் தீவினையாக விளைவது இது.

இந்தச் செல்வ இனத்தாரில் ஒருவர் இருவர் மிக நல்லவர்களாக, ஈரநெஞ்சு உடையவர்களாக இருக்கலாம். பாவம்! அவர்களையும் இந்தத் தீவினை விடுவதில்லை. நல்லவர்களான அவர்களும் அல்லலுக்கும் கவலைக்கும் ஆளாகின்றார்கள். இதுவே இனம் பற்றிய ஊழின் வலிமை.

அறிவுச் செல்வம் உடையவர்களும் இவ்வாறு ஓர் இனமாகச் சேர்ந்து வாழ்ந்து மற்றவர்களை ஒதுக்கி வாழும் வாழ்விலும் இப்படியே தீவினைகள் விளைகின்றன. அவர்கள் அறிவில்லாத மக்களைப் புறக்கணித்தும் அடக்கியும் தம் வரையில் முன்னேற்றம் பெறுகின்றார்கள். உலக வாழ்க்கையில் இப்படி ஒதுங்குவதும் அடக்குவதும் தீவினையே. இந்தத் தீவினையின் விளைவால் அறியாமை மிக்க மக்களிடையே ஒருவன் தோன்றிச் செல்வாக்குப் பெறுகின்றான்; எதிர்க்கும் ஆற்றலைத் திரட்டுகின்றான்; வலிமையைப் பெருக்குகின்றான். மக்களோ அவனுக்கு எல்லா வழியிலும் துணைசெய்து தலைமையும் தருகின்றார்கள். அவன் யாருக்குத் தலைவன்? பெரும்பாலோருக்குத் தலைவன் அல்லவா? ஆகவே, வாய்ப்புக் கிடைத்தபோது அறியாத மக்களை மட்டும் அல்ல, அறிஞர்களையும் ஆளத் தொடங்குகின்றான். அறிஞர்கள் அப்போது என்ன செய்கின்றார்கள்? தாம் சிறுபான்மையோர் என்பதை உணர்ந்து வருந்துகின்றார்கள்; அவனுடைய ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து வாய் திறக்காமல் பணிசெய்யத் தொடங்குகின்றார்கள். எழுதுகோல், துப்பாக்கி முனைக்கு அஞ்சி அடங்கி வணக்கம் செலுத்தும் கதை இது. "கற்றவர்கள் கல்லாதவன் கீழ் வணங்கித் தொழில் செய்து வயிறு வளர்க்க வேண்டுமா? தலைவிதிதான்" என்று அப்போதுதான் முணுமுணுக்கின்றார்கள். ஆனால், ஊழ் யாரைவிடும்? அறிவில்லாப் பொதுமக்களை உயர்த்த முயலாமல், அவர்களுக்குத் தம்முடைய அறிவுச் செல்வத்தை வழங்காமல் தனியே ஒதுங்கி வாழ்ந்த தீவினையே இவ்வாறு விளைகின்றது. அறிஞர்களில் நல்லவர் ஒருவர் இருவர் இருந்து பொதுமக்களிடம் அன்புகொண்டு தொண்டு செய்கின்றார்கள். அவர்களையும் இந்த ஊழ்விடாமல் துன்புறுத்துகின்றது.

ஒழுக்கச் செல்வம் உடையவர்களும் ஓர் இனமாக வாழ்ந்து மற்றவர்களைப் புறக்கணித்தால் தீமையே விளைகின்றது. ஒழுக்க மில்லாதவர்கள் சில காலம் ஒதுங்கி வாழ்ந்து வருகின்றார்கள்; காலப்போக்கில் அவர்களிடையே அச்சமற்ற முரடர்கள் பிறக்கின்றார்கள்; ஆளும் வகை தேடுகின்றார்கள்; வல்லமை திரட்டித் தலைமையும் பெறுகின்றார்கள். அப்படிப்பட்ட தலைவர்கள் செல்வாக்குப் பெறும்போது, அவர்களின் ஆட்சியின்கீழ் ஒழுக்கம் எள்ளப்படுகின்றது; இகழ்ந்து தள்ளப்படுகின்றது.

போற்றப்படும் ஒழுக்கம் அஞ்சி அடங்கும் காலம் வருகின்றது. "அதோ போகின்றாரே அவருக்குப் பொய் என்றால் பிடிக்காதாம். கள் என்றால் கசப்பாம்; அடித்தால் கன்னத்தில் வாங்கிப் போட்டுக்கொள்ளும் கோழை; கட்டிய மனைவியையும் சரியாகப் பார்க்கத் தெரியாத பேதை", என்றெல்லாம் ஒழுக்கம் உடையவர்கள் இகழப்படும் காலம் வருகின்றது. எதனால் உயர்வு பெற்றார்களோ அதனாலேயே இகழ்ச்சி நேர்கின்றது. அதுமட்டும் அல்லாமல், அவர்களுடைய வயிற்றில் பிறந்த மக்களே ஒழுக்கமற்ற இளைஞருடன் சேர்ந்து ஒழுக்கத்தைப் பழித்து வாழ்வதையும் காண நேர்கின்றது. புறத்தில் இருந்த மாறுபாடும் பகையும் அகத்திலும் புகுந்து அச்சுறுத்துகின்றன. ஒழுக்கமுடையவர்களில் ஒரு சிலர் நல்ல நோக்கம் கொண்டு மற்றவர்களிடம் வெறுப்புக் காட்டாமல் அன்பு காட்டித் தொண்டு செய்யவும் முயல்வார்கள்; அவர்களும் இந்தப் பகைக்கும் பொல்லாப்புக்கும் ஆளாக நேர்கின்றது. என்ன செய்வார்கள், பாவம்! இனம் செய்த தீவினை! எளிதில் விடுமா?

உடல்நலமும் ஒருவகைச் செல்வமே ஆகும். அது பொருள்வளம் உடையவர்களுக்கே எளிதில் அமைவதாகும். காட்டில் எந்தப் பறவையும் எந்த விலங்கும் உணவு இல்லாமல் உடல் அழிந்து சாவதில்லை; இருக்குமிடம் இல்லாமல் வருந்திச் சாவதில்லை. ஆனால் மனித உடம்பு எடுத்தவர்களில் எத்தனையோ பேர் உணவு இல்லாமல் உடல் அழிந்து செத்திருக்கின்றார்கள்; செத்து வருகின்றார்கள். எத்தனையோ ஏழைமக்கள் குடியிருக்க நல்ல வீடு கிடைக்காமல், தெருச்சாய்க்கடை ஓரங்களிலும் நெருக்கமான குப்பங்களிலும் வாழமுடியாமல் வாழ்ந்து தொத்துநோய் பரவிச் சாகின்றார்கள். இவர்கள் நல்லபடி வாழ வேண்டுமானால், பறவையும் விலங்கும்போல் உணவும் உறையுளும் பெறவழி இல்லாமல் சாவதைத் தடுக்க வேண்டுமானால், வறுமை தொலையவேண்டும். இன்றைய நிலைமையில் செல்வர்க்கே நல்ல வாய்ப்புகள் வாழ்க்கையில் அமைந்திருக்கின்றன. வெட்ட வெளியைப் பரப்பாகத் தேடி நாற்புறமும் சுற்றுச்சுவர் எழுப்பிப் பலவகைப் பூஞ்செடிகளும் பூங்கொடிகளும் வளர்த்து இடைநடுவே உயர்ந்த பெரிய மாளிகையை வனப்புற வகுத்து அதனுள் இருவர் மூவராக வாழும் வாழ்க்கை செல்வர்க்கே அமைந்திருக்கின்றது. இப்படிப்பட்ட பெரிய வீடுகளில் குடியிருக்கப் போதிய மக்களும் இல்லை. ஆனால் இவற்றை அடுத்து உள்ள குடிசைகளில் வாழும் வாழ்க்கை எப்படி இருக்கின்றது? ஒவ்வொரு சிறு குடிசையிலும் காற்றும் ஒளியும் புகுவது அருமைதான். குடிசைக்குப் பத்துப் பதினைந்து இருபது முப்பது மனித உடம்புகள் அடைபட்டு நெருங்கி வாழ வேண்டும். தூய காற்றும் நல்ல நீரும் இல்லாமல் வருந்த வேண்டும். பரந்த வெளியில் பூந்தோட்டத்திற்கு நடுவே பெரிய

வீடுகளில் இருவர் மூவராகக் கொழுமையான உணவு உண்டு புரண்டு கொண்டிருக்கும் காட்சி ஒரு பக்கம்; சாய்க்கடையும் நீர்த்தேக்கமும் குப்பைகளும் சூழும் சூழல்களுக்கிடையே சிறு குடிசைகளில் பதினைந்து இருபது பேராக எளிய அரைவயிற்றுக் கஞ்சி குடித்து இரவும் பகலும் உழன்று கொண்டிருக்கும் காட்சி மற்றொரு பக்கம். பூந்தோட்டமும் பொலிவான வீடும் எவர் உழைப்பால் அமைந்தனவோ, அவர்களுக்கு நல்ல குடிசையும் இல்லை; சாய்க்கடை நாற்றத்தையும் குப்பைகளின் தீமையையும் போக்க வழியும் இல்லை. கொழுமையான உணவும் ஆடம்பரப் பொருள்களும் எவர் வியர்வையால் கிடைத்தனவோ, அவர்களுக்கு உப்பிட்ட கஞ்சியும் வயிறு நிரம்பக் கிடைப்பதில்லை. ஆகவே, தம் நன்மைக்கு வேண்டியவற்றைச் சிறப்பாக அமைத்துக் கொண்டு, அமைத்தவர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒரு முயற்சியும் செய்யாமல் கவலையில்லாமல் கைவிடுவது பாவம் அல்லவா? இவ்வாறு ஒதுக்கிய தீவினை தொடராமல் விடுமா? அது தொத்து நோய்கள் குடிசைகளில் பரவும் போது விளைகின்றது. குடிசைகளில் கிளம்பிய தொத்து நோய்க் கிருமிகள் என்ன தடுத்தாலும் தடுக்க முடியாமல், பூந்தோட்ட வீடுகளையும் அணுகி அங்கு உள்ளவர்களையும் பற்றிக் கொள்கின்றன. வளமான வீடும் நலமான உடலும் இருந்தும், இந்தத் தொத்துநோய்க் கிருமிகளின் தொல்லைக்கு இரையாக வேண்டி வருகின்றது. அந்தப் பூந்தோட்ட வீடுகளில் தொண்டுமனம் உடைய நல்ல செல்வர்களும் ஒருவர் இருவர் இருப்பது உண்டு. ஆனால் ஓர் இனமாகச் செய்த தீவினைக்கு அவர்களும் ஆளாக நேர்கின்றது.

சேமிப்பு - ஊழ்

சேமித்து வைக்கும் ஏற்பாடும் ஒரு சிலருக்கே வாய்க்கின்றது. பல திங்களுக்கு வேண்டிய அறுசுவை உணவும், பல ஆண்டுகளுக்கு வேண்டிய அழகான ஆடைகளும், பல தலைமுறைகளுக்கு அரண் செய்யக்கூடிய அரிய வீடுகளும் ஏழைகளுக்குக் கிட்டுமா? செல்வர்களுக்கே இவை கிடைப்பவை. ஆனால், ஏழைகளின் உழைப்பு இல்லையானால் அறுசுவை உண்டி ஏது? அழகான ஆடை ஏது? அரண்மனை ஏது? உழைத்து எல்லாவற்றையும் அமைத்து உதவிய மக்களைப் புறக்கணித்துவிட்டுத் தமக்கு மட்டும் நெடுங்காலத்திற்கு வேண்டியவைகளைச் சேர்த்துக் கொள்ளும் தீவினை எவ்வாறு உருத்து வந்து ஊட்டுகின்றது? போர்க்காலங்களில் அது விளைகின்றது.

அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாகும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற்று அன்று.

என்பது பண்டைக்காலத்தில் அந்தத் தீவினை உருத்துவந்த கோலத்தைக் காட்டுகின்றது. நேற்று அறுசுவை உணவை இல்லாள் அமர்ந்து ஊட்டும் காட்சியாம்; இன்றைக்கோ கையில் ஒன்றும் இல்லாத வறுமையோடு பிறர் வாயில் தேடி இரக்கும் காட்சியாம். இதோடு நிற்கவில்லை.

யானை எருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை
வினைஉலப்ப வேறாகி வீழ்வர்தம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

என்பதில் உரிமையாக மணந்த மனைவியையும் இழந்து வாடுவாராம். மனைவி இறந்து போவதானாலும் அவ்வளவு கவலை இருக்காது. மாற்றார் கைப்பற்றிக் கொண்டு போய் விடுவார்களாம். தோற்றவர்களின் மனைவியாரை வென்றவர்கள் அடிமையாக்கிக் கொண்டுபோவது அந்தக் காலத்துக் கொடுமை. இன்று இந்த நிலைமை மாறிவிட்டது. ஆனால் அந்த ஊழ்வினை வேறு வகையில் விளைகின்றது.

நெடுங்காலம் நிலையாக நிற்பதற்காகக் கட்டப்பட்ட பெரிய கட்டடங்கள் அந்தக் காலத்திலும் பகைவரால் அழிக்கப்பட்டன. இந்தக் காலத்திலும் பகைவர் விமானங்களில் வந்து வெடிகுண்டுகளை எறியும்போது ஏழைக் குடிசைகளைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டு, இப்படிப்பட்ட பெரிய கட்டடங்களையே நாடிக் குண்டு எறிந்து அழிக்கின்றார்கள். நேற்று வரையில் கண் கொள்ளாக் காட்சியாக இருந்த மாடி வீடுகள் நொடிப்பொழுதில் கழுதை மேயும் பாழ் நிலமாக மாறுவதை இந்தக் காலத்துப் போரிலும் காண்கின்றோம். நிலைக்க வேண்டும் என்று எழுப்பிய பெரிய கட்டடங்களே முதலில் நிலையாமை அடைகின்றன. இதற்கு ஏழைமக்கள் காரணம் அல்ல. ஆனால், அவர்களை அடக்கி ஆட்சி புரிந்து அவர்களுடைய உழைப்பால் வளமாக வாழ வேண்டும் என்று இந்த நாட்டுச் செல்வர்களுக்கும் அவா; அந்த நாட்டுச் செல்வர்களுக்கும் அவா. அதனால் போட்டியும் பொறாமையும் மிகுந்து இரண்டு நாட்டுச் செல்வர்களும் போர் செய்கின்றார்கள். ஏழை மக்களை ஏதுமற்ற கண்மூடிகளாக வைத்திருக்கும் தீவினை, செல்வர்களாகிய

ஆளும் மக்களுக்குள் பொறாமையை மூட்டிப் பகையைப் பெருக்கிப் போரை விளைக்கின்றது; நிலையானவற்றை நிலைக்கவிடாமல் அழிக்கின்றது; சேமிப்பிற்காகச் செய்த முயற்சிகளை எல்லாம் பாழ்படுத்துகின்றது. ஏமாறுவதற்கு உரியவர்களாக மக்களைக் கண்மூடி வளர்த்து வரும் கொடுமை இல்லாதிருந்தால், ஏமாற்றுகின்றவர்கள் இந்தத் தொல்லைக்கு இரையாக மாட்டார்கள். கூலிக்காக வெடிகுண்டு எறிந்து வயிறு வளர்க்கும் கூட்டம் திரண்டிருக்காது. படை என்று பெயர் பெற்றுச் சிறப்படைந்திருக்காது. ஊழின் வலிமையே வலிமை. ஏமாறக் கற்பித்த தீவினை ஏமாற்றுவோரையே முதலில் அழிக்கின்றது.

இவற்றை எல்லாம் கண்டு கண்டுதான், பாரி, பண்ணன் போன்ற பெருஞ்செல்வர்கள் அருள் நெஞ்சம் உடைய வள்ளல்களாக மாறி விடுகின்றார்கள்; திருநாவுக்கரசர் இராமாநுசர் போன்ற சிறந்த அறிஞர்கள் வாழ்நாள் எல்லாம் தொண்டர்களாக வாழத்துணிகின்றார்கள். புத்தர், ஏசு, காந்தி போன்ற ஒழுக்க ஞாயிறுகள் தீயவரிடையே வாழ்ந்து அவர்களை உயர்த்துவதே குறிக்கோளாகக் கொள்கின்றார்கள்; அசோகர், டால்ஸ்டாய் போன்ற பெருந்தலைவர்கள் பொருள் வேட்டையைத் துறந்து அற நாட்டத்தை வலியுறுத்தி வாழத் தலைப்படுகின்றார்கள்.

நம்பிக்கை - தெளிவு

அறத்தின் முறை ஊழ் - இப்படிப்பட்டது என்பதை விளக்கவே முன்னோர்கள் பொது மக்களுக்குத் துறக்கம் என்றும் நரகம் என்றும் கற்பித்தார்கள்; இம்மை என்றும் மறுமை என்றும் விளக்கினார்கள்; நல்வினை என்றும் தீவினை என்றும் பகுத்தார்கள். ஆனாலும், மக்களில் பெரும்பான்மையானவர் இவற்றை உணர்வதில்லை. பலர் நம்புகின்றார்களே என்று கூறலாம்; நம்புவது வேறு. உணர்வது வேறு. குடிகாரன் கள் தீமையானது என்று நம்புகின்றான்; ஆனால் உணர்வதில்லை. உணர்ந்திருந்தால் உடனே திருந்தியிருப்பான். நம்பிக்கை என்பது அறியாமையை அடிப்படையாகக் கொள்வது;

உணர்வு என்பது அறிவு தெளிந்தபின் நிகழும் மாறுதல் ஆகையால், இன்றைய உலகத்தில் ஊழின் வலிமையை உணர்ந்தவர்கள் குறைவு; அதனால்தான் பெரும்பாலோர் தீமையே செய்கின்றார்கள்; செய்த பிறகு கழுவாய்-மாற்று-தேடுகின்றார்கள்; அதுவும் முடிந்த பிறகு எல்லாம் மறந்து பழையபடியே வாழத் தொடங்குகின்றார்கள்.

ஒரு சாரார் கிடைத்த வேர்க்கடலையை உடனே உரித்துத் தின்னத் தொடங்குகின்றார்கள். மற்றொரு சாரார் உழுத நிலத்தில் அவற்றை விதைத்துப் பயன் கிடைக்கும் என்று காத்திருக்கின்றார்கள். உடனே உரித்துப் தின்னும் கூட்டமே இன்று பெரும்பான்மையாக இருக்கின்றது. அவர்கள் மற்றவர்களைப் பார்த்து இகழ்கின்றார்கள்; "பித்தர்கள், வேர்க்கடலையை வாயிலிட்டுச் சுவை நுகராமல் மண்ணில் புதைத்து உணவு இழக்கின்றார்கள்," என்று எண்ணுகின்றார்கள். நின்று பயன் தரும் அறத்தின் ஆட்சி முறையை உணர்கின்ற பொறுமை இன்று பலருக்கும் இல்லை. உடனே பயன் தரும் பணத்தெய்வத்தையே நம்புகின்றார்கள்; சான்று காட்டித் தெளிகின்றார்கள்.

இனி, உண்மையைத் துணிவாகவும் தெளிவாகவும் நேராகவும் எடுத்துச் சொல்வதே கடமை. தீமை செய்தவன் துன்பப்படுகின்றான் என்பதை அவனுடைய மனத்தை ஆராயும் வகையால் விளக்க வேண்டும். நன்மை செய்தவன் இன்புறுகின்றான் என்பதையும் அவ்வாறே விளக்க வேண்டும். மற்றவர்களுக்காக நன்மை செய்தவன் அல்லல் அடைந்து கண்ணீர் விடுகின்றானே என்று உலகம் கேட்கும். ஆனால், கண்ணீர் அப்போது காண்பதே என்றும் அகத்தில் அமைதியும் ஆற்றலும் உள்ளன என்றும் தெளிவாக்க வேண்டும். மற்றவர்களுக்குத் தீமை செய்தவன் கலகல
என்று சிரித்துக் களிப்பதைக் கண்டு உலகம் மயங்கும்; ஆனால் சிரிப்பும் களிப்பும் ஒரு நாளை இன்பமே என்றும், அவனுடைய மனச்சான்று அடங்கியிருந்தாலும் பிறகு மெல்ல எழுந்து வருத்திவிடும் என்றும் தெளிவுபடுத்த வேண்டும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இன்ப துன்ப நுகர்வுகள் தசையிலும் எலும்பிலும் நரம்பிலும் குருதியிலும் இல்லை என்பதையும், உள்ளத்திலேயே உள்ளது என்பதையும் தெளிவாக்க வேண்டும். கொடுமை பல செய்கின்றவன் மாடி வீட்டிலேயே வாழ்ந்தாலும் மனம் கலங்கி உறக்கம் இழந்து துயரப்படுவதை உலகம் அறிய வெளிப்படுத்த வேண்டும். நன்மை பல செய்கின்றவன் புறத்திண்ணையில் கிடந்தாலும் மனச்சான்றின் காவலின் கீழ் அமைதி பெற்று விளங்குவதையும் உலகம் உணர வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறே சார்ந்த கூட்டம் பற்றியும், வாழும் நாடு பற்றியும், இருக்கும். உலகம் பற்றியும் செய்யும் நன்மை தீமைகளே, இடம் பற்றிய ஊழாக வந்து சேரும் முறையையும் விளக்க வேண்டும். ஊழ் என்பது காலம் இடம் என்னும் வரையறை கடந்த அறத்தின் ஆட்சிமுறை என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

### தனி ஒருவர் சிறப்பு

கோயிலுக்குச் செல்லும் முறை, வழிபடும் வகை, பிரார்த்தனை நெறி முதலியவற்றில் தனி மனிதன் சிறப்புக்கு இடமிருக்கக் கூடாது. வெளி வாழ்க்கையில் இருக்கும் வேறுபாடுகளையே ஒழிக்க வேண்டும் என்று அறிஞர்கள் தொண்டு செய்து வரும் இந்தக் காலத்தில், எல்லோருக்கும் பொதுவான கோயிலில் இருக்கும்போதாவது, தனி ஒருவனைப் பற்றிய எண்ணங்கள் தொலைய வேண்டாமா? அங்கே பணத்தை ஒட்டியோ அறிவை ஒட்டியோ வேறு வேறு காரணம் பற்றியோ ஒருவன் பெருமைக்கு இடம் தரக்கூடாது. இன்னார் சிறப்புப் பெறவேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் கெட்ட வழக்கமும் கூடாது. சில மதத்தாரிடம் அங்கும் போட்டி மனப்பான்மை மிகுதியாக இருக்கின்றது. நீ முந்தி நான் முந்தி என்று அமைதி இழந்து அலையும் போராட்டத்திற்கு அங்கே இடம் தரலாமா? தனி ஒருவன் பெயரைச் சொல்லி வழிபாடு செய்யவோ தனி ஒருவன் பெயரைப் பொறித்து வைக்கவோ இடம் தருவதும் அறம் அல்ல. கூட்டமாகச் செல்லும் காலத்திலும் அமைதியும் ஒழுங்கும் இருக்க வேண்டும். ஏழை, செல்வர், அறிஞர், அறிவிலார் முதலான எந்த வேறுபாடும் இல்லாமல் ஒத்த உரிமையே அந்தக் கூட்டத்திலும் இருக்க வேண்டும். முன் இடத்திற்கு உயர்வும் பின் இடத்திற்குத் தாழ்வும் கற்பிக்கும் கொடுமை ஒழிய வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்க நெஞ்சத்தோடு சேர்ந்து வழிபாடு இயற்றிப் பழக வேண்டும். சில மதத்தாரிடையில் இந்தப் பொறுமையும் ஒழுங்கும் அமைதியும் கோயிலைப் பொறுத்தவரையிலாவது காணப்படுகின்றன. சில மதத்தாரிடையில் கோயிலிலும் போட்டியும் ஆரவாரமும் குழப்பமும் மலிந்துள்ளன. உலகமெல்லாம் ஒரு குடும்பமாக முன்னேற முயல்கின்ற இந்தக் காலத்தில் இந்தக் குறை இருக்க இடந்தரக்கூடாது. அன்பு நெறியைப் பரப்பப் புகுந்த பெரியோர்கள் கோயிலளவில் மக்களுக்குள் எந்த வேறுபாடும் கருதாமல் எல்லோரையும் ஒரு குடும்பத்தாராக மதித்து நடந்து வழி காட்டியிருக்கின்றார்கள். ஆனால், வழக்கம்போல், உலகம் அவர்கள் காட்டிய வழியை மறந்து அவர்களை மட்டும் போற்றி வருகின்றது.

தனி ஒருவர் செய்யும் கோயில் கட்டுதல், பள்ளி வைத்தல் முதலிய அறச்செயல்களைப் போற்றுவதும் நீங்க வேண்டும். அவர் செய்யும் அறச்செயலைப் போற்றுவதனால் அவருக்கு மேன்மேலும் நல்லெண்ணம் வளரும். அதனால் இன்னும் பல அறச்செயல் செய்வார் என்று நம்புவது கூடாது. அப்படித் தன் புகழ்ச்சியாகிய தன்னலம் கருதி ஒருவர் செய்யும் அறச்செயல் வளர்வதைவிட வளராமல் இருப்பதே நல்லது. மறுமையின்பம் கருதிச் செய்யும் அறச்செயலும் விரும்பத்தகாததே. 'அறவிலை வாணிகம்'

என்று பழங்காலத்துச் சான்றோர் இதைப் பழித்திருக்கின்றார்கள். அவ்வாறு புகழ்வதால் நன்மை விளைந்த காலத்திலேயே அதைக் கடிந்து பேசியிருக்கின்றார்கள் என்றால், இந்தக் காலத்தில் எவ்வளவு தீமை என்று சொல்ல வேண்டியதில்லை. அறத்திலும் கடமையிலும் எல்லோருக்கும் ஒத்த பங்கு இருக்க வேண்டும் என்று உணர்கின்ற இந்தக் காலத்தில் ஒரு சிலருடைய அறச் செயலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும் அவர்களைப் புகழ்வதும் அறிஞர் கருத்தில் புகாமல் காக்க வேண்டும். வாய்ப்பு நேர்ந்து அவர்களுக்கு ஏதேனும் அறிவுறுத்தவேண்டி வந்தாலும், "வலக்கையால் செய்த அறச்செயலை இடக்கை அறியாதவாறு செய்க", என்று சான்றோர் சொன்னவாறு சொல்வதே நல்லது. அதற்காகச் சிறப்புக் கூட்டங்களும் புகழுரைகளும் நிகழ்த்தக்கூடாது. நிகழ்வனவற்றில் அறிஞர் கலந்து கொள்ளாமல் ஒதுங்குவதே அறக்கடனை வழிபடும் முறையாகும். அவர்களைப்பற்றிப் பிறரிடம் ஏதேனும் சொல்ல நேர்ந்தாலும், அவர்கள் கடமை இன்னது என்று உணர்ந்தார்கள் என்றும், அதனால் கடமையைச் செய்தார்கள் என்றும் உண்மையை மட்டுமே சொல்ல வேண்டும். இல்லையானால், தமக்கு உரிமை இல்லாததைத் தமது என்று உணர்ந்து பெருமை கொண்டு அறம் செய்வதாக முடியும்; அப்படிப்பட்டவர்களைப் புகழ்வதால் உலகத்தில் 'எனது' என்னும் செருக்கை வளர்க்கும் குற்றம் அறிஞர்களைச் சாரும்.

தனி மனிதன் மான உணர்ச்சியால் செய்யும் செயல்களையும் அவ்வாறே போற்றிப்புகழக்கூடாது. தனி ஒருவரின் மானம் என்பது அவருடைய புலனடக்கத்தைப் பற்றியாவது, ஒழுக்கத்தைப் பற்றியாவது, சொல் தவறாது நடத்தல் முதலிய காரணம் பற்றியாவது இருக்கலாம். அது பொதுமக்களால் புகழத்தக்கபடி அவ்வளவு வெளிப்படையானதாக இருக்க வேண்டியதில்லை. தன் குடும்பம் என்ற மானம் குடும்பத்தளவில் இருக்க வேண்டும். தன் ஊர் என்ற மான உணர்ச்சியும் ஊர்க்கடமையில் இருக்க வேண்டும். தன் நாடு என்ற மான உணர்ச்சியும் நாட்டுக் கடமையில் இருக்க வேண்டும்; தனி மான உணர்ச்சியை ஊர்க் கடமையில் காட்டுவதோ, குடும்ப மான உணர்ச்சியை நாட்டுத் தொண்டில் புகுத்துவதோ மானமும் அல்ல; வீரமும் அல்ல; ஊர்க்கும் நாட்டுக்கும் தீமையான செயல்களே ஆகும். இப்படி ஏதாவது செயல் செய்தாலும் அறிஞர்கள் எந்தக் காரணத்தாலும் அவர்களைப் புகழாமல் இருப்பதே நல்லது. புகழ்ந்தால் உலக வளர்ச்சிக்குத் தடையான சில உணர்ச்சிகளை வீரம் மானம் முதலான நல்ல பெயர்களால் வளர்க்கும் குற்றம் சாரும். சில நாட்டுப் போர்கள் சில அரச குடும்பங்களின் மான உணர்ச்சியால்

தோன்றி வளர்ந்து பல அழிவுகளை உண்டாக்கிய உண்மையை வரலாறுகளில் படிக்கின்றோம். தனி மனிதனின் வாழ்க்கை எல்லை வரையறுக்கப்பட்டு விளங்கும் இந்தக்காலத்தில் அத்தகைய அழிவுகள் நேராமல் காக்க வேண்டும். இப்படி மான உணர்ச்சியை இடத்திற்கு ஏற்றவாறு அமைத்துக்கொண்டு பொது நோக்கம் வளர்க்கின்ற நாடுகள் முன்னேற்றம் அடைவதையும், மான உணர்ச்சியை இடவரையறை இல்லாமல் போற்றும் நாடுகள் பிற்போக்கு அடைவதையும் இன்று காணலாம். நாட்டுத் தொண்டில் ஈடுபட்டபோது, நான் இன்ன குடும்பத்தான் இன்னான் என்னும் சிறு எல்லைகளையும் அவை பற்றிய மான உணர்ச்சிகளையும் நினைக்காமல் தொண்டு செய்யும் நாகரிகம் வேண்டும்; இந்த நாட்டு மக்களுள் ஒருவன் என்ற நாட்டு மானம் பற்றிய எண்ணத்தோடு தொண்டு செய்யும் பண்பாடு வேண்டும். அப்படிச் செய்தால் தன் சொந்தப் பகைவரையும் குடும்பப் பகைவரையும் நாட்டுத் தொண்டு காரணமாகக் காணும்போது பகையுணர்ச்சி வளராமல் அன்புணர்வு வளரும். அதுபோலவே, குடும்பக் கடமை மேற்கொண்ட போது தனி மான உணர்ச்சியை விட்டுக் கடமையைச் செய்து பழகினால் குடும்பம் முன்னேறும். இந்தப் பண்பாடு வந்தால்தான் கருத்து வேற்றுமைக்கு மதிப்புத் தர மனம் வரும்; கருத்து வேற்றுமைக்கு இடையே பலரும் ஒற்றுமைப்பட்டு நாட்டின் பொதுக்கடமையைச் செய்யும் பழக்கம் வரும். இல்லையானால், குடும்பங்களில் இரண்டு மூன்று பிரிவு, ஊர்களில் நாலைந்து பிளவு, நாட்டில் ஏழெட்டுக் கட்சி, அந்தக் கட்சிகளுக்குள் பத்துப் பதினைந்து உட்பிரிவுகள், அந்த உட்பிரிவுகளில் உள்ளவர்களும் நெல்லிக்காய் மூட்டைபோல் ஒட்டாமல் உதிர்ந்து சிதறும் சிறுமை எல்லாம் வாழும். நாட்டின் நன்மையைக் கருதுகின்ற நோக்கம் எல்லோருக்கும் இருந்தாலும் நாட்டைத்தந்திரக்காரருக்கும் தன்னலக்காரருக்கும் இரையாக்கிவிட்டு ஏங்கும் நிலைமை நீடிக்காமல் செய்வதற்கு இதுவே வழி. ஆகவே, தனி ஒருவரின் வீரத்தையோ மானத்தையோ போற்றுவதால், நம்மை அறியாமல் நாட்டைக் கெடுக்கின்றோம். பிற்போக்குக்குத் தள்ளுகின்றோம் என்று நம் குற்றத்தை உணர வேண்டும். பக்கத்து ஊரார் தன்னைப் பழித்தார்கள் என்று கேள்வியுற்று, அந்த ஊரை அழிக்க ஒருவன் படை திரட்டினான் என்று வைத்துக்கொள்வோம். அவனை அறிஞர்கள் புகழ்வது அறமா? பழித்தவர் யார் என்று அறியாமல் ஊரை அழிக்கும் கொடுமை, தான் ஒருவன் உற்ற அவமானத்திற்காகப் பலரைத் திரட்டிப் பலருக்கும் தொல்லை கொடுக்கும் கொடுமை இந்த இரண்டையும் வரலாறுகளில் காணலாம்; உலகப் போர்களின் அடிப்படையிலும் இதுபோன்ற குறுகிய மன உணர்ச்சியைக் காணலாம். இதுவரையில் இந்த மான உணர்ச்சியைத் தவறு

என்று உணராமல் வீரம் என்று மதித்திருக்கலாம். ஆனால் இனியேனும் மாற்றுவதே கடமை. இந்தக் கடமையை அறிஞர்கள் செய்து உலகத்திற்கு வழிகாட்ட வேண்டும் 'யான்' என்னும் செருக்கைப் பொது வாழ்க்கையிலிருந்து துரத்தியடித்து அறத்தை நிலைநிறுத்தும் தொண்டு இதுவாகும்.

பொது வாழ்க்கையில் தனிப்புகழும் தனிமானமும் இடம் பெறுவது எவ்வாறு குற்றமோ, அவ்வாறே தனி விருப்பும் தனிவெறுப்பும் இடம் பெறுவதும் குற்றமாகும். பெரும்பாலான மக்கள் ஊன் உண்ணாதவர்களாக இருக்கும் விருந்தில், ஊன் உண்பவர் ஒருவர் சென்றால், பொதுநலம் கருதி, தன் விருப்பமான ஊன் இல்லாமல் உண்டுவரவில்லையா?

அதுபோலவே, கருத்து வகைகளிலும், பெரும்பான்மையானவர்களின் விருப்பம் நிறைவேறட்டும் என்று பொறுமை கொள்கின்றவனே உண்மையான நாட்டுத் தொண்டன். "என் கொள்கையை ஆதரிக்காமல் கைவிட்டார்களே. ஆகையால் இனிமேல் இந்தக் கூட்டத்திலேயே சேரமாட்டேன்", என்று எண்ணித் துணிகின்றவன் நாட்டின் பொது வாழ்க்கையில் ஈடுபடத் தகுதியற்றவன். அவனுக்கு வாக்குரிமை இருப்பது குடியாட்சி முறைக்கு ஓர் இடையூறு இருப்பதாகவே கொள்ளப்படும். அதற்கு மாறாக, "என் கொள்கைக்கு இந்தக் கூட்டத்தில் இடம் இல்லை. எல்லோரும் கைவிட்டார்கள். என் தீர்மானம் தோற்றது. ஆனாலும் செயலாளன் என்னும் பொறுப்பு என்னிடம் இருக்கின்றது. ஆகையால் அவர்கள் விரும்பிய அந்தச் செயலை நடத்தி வைப்பதே என் கடமை. என் சொந்த விருப்பத்தைச் சொன்னேன். சொல்லும் கடமை முடிந்தது. இனி அடுத்த கடமை அவர்கள் விரும்பிய போது வேலையைச் செய்வதே", என்று எண்ணித் துணிகின்றவனே பெருந்தன்மை உடையவன்; அவனே நாட்டைக் காக்க வல்ல வீரன். சமயத் துறையில் பல சமயத்தாரும் கூடிவாழ்கின்ற பொது வாழ்க்கையில் தனிச் சமயக்குறிகளை மேற்கொண்டு வேறுபாட்டை வளர்க்காமல், தன் சமயத்தார் கூடியுள்ள இடங்களில் மட்டுமே அவற்றைப் பாராட்டுகின்றவன் அறவோன்; பொது வாழ்க்கையில் பொது முறைகளையே பாராட்டுதல் அறம் உணர்ந்தவன் கடமை. காரணமில்லாமல் பொது வாழ்க்கையில் தனிவாழ்க்கையை நுழைத்து வேற்றுமை உணர்ச்சியை வளர்ப்பது பாவம் என்றும், கடவுளுணர்வுக்கு மாறானது என்றும் தெளிய வேண்டும்.

ஆகவே, உலகத்தில் அறம் வாழ வேண்டுமானால், அமைதி நிலவ வேண்டுமானால், சில மாறுதல்களைச் செய்ய வேண்டும். இவற்றைச் செய்வதே

எதிர்காலத்தில் தியாகம் என்று கருதப்படும். வீடு வாசல் முதலியவற்றைக் கொடுத்துவிடும் செயலை எதிர்காலம் தியாகம் என்று போற்றாது. அவற்றை இவர் கொடுப்பது கடமையா, தியாகமா, இவருக்கு அவற்றில் உள்ள உரிமை எவ்வளவு என்றெல்லாம் ஆராயவல்லது எதிர்காலம். ஆகையால் தனி மானத்தையும் தனி விருப்பு வெறுப்பையும் விட்டுக் கொடுத்துக் குடும்பக் கடமையைச் செய்வதே குடும்பத்திற்குச் செய்யும் தியாகமாக விளங்கும். தனி மானத்தையும் குடும்ப மானத்தையும் தனி விருப்பு வெறுப்பையும் கொண்டுவந்து புகுத்திக் கெடுக்காமல், பொதுவாழ்க்கையில் தன் பங்கு இன்னது என்று உணர்ந்து தொண்டு செய்வதே நாட்டிற்காகச் செய்யும் தியாகமாக விளங்கும்.

இவ்வாறே, தனி மனிதன் வளர்ச்சி இருந்த நிலைமை குறைந்து சமுதாய வளர்ச்சி மிகுதியாகும் இந்தக்காலத்தில், தனி ஒருவன் செல்வம், தனி ஒருவன் குற்றம், தனி ஒருவன் புண்ணியம், தனி ஒருவன் பாவம் இவற்றை எண்ணுவதும் பேசுவதும் போக வேண்டும். தனிஒருவனிடம் குற்றம் கண்டு அதற்கு அவன் காரணம் எனப் புகழ்வது அறம் அல்ல என்று உணர வேண்டும்; அவனுடைய குற்றத்திற்குக் காரணமாக இருந்து வரும் சூழ்நிலையை எண்ணிச் சமுதாயத்தின் குற்றமாகக் கருத வேண்டும். தனிஒருவன் செய்யும் செயலைப் புகழ்ந்து அந்தப் புண்ணியம் அவனுக்கு உரியது என்றும் அவன் துறக்கம் பெறுவான் என்றும் எண்ணுவது அறம் அல்ல. அந்த நல்ல செயலைச் செய்யும்படியான வாய்ப்பைச் சமுதாயம் அவனுக்குக் கொடுத்தது என்றும், அவனுக்கு மட்டும் அந்தப் புண்ணியத்தில் தனி உரிமை இல்லை என்றும் கருத வேண்டும். காந்தியடிகள் போன்ற பெரியோர்கள் பாவம் செய்தவர்களைக் கண்டு இரக்கம் கொண்டதற்கும், தாம் செய்த நற்செயல்களைப் பற்றிப் பெருமை கொள்ளாததற்கும் இந்த அறஉணர்வு இருந்ததே காரணமாகும்.

பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த பூங்குன்றனார், வாழ்க்கையில் அறத்தின் முறை ஒன்றையே மதித்து வாழ்ந்த சான்றோர்; "ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது தெளிந்தனம்", என்று தாம் தெளிந்த தெளிவை எடுத்துக் கூறி வற்புறுத்தினார். அதனால் வாழ்க்கையின் பெருமை சிறுமைகளைத் தனித்தனி மனிதர்க்கு ஏற்றிக் கூறுவது பொருந்தாது என்று விளக்கினார்; அறத்தின் முறையே பெருமையுடையது என உணர்ந்துதான், "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று உலகுக்கு

உணர்த்தினார். அவருடைய தெளிவும் துணிவும் உலக மக்களுக்கு இருந்தால், இன்று உள்ள எவ்வளவோ தொல்லைகளைத் தீர்க்க முடியும்.

## 4. கட்சி அரசியல்

பொது நோக்கம்

உலகம் முன்னேற வேண்டுமானால், அறம் செழிக்க வேண்டுமானால், இதுபோலவே சடங்குகளும் விழாக்களும் பொது நோக்கம் பெற்றுத் திருந்த வேண்டும். தனி வாழ்க்கை பற்றிய சடங்குகளும் விழாக்களும் சுருங்க வேண்டும். ஒடுங்க வேண்டும். திருமணம் முதலியவைகளுக்கு உரியவர்கள் மட்டும் சென்று நடத்தி வைக்கும் பழக்கம் வேண்டும்; பெருங்கூட்டம் சேர்ப்பது குற்றமாக, பழியாக, அநாகரிகமாகக் கருதப்பட வேண்டும். ஆனால் நாட்டுவிழா அல்லது சடங்கு, ஒரு கலைக்கழகத்தின் ஆண்டுவிழா அல்லது கொடியேற்றும் சடங்கு முதலியவைகளுக்கு எல்லோரும் திரள வேண்டும். தனி ஒருவர் பெயரால் நடக்கும் எந்தச் சடங்கிற்கும் விழாவிற்கும் கூட்டம் சேரும் முறையும் சேர்க்கும் முறையும் கடியப்பட வேண்டும். நாட்டு முன்னேற்றத்திற்கும் உலக முன்னேற்றத்திற்கும் அந்த முறைகள் முட்டுக்கட்டைகள் என்பதை உணர வேண்டும். எல்லாவற்றிலும் தம்மை மறந்து பொதுமை மேற்கொள்வதே உலகத் தொண்டர்களாக உழைத்த புத்தர், காந்தி முதலான சான்றோர் காட்டிய நெறி. ஒரு செல்வர் தம் சிறுவனைப் பள்ளிக்கூடத்தில் வைத்து எழுத்தறிவு தொடங்கும் நாளில் ஆயிரக்கணக்காகச் செலவு செய்கின்றார். ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்தின் ஆண்டுவிழா ஐந்து ரூபாய்ச் செலவில் நடக்கும்; அதற்கு வருவோர் கூட்டமும் ஐம்பதிற்கு மேல் இருக்காது. ஓர் ஊரில் ஒரு திருமணத்திற்கு ஆயிரக்கணக்காகச் சேர்வதைக் காணலாம். ஆனால் ஊர் விழாவிற்கோ, அல்லது நாட்டுக்குப் பொதுவான ஒரு நல்ல செயலுக்கோ, ஐந்து அல்லது பத்துப் பேரும் ஊக்கம் கொள்வதில்லை. தனி வாழ்க்கையில் ஆர்வம் குறைய வேண்டும்; பொது வாழ்க்கையில் ஊக்கம் மிக வேண்டும்.

'நான் இன்னான்' என்பதை மறந்து தன்னலம் இல்லாமல் நடப்பது புதிய முறை அல்ல. குடும்ப வாழ்க்கை வளர்ச்சியுற்ற அந்தப் பழங்காலத்திலும் ஓரளவு பழக்கம் இந்தத் துறையில் இருந்து வந்தது. தனியே இருக்கும்போது, ஒருவன் தன் பெயரையும் பெருமை சிறுமைகளையும் எண்ண முடியும்.

ஆனால் தன் பெற்றோரை அணுகிப் பேசும்போது, அவர்களுடைய மகன் என்ற எண்ணம் தவிர, வேறு எண்ணம் தோன்றாது. தன் மனைவியோடு பேசும் போது, அவளுடைய துணை என்ற எண்ணம் தவிர, தன்னைப் பற்றி வேறு நினைவு இருக்காது; இன்னாருடைய மகன் என்ற உறவை மறந்து பேசுவதே அப்போது உள்ள நிலைமை. தன் குழந்தைகளோடு கொஞ்சும் போதோ, "நான் இன்னாருடைய மகன், இன்னவளுடைய கணவன்" என்பவை மறந்துபோகும்; இந்தக் குழந்தைகளின் அப்பா என்ற எண்ணம் ஒன்றே நிற்கும். ஊர்ப் பொதுக் கூட்டத்திலோ பொது விழாவிலோ கலந்து கொண்டிருக்கும்போது, மகன், கணவன், தந்தை என்ற நினைவு அத்தனையும் போய், இன்ன ஊரான் என்ற எண்ணமே நிற்கும். அரசனுடைய ஆணைப்படி படையில் சேர்ந்து சென்று போர்க்களத்தில் நிற்கும்போது இத்தனை உறவும் நினைவில் உறுத்தாமல், இன்ன அரசனுக்காகப் போர் செய்ய வந்த வீரன் என்ற உணர்வு ஒன்றே நிலைக்கும். இவ்வளவு மாறுதலும் பழங்காலத்து மக்களுக்குத் தெரிந்தவைகளே. இவ்வாறு மாறி உணர்ந்தால்தான் வாழ்க்கை உண்டு என்பது அந்தக் காலத்து மக்களுக்குத் தெரியும். இப்போது இன்னும் இரண்டு படிகள் ஏறி உணர வேண்டும்; நான் இன்ன நாட்டு மனிதன் என்ற உணர்வு வேண்டும்; அதைவிடச் சிறப்பாக நான் உலகத்து மக்களுள் ஒருவன் என்ற உணர்வு வேண்டும். இவ்வாறு உணரும் உணர்வே இன்று மிகுதியாகத் தேவை. உலகம் பிணைந்து குடும்பமாக வாழும் வாழ்க்கை மிகுதியாகி வருவதே இதன் தேவைக்குக் காரணமாகும்.

இந்த நல்ல உணர்வு தலையெடுத்து மக்கள் வாழ்வார்களானால், உலகம் விரைவில் முன்னேறிவிடும். அறத்தின் அடிப்படையாக அன்பு வேண்டும் என்றும், அதற்காகவே இல்லறமும் விருந்தோம்பலும் அறத்தின் பகுதிகளாகக் கூறப்பட்டன என்றும், இந்த அன்பே வளர்ந்து வளர்ந்து எங்கும் பரந்து பாயும் அருளாக மாறுவது என்றும் திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது அல்லவா? தனி ஒருவன் என்ற தாழ்நிலையான உணர்வு மாறி மாறி உயர் நிலையான அருளுணர்வு பிறக்க வேண்டும் என்பதே பெரியோர்களின் கருத்து.

கடமையும் உரிமையும்

கடமையை ஒட்டியே இந்த உணர்வு பிறக்கும், வீட்டுக் கடமையை நினைக்கும்போது மகன் கணவன் தந்தை என்ற எண்ணங்கள் வருவது போல், உலகக்கடமையை நினைக்கும்போது அருள் உணர்வு நெஞ்சில் நிலைக்கும்.

இப்படிப் பரந்த நோக்கங்கொண்டு நினைப்பவர்கள் பெருகினால் உலகம் சீர்ப்படும். ஆனால் பெரும்பாலோர் இவ்வாறு நினைக்காமலிருப்பதற்குக் காரணம் பண வேட்டையே என்பதைக் கண்டோம். பண வேட்டையை ஒரு பக்கம் வைத்துக் கடமைப் பற்றோடு உணர வல்லவர்களுக்கும் இது ஓரளவு வெற்றி தரும். ஒரு கழகத்தின் செயலாளராக இருப்பவர் தாம் இன்னார் என்று தம் பெயரையும் பெருமையையும், நினைக்காமல், கழகக் கடமையைப் பொறுத்தவரையில் கழகத்தைச் சார்ந்த ஒருவன் என்று எண்ணுவாரானால், தம் கடமையை நன்றாகச் செய்ய முடியும். தனி ஒருவராகிய தம்முடைய விருப்பு வெறுப்பைத் தம்மோடு நிறுத்திக்கொண்டு கழகத்தில் நுழைக்காமல் காத்துக் கொள்வாரானால், அந்தக் கழகம் முன்னேறுவது திண்ணம். இப்படியே பரந்த நோக்கத்தோடு தம்மை மறந்து நாட்டுக் கடமையைச் செய்வாரானால் நாடு முன்னேறும், உலக முன்னேற்றத்திற்கு இதுவே வழி. இவ்வாறு வரவரத் தனி உணர்வு குறைந்து குறைந்து உலக உணர்வு பெருகுமாறு போற்ற வேண்டும். பழங்காலத்தில் மக்கள் வாழ்க்கை தனித்தனியாகப் போற்றப்படும் வாழை, தென்னை முதலிய மரங்களைப் போல இருந்தது. இன்றோ தோட்டமாகவும் தோப்பாகவும் போற்றப்படும் வாழை, தென்னை முதலியவை போல இருக்கின்றது. ஆனால், தனி வளர்ச்சிக்கே வாய்ப்பு இல்லையோ என்று கேட்கலாம்.

வாய்ப்பு மிகமிகக் குறைவு என்பதே அல்லாமல் வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட முடியாது. இன்று தோட்டமாக உள்ள வாழை மரங்களும் தோப்பாக உள்ள தென்னை மரங்களும் தொடக்கத்தில் தனித்தனியாக நட்டு வளர்க்கப்பட்டவைகளே அல்லவா? அவைகள் தோட்டமாகத் தோப்பாக வளர்ந்துவிட்ட பிறகும் பயன் தரும்போது தனித்தனியாகக் கவனிக்கப் படுகின்றன அல்லவா? வளர்ச்சியில் குறைபாடு தோன்றிய போதோ, அல்லது வேற்றுமை காணப்பட்ட போதோ தனியாகக் கவனிக்கப்படுகின்றன அல்லவா? எதிர்காலத்தில் மக்கள் வாழ்க்கையிலும் இந்த அளவுக்குத் தனி வளர்ச்சி போற்றப்படும். நீர் பாய்ச்சுதல், எரு இடுதல், வேலி அமைத்தல், காவல் காத்தல் முதலியவற்றில் தனி மரங்களைக் கவனித்துப் போற்றுவது இல்லை. அதுபோலவே, சில துறைகளில் தனி உரிமையும் தனி நலமும் மக்களுக்குக் கிடைக்க வழி இருக்காது. பொதுமையே நிலவும். ஆனால், கருத்தை வளர்க்கும் முறையிலே, கருத்தை வெளியிடும் வகையிலே, அன்பை வளர்க்கும் துறையிலே, தொண்டு ஆற்றும் நெறியிலே தனி உரிமை இருக்கும்; தனி நலமும் கிடைக்கும்.

காதலராய் அன்பைப் பெருக்கி வாழும் உரிமைக்கும் குடும்பம் அமைத்து வாழும் நலத்திற்கும் எப்போதும் தடை இருக்கக்கூடாது. தொண்டு செய்யும் நோக்கம் சிறந்தபோது வேறொரு தொழில் செய்யுமாறு வற்புறுத்தித் தொண்டு செய்வதற்குத் தடை செய்யக் கூடாது. தொண்டு செய்ய விரும்பும் துறையே தொழில் செய்யும் துறையாகவும் அமையுமாறு ஏற்பாடு இருக்கவேண்டும் மருத்துவத் துறையில் தொண்டு செய்ய வேண்டும் என்ற நோக்கம் உடைய ஒருவரைத் தபால் நிலையத்தில் வைத்துத் தடைப்படுத்தக் கூடாது. இப்படிப்பட்ட தனியுரிமைகள் ஒவ்வொருவருக்கும் வேண்டும். இன்று உள்ள அமைப்பில் இந்த உரிமைகள் இல்லை என்பதை மறக்கக் கூடாது. நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வெறுப்போடும் சலிப்போடும் தாம் விரும்பாத துறையில் தொழில் செய்து வருகின்றார்கள்; அறியாமையால் முதலில் ஆராயாமல் தேர்ந்தெடுத்துக் கொண்ட தொழிலை மாற்றிக்கொள்ள உரிமை இல்லாமல் வருந்துகிறார்கள். ஆகையால் இன்றைய அமைப்பில் தனி வளர்ச்சிக்கு வேண்டிய வாய்ப்பு இருப்பதாக எண்ணி ஏமாற்றமடையக் கூடாது. இன்று தனி வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்கின்றது என்றால், அது யாரோ சிலர்க்கு மேன்மேலும் செல்வமும் புகழும் தேட உரிமையும் நலமும் இருக்கின்றது என்று பொருள்; மற்றவர்களுக்கு மேன்மேலும் வறுமையும் சிறுமையும் அடைந்து தாழ்ந்து போவதற்கு உரிமை இருக்கிறது என்று பொருள். மிகச் சிலராகிய அவர்களுக்கும் போலி நாகரிகமும் சமுதாய அமைப்பும் எவ்வளவோ கட்டுப்பாடுகளை விதித்து அடக்குகின்றன; உண்மையை ஆராய்ந்தால் அவர்களும் தனி வளர்ச்சி இல்லாமல் திண்டாடி வருந்துகின்றார்கள் என்றே சொல்ல வேண்டும். மற்றவர்களைப் பற்றி ஆராய வேண்டியதில்லை. களர் நிலத்தில் விளையும் நெருஞ்சி போல் பிறந்து வளர்ந்து மடிகின்றார்கள்; எல்லோர்க்கும் ஒரு வகையான வறுமை; ஒரு வகையான சிறுமை; ஒரே வகையான புறக்கணிப்பு; ஒரே வகையான கவலை. ஆகையால் குடும்ப வாழ்க்கையிலும் உலக வாழ்க்கையிலும் இன்று இருப்பதாகக் கூறப்படும் தனியுரிமையும் நலமும் போலியானவைகளே என்பதை மறக்கக் கூடாது. உலக வளர்ச்சி அறநெறியில் அமையும் அமைப்பில், காதல் வாழ்க்கையிலும், தொழில் துறையிலும் தனியுரிமையும் நலமும் அடிப்படையாக அமையும் என்றும் தெளிய வேண்டும்.

கருத்தும் உரிமையும்

கருத்தை வளர்க்கும் துறையிலும் கருத்தை வெளியிடும் துறையிலும் தனியுரிமை வேண்டும் என்று கண்டோம். இன்று அந்த உரிமை இல்லையா? இருக்கின்றது. ஆனால் தவறான பாதையில் திரும்பியிருக்கின்றது.

எண்ணமே வாழ்வு. பலர் எண்ணிய எண்ணங்களே இன்று கலையாகவும் சமயமாகவும் அரசியலாகவும் அமைந்துள்ள எல்லாவற்றிற்கும் காரணம். ஆகவே எதிர் காலத்தில் அமையும் கலை, சமயம், அரசியல் எல்லாம் இன்று எண்ணும் எண்ணங்களைப் பொறுத்து அமையும். ஆகவே எண்ணங்களே உலக வாழ்க்கையின் வித்துக்கள். இந்த எண்ணங்கள் வளரவும் வெளிப்படவும் தரும் உரிமையே உலக வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் உரிமை.

இன்று வீசும் காற்று நாளை வரும் காற்றுக்குத் தடையாக நிற்கக்கூடாது. இன்று ஓடும் நீர் நாளை வரும் வெள்ளத்திற்குத் தடையாக நிற்கக்கூடாது. நின்றால் தேக்கம் ஏற்படும், தீமை ஏற்படும், நோய் பரவும். அவை போலவே இன்று உள்ள கலையும் சமயமும் அரசியலும் நாளைய வளர்ச்சிக்குத் தடையாக நிற்கக்கூடாது. ஆனால் இன்று கற்கத் தொடங்குகின்றவர்களுக்கு இந்தத் தடைகளே உள்ளன.

வேறொரு வகையாக எண்ணுவது குற்றம் என்றும், அறியாமை என்றும் முதல் பாடம் கற்பிக்கப்பட்டு இடையிடையே எச்சரிக்கையாகவும் புகட்டப்படுகின்றது. காரணம், இன்றைய அமைப்பில் கலையைப் பற்றிக் கொண்டு வாழ்வோர் அது மாறினால் தம் வாழ்க்கை மாறுமே என்று அஞ்சி உரிமையைத் தடை செய்கின்றார்கள். ஒரு சமயத்தைப் பற்றிக்கொண்டு அதனால் வாழ்க்கை நடத்துகின்றவர்கள் எந்த மாறுதலும் தம் வாழ்க்கையை அசைக்குமே என்று அஞ்சி உரிமையைத் தடை செய்கின்றார்கள். அரசியலில் ஒரு கட்சியைப் பற்றிக் கொண்டு முன்னேறியவர்கள் மாறுதலுக்கு இடம் கொடுத்தால் வரக்கூடிய வீழ்ச்சியை எண்ணி உரிமையைத் தடை செய்கின்றார்கள். எந்தக் கலை வந்தாலும், எந்தச் சமயம் வாழ்ந்தாலும் எந்த அரசியல் அமைந்தாலும் வாழ்க்கை உண்டு. வீழ்ச்சி இருக்காது என்று பொருளாதார நம்பிக்கை இவர்களுக்கு ஏற்படச் செய்ய வேண்டும். அதே நம்பிக்கை இருந்தால், எதிர்காலத்தைப் பற்றிய கவலை ஒழிந்து, எந்தக் கொள்கையையும் கற்று ஆராய இடம் தருவார்கள். வெறி இல்லாமல் அறிவு பெற இடம் தருவார்கள். கலை வெறி, சமயவெறி, கட்சி வெறி இவை ஒழியும். கலை அறிவும் சமய அறிவும் அரசியல் அறிவும் வளரும்; தனி உரிமை ஓங்கும்.

கருத்தை வளர்ப்பதற்கு உரிய உரிமை கிடைத்ததும் கருத்தை வெளியிடும் உரிமையும் கிடைக்கும். வளர்க்கும் உரிமையைத் தடைப்படுத்தினால் அறிவு குன்றி வெறி வளரும் என்று கண்டோம் அல்லவா? வெளியிடும் உரிமையைத் தடைப்படுத்தினால், அதைவிடப் பொல்லாத தீமை வளரும். குழந்தைக்கு வெளியுலகம் தெரியாமல் வைத்திருப்பது ஒரு வகையில் தீமை செய்யும். ஆனால் வெளி உலகம் தெரிந்த பிறகு குழந்தையை வெளியே போகவொட்டாமல் தடைப்படுத்தினால் அதைவிடப் பெரிய, பொல்லாத தீமை விளையும் அல்லவா? அந்தக் குழந்தை உடனே வீட்டைச் சிறையாக எண்ணும்; பெற்றோரைப் பகைவராக எண்ணும்; அன்போடு விளையாடுவதை விட்டு அழிவு வேலையான குறும்புகளில் தலையிடும். இதைத்தான் பொது மக்களும் கருத்து வெளியிடத் தடை நேர்ந்தபோது செய்கின்றார்கள். வாழ்கின்ற வாழ்க்கையை வெறுக்கின்றார்கள்; ஆளும் தலைவர்களைக் கொடியவர்களாகக் கருதிக் குறை கூறுகின்றார்கள்; ஆக்கவேலையை அடியோடு மறந்து அழிவு வேலையில் முனைந்து நாட்டை அல்லல்படுத்துகின்றார்கள். கருத்தை வெளியிடும் உரிமைக்குத் தடை நேரும்போது தான் இவ்வளவும் செய்கின்றார்கள்; கலை முதலியவற்றையும் பழிக்கின்றார்கள்.

இந்தத் துறையில் தனியுரிமையைத் தடைப்படுத்துவது எவ்வளவு பெரிய தீமை என்பதை உலகம் இன்னும் உணரவில்லை. சிறந்த அமைப்பாகிய குடியாட்சி முறை (ஜனநாயக முறை) குறையுற்று வருவதற்கெல்லாம் இதுவே காரணம் என்பதை உலகம் இன்னும் உணரவில்லை. அறம் வேறு அரசியல் வேறு என்று பிரித்து அறத்தின் சிறப்பைக் குறைத்து வருவது இந்தக் கொடிய நிலையே என்பதை உலகம் இன்னும் உணரவில்லை.

"புகை வண்டியில் ஏறுங்கள்; ஆனால் எங்கே போக வேண்டும் என்று சொல்லும் உரிமை உங்களுக்கு இல்லை; வண்டியை ஓட்டும் உரிமையும் உங்களுக்கு இல்லை," என்று சொல்லுவதே முடியாட்சி முறையாகும்; அதுவே தடியாட்சி முறையுமாகும்.

"புகை வண்டியில் ஏறும் உரிமை உங்களுக்கு உண்டு; எங்கே போக வேண்டும் என்ற முடிவு செய்யும் உரிமையும் உங்களுக்கு உண்டு; இன்னார் ஓட்ட வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு", என்று சொல்வதே குடியாட்சி முறை.

ஆனால் இந்த இரண்டும் கெட்ட ஒரு முறையே இப்போது பல நாடுகளிலும் வாழ்கின்றது. அதனால்தான், மக்கள் எல்லோரும் அமைதி

வேண்டும் என்று விரும்பினாலும் குழப்பமே நிறைந்திருக்கின்றது. போர் வேண்டாம் என்று வெறுத்தாலும் புதுப்புதுப் போர்கள் கிளைத்துக் கொண்டிருக்கின்றன.

புகை வண்டியில் ஏறுதல், போக வேண்டிய திசையை முடிவு செய்தல், ஓட்டவேண்டியவரைத் தேர்ந்தெடுத்தல் இந்த மூன்றிலும் மக்களுக்குத் தனித்தனி உரிமை இருக்கின்றதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். வண்டி ஓடும் போது எல்லோருக்கும் பொதுவாகவே ஓடவேண்டும்; அதில் தனியுரிமை கேட்பது ஆபத்து. வண்டியைத் திருப்பும் வாய்ப்பு, எஞ்சினை ஓட்டும் வாய்ப்பு எல்லோருக்கும் தனித்தனியாக இருந்தால், வண்டியும் ஓடாது, பயணமும் முடியாது. அங்கே பொது முடிவும் பொதுப் போக்கும் இருக்க வேண்டும். அதுபோல் உணவு, உடை, தங்குமிடம், முதலிய நலன்களைத் தனி மனிதர் கையில் விட்டு வைத்தால், உணவுப் பஞ்சம், உடைப்பஞ்சம், வீட்டுத்தொல்லை எல்லாம் அடிக்கடி வந்து வந்து உலக அமைதியைக் கெடுக்கும். ஆகையால் இவற்றைத் தனிமனிதர் கையில் விட்டு வைக்காமல், காப்பாற்றினால்தான் அரசியல் நடக்கும்; மக்கள் வாழ முடியும். ஆனால் அந்த அரசியலை எப்படி நடத்த வேண்டும், யார் நடத்த வேண்டும் (புகை வண்டியைச் செலுத்தும் திசையும், ஓட்டும் ஆட்களும் போல்) இந்த இரண்டிலும் தனியுரிமை வேண்டும். மக்கள் தனித்தனியாகத் தம்தம் கருத்தை வெளியிடும் உரிமை வேண்டும். அந்தக் கருத்துகள் பெரும்பான்மையாகத் திரளும்போது எப்படி நடத்த வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கும் சிலரிடமே நடத்தும் பொறுப்பை விட வேண்டும். இந்த அளவில் தனியுரிமை கட்டாயம் வேண்டும்.

தேர்தல்

இன்று உள்ள தேர்தலில் இந்தத் தனியுரிமை இருக்கின்றதே என்று கூறலாம். ஆனால், இந்தத் தேர்தல் முறையில் தனியுரிமை பறிக்கப்படுகின்றது என்பதை மறக்கக்கூடாது. மனிதன் மூளையுடையவன்; ஆகையால் அந்த மூளையைக் கொண்டு தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளவும் முடியும்; எதற்கு வேண்டுமானாலும் காரணம் கண்டு "ஏமாற்றமல்ல, வெற்றிதான்" என்று சொல்லிக் கொள்ள முடியும்; இவற்றைவிட, மூளை குறைந்த மற்றவர்களை ஏமாற்றுவது எளிதில் முடியும். இந்தத் தேர்தல் முறையிலும் வாக்குரிமை என்று சொல்லி எந்த உரிமையும் இல்லாதவாறு உரிமையைப் பறிக்கும் முறையையே அமைந்திருக்கக் காணலாம்.

பாராளுமன்றம் அமைச்சர் குழுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றது. அவர் அமைச்சர் குழுவை அமைத்துக் கொள்கின்றார். ஆகவே, அமைச்சரை ஏற்படுத்தும் பொறுப்பு ஒருவாறு பாராளுமன்றத்திடம் இருக்கின்றது. அந்தப் பாராளுமன்றத்தின் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பொதுமக்களுக்கு இருக்கின்றது. ஒவ்வோர் உறுப்பினரையும் லட்சக்கணக்கான மக்கள் வாக்குரிமை கொடுத்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் தனியுரிமை உணர்ச்சியால் இந்தத் தேர்தல் நடைபெறுகின்றதா?

தனியுரிமை என்றால், வாக்குரிமை கொடுப்பவர் அந்த உறுப்பினரை ஒருவாறு தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் பரந்த நோக்கம் உடையவரா அல்லவா என்பதை எப்படி முடிவு செய்வது? ஆகவே தெரிந்த ஒருவருக்குத் தான் வாக்குரிமை தருவதில் பயன் உண்டு. ஆனால், இன்று நடக்கும் தேர்தலில் என்ன முறை இருக்கின்றது? உறுப்பினர் வேலூரில் வாழும் ஒருவராக இருக்கலாம். அவருக்குச் செங்கல்பட்டு ஜில்லா மக்கள் வாக்குரிமை கொடுத்துத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. அந்த மக்களுக்கு அவர் எப்படித் தெரியும்? அவரோடு நேரில் பழகித் தெரிந்து கொண்டவர்கள் அந்த ஜில்லாவில் இருபது முப்பது பேர் இருக்கலாம். ஆனாலும் செங்கல்பட்டு ஜில்லாவில் வாழும் லட்சக்கணக்கான மக்கள் அவரைப் பற்றித் தீர்ப்புக் கூறவேண்டும் அல்லவா? அதற்காக என்ன செய்கின்றார்கள்? சென்னையில் ஒரு கட்சியின் தலைவராக இருப்பவர் அந்த உறுப்பினரை அந்த மக்களுக்கு அறிமுகப்படுத்துன்றார். அவரும் தம் விருப்பம் போல் செய்வதற்குப் பெரும்பாலும் இடம் இல்லை. அதைவிடச் செல்வாக்கு உடையவர்களைக் கேட்டு நடக்கின்றார். தம் கட்சியின் தலைமை எங்கே இருக்கின்றதோ அங்கே இருந்துவரும் ஆணைகளை மதித்து அவற்றின்படி நடந்து கொள்ளுகின்றார். இல்லையானால் தம் பதவிக்கே இடையூறு வரும் என்பது அவருக்குத் தெரியும். எப்படியோ, அவரும், அவரைவிடச் செல்வாக்கு உள்ளவர்களும், கட்சியின் தலைமைப் பொறுப்பாளருமாகச் சேர்ந்து அந்த உறுப்பினரைத் தேர்தலில் நிறுத்தி வைக்கின்றார்கள். என்ன நம்பிக்கை கொண்டு அவரை நிறுத்துகின்றார்கள்? தம் சொந்தக் கருத்துகளை வெளியிடாமல், கட்சியார் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் அதையே போற்றி, எதிர்கட்சியார் என்ன செய்தாலும் அதையெல்லாம் தூற்றி, தமக்கு அடங்கி ஆணையை மீறாமல் நடக்க வல்லவரா என்று ஆராய்ந்து தெரிந்து கொண்ட பிறகே அவரைத் தேர்தலுக்கு நிறுத்துகின்றார்கள். ஆகவே, நிற்கும் உறுப்பினர் தனி உரிமை இழந்தவர் என்பதும், யாரோ சிலர் மேலே இருந்து ஆட்டி வைத்தால் ஆடக்கூடிய அளவுக்கு உரிமை இழந்தவர் என்பதும்

தெளிவாகத் தெரிந்த பிறகே தேர்தலில் நிற்க முடிகின்றது. இது நிற்பவர் நிலைமை.

இனி அவருக்கு வாக்குரிமை கொடுக்கும் மக்களின் நிலைமையை ஆராய்வோம். கட்சியைச் சார்ந்தவர்கள் பல ஊர்களுக்கும் வருகின்றார்கள். பல மேடைகளில் ஏறுகின்றார்கள். "இப்போது தேர்தலில் நிற்பவர் யார் தெரியுமா?" என்று அறிமுகப்படுத்துகின்றார்கள்.
அவருடைய குணம் ஒன்று இரண்டு இருந்தால் அவற்றை உயர்வு நவிற்சியாகப் புகழ்ந்து பேசுகின்றார்கள். குற்றங்களை வெளிப்படுத்தவோ கனவிலும் நேராதபடி காத்துக் கொள்கின்றார்கள். அவருக்குப் போட்டியாக நிற்கும் மற்றொரு கட்சியாரின் குற்றங்களை எல்லாம் அம்பலப் படுத்துகின்றார்கள். பொது மக்களுக்கு ஒரு வகை நிலைமையை ஏற்படுத்தி மயக்குகின்றார்கள். குணம் நாடிக் குற்றமும் நாட வேண்டும் என்ற ஆராய்ச்சிக்கோ, மிகை நாடி மிக்க கொளல் என்ற தேர்தலுக்கோ பொது மக்களுக்கு உரிமை இல்லை. தலைநகரங்களிலிருந்து கட்சித் தலைவர்கள் அறிக்கை விடுகின்றார்கள். "இப்போது தேர்தலில் நிற்பவர்கள் யார் யார் என்ற கவலையே இருக்கக் கூடாது. எந்தக் கட்சியின் சார்பாக நிற்கின்றார்கள் என்பதையே நாட்டின் நன்மையைக் கருதுவோர் உணர வேண்டும். நம் கட்சியின் சார்பாக நாங்கள் நிறுத்தியுள்ள உறுப்பினர்களுக்கே வாக்குரிமை கொடுத்துக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். கட்சியின் சார்பாக ஒரு துரும்பு நின்றாலும் அந்தத் துரும்புக்கு நீங்கள் வாக்குரிமை கொடுத்தால் அதுவே நாட்டின் எதிரிகளை முறியடிக்க நீங்கள் செய்கின்ற அரிய பெரிய தொண்டு. இந்த உண்மையை மறக்காமல் போற்றித் தேர்தல் பெட்டியின் முன்னே நிற்கும்போது கடமையைச் செய்யுங்கள்", என்று அறிக்கை விடுகின்றார்கள். கட்சியின் பத்திரிகைகளோ நம் உயர்வு நவிற்சியையும் ஒரு தலைத் தீர்ப்பையும் அளவில்லாமல் பெருக்கிப் பக்கம் பக்கமாகத் தீட்டும். ஆகவே, பொதுமக்களுக்கு உறுப்பினரை ஆராயும் பொறுப்பு வந்து சேர்கிறது. அறமும் போய், ஆட்களும் போய், கட்சி என்ற ஒன்றை வணங்கி வழிபடும் நிலைமை வருகின்றது. எங்கே தனியுரிமை?

## கட்சி அமைப்பு

கட்சி என்பது என்ன? செல்வாக்கு என்பதன் கூட்டுப்பண்ணை; தனித்தனியே தம் செல்வாக்கைப் பயன்படுத்துவதில் இடையூறும் தோல்வியும் கண்டபோது, செல்வாக்குக் குன்றாமல் காக்கும் வகையில் அமைத்த கூட்டுப்

பண்ணை, தனித்தனியே உண்டிகளில் சேர்த்து வைத்தால் திருட்டுக்கும் கொள்ளைக்கும் எளிதில் இரையாக வேண்டிவரும் என்று அதை விட்டுப் பலர் சேர்ந்து நிதிநிலையம் (பாங்கி) ஏற்படுத்தி நடத்திப் பணத்திற்குப் போக்கு இல்லாமல் காத்துக் கொள்ளவில்லையா? தனித்தனியே துணிந்து வியாபாரம் நடத்தினால் என்ன இடர் வருமோ, எப்படிக் கவிழுமோ என்று அஞ்சிச் சிலர் சேர்ந்து கூட்டு வாணிகம் நடத்தவில்லையா? அவைபோல் தனித்தனியே அரசியலில் செல்வாக்குத் தேடினால் என்ன தோல்வி வருமோ என்று அஞ்சி, தோல்வி வராமல் காத்துக்கொள்வதற்காக அமைத்த கூட்டுச் செல்வாக்குப் பண்ணையே கட்சியாகும். இவ்வாறு நிதி நிலையம் அமைத்த பிறகு, வீட்டில் தனியே பணம் சேமிப்போரும் அச்சமில்லை என்று உணர்ந்து தம் பணத்தைக் கொண்டு வந்து சேர்க்கவில்லையா? தனித்தனியே வியாபாரம் செய்கின்றவர்களும் பெரிய கூட்டு வாணிகத்தில் பங்கு எடுக்கவில்லையா? அவைபோல், கட்சி அமைத்த பிறகு, தனியே நின்று அரசியலில் தொண்டு செய்ய வல்லவர்களும் அந்தக் கட்சியில் சேர முந்துகின்றார்கள்.

ஒரு கட்சியில் நல்லவர்களும் சேர்வார்கள்; கெட்டவர்களும் சேர்வார்கள். நல்லவர்கள் சேர்ந்து ஆக்கவேலை செய்வார்கள் கெட்டவர்கள் சேர்ந்து அழிவு வேலை செய்வார்கள். எந்தக் கட்சியிலும் நன்மை தீமை கலந்திருப்பது இதனால்தான். இதைத் தடுக்க முடியாது. கெட்டவர்கள் செய்யும் வேலையும் கட்சியின் பெயராலேயே செய்யப்படுகின்றது. அதனால் அந்தப் பகுதியை ஒழிக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்யத் தொடங்குகின்றார்கள். கெட்டவர்களின் செல்வாக்கு அசைக்க முடியாததாக இருக்கும்போது, வேறு வழி இல்லை என்று இவர்கள் வெளியேறி எதிர்கட்சி அமைக்கின்றார்கள். எதிர்கட்சி அமைத்தவுடன், நடுநிலைமையில் நின்றால் மக்கள் திரள மாட்டார்கள் என்பதை உணர்ந்து, மற்றக் கட்சியைப் பழிப்பதும் தம் கட்சியைப் புகழ்வதுமே கடமையாகக் கொள்கின்றார்கள். பொதுமக்கள் பொய்க்கும் பித்தலாட்டத்திற்கும் எளிதில் ஆளாகக் கூடியவர்கள் என்பதை உணர்ந்து தேர்தல் காலத்திற்கு வேண்டிய முறையில் நெறி தவறி மனச்சான்றையும் கொன்று எதிர்ப்பு வேலையைச் செய்கின்றார்கள். மற்ற கட்சியாரும் இவர்களை எதிர்த்து அடக்குவதே முதல்கடமை என்று கட்சிப் போர்க்களத்தில் இறங்குகின்றார்கள். அழிவு வேலை செய்வதிலும், அறத்தை மறந்து செல்வாக்கைத் தேடுவதிலும் போட்டியிடுகின்றார்கள். இந்தப் போட்டி வேலைக்குத் துணையாகச் செல்வரை நாடுகின்றார்கள். 'இதுவும் நல்லதே, கட்சிச் சார்பு இருந்தால் நாமும் கவலை இல்லாமல் இருக்கலாம்' என்று

செல்வர்களும் நுழைகின்றார்கள்; நாளடைவில் கட்சியைத் தம் கையின் கீழ்க் கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு அரசியலை அமைக்கப் புகுந்தவர்கள் கட்சிகளை அமைக்கத் தொடங்குகின்றார்கள். நாட்டை ஒன்றுபடுத்தி ஆள எண்ணியவர்கள் நாட்டைப் பிளவுக்கும் பிரிவுக்கும் உட்படுத்திக் கட்சியை ஆள்வதில் கருத்தைச் செலுத்துகின்றார்கள். நாடே பெரியது என்று நல்லெண்ணம் கொண்டு தேர்தலுக்கு வந்தவர்கள் கட்சியே பெரியது என்று கங்கணம் கட்டுகின்றார்கள். நாட்டில் அறத்தையும் அமைதியையும் நிலைநிறுத்த விழைந்து தொடங்கியவர்களும் நாளடைவில் கட்சியை நிலைநிறுத்த முனைகின்றார்கள்; அமைதியைக் குலைத்து அறத்தையும் புறக்கணிக்கின்றார்கள்.

எப்படியோ ஒரு கட்சி செல்வாக்குடன் தேர்தலில் வெற்றி பெறுகின்றது; அமைச்சர் குழு அமைத்து ஆள்கின்றது. இயன்றவரையில் மக்கள் நன்மைக்காகப் பாடுபட முயல்கின்றது. ஆனால் அமைச்சராக உள்ள சிலருடைய கையிலே முழுப்பொறுப்பும் இருக்கின்றதா? இல்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? கட்சியின் தலைமை நிலையத்திலிருந்து தம்மைவிடச் செல்வாக்கு உள்ளவர்கள் அவ்வப்போது இடுகின்ற ஆணைகளுக்குக் கட்டுப்பட வேண்டி இருக்கின்றது. ஆகவே, பொதுமக்களின் விருப்பம் ஒரு பக்கம்; கட்சித் தலைவர்களின் ஆணை ஒரு பக்கம். பொதுமக்களின் விருப்பத்தை மிகுதியாகப் புறக்கணிக்கத் தொடங்கினால், எதிர்ப்பு உணர்ச்சி வலுவடைகின்றது. இதை எவ்வாறு அடக்குவது? பெற்ற தாயும் அன்பின் ஆற்றலை மறந்து பிரம்பின் ஆற்றலைக் கொண்டு தன் குழந்தையை அடக்கவில்லையா? அதுபோலவே, அறத்தையும் மறந்து அடக்குமுறையைக் கையாள வேண்டி வருகின்றது. இது தான் நல்ல வாய்ப்பு என்று தேர்தலில் தோற்ற எதிர் கட்சியார் பொதுமக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டுத் தம் கட்சியை வலுப்படுத்துகின்றார்கள். யானை பூனை ஆகலாம் என்றும், பூனை யானை ஆகலாம் என்றும் பொது மக்கள் காத்திருக்கின்றார்கள்.

லட்சக்கணக்கான மக்கள் முன்பின் தெரியாத ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் இருந்தால்தான் கட்சிவாழும். இதனாலேயே அரசியல் தலைவர்கள் இந்தக் கட்சித் தேர்தலை மாற்ற இடம் தராமல் போற்றி வருகின்றார்கள்.

தகுதித் தேர்தல்

தேர்தலில் இன்னொரு முறை உள்ளது. அது சிறு பகுதிகளில் தகுதித் தேர்தலாக இருக்கும். பிறகு மன்றங்களின் தேர்தலாக இருக்கும். இதன் வழியாகவும் பாராளுமன்றத்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கலாம், அதாவது: ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் அந்த ஊர் மக்கள் அந்த ஊரில் வாழும் சிலரைத் தேர்ந்தெடுத்து ஊர் மன்றத்துக்குப் (பஞ்சாயத்துக்கு) அனுப்ப வேண்டும். இந்த ஊர் மன்றம் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தாலுக்கா மன்றத்துக்கு அனுப்ப வேண்டும். இப்படிப் பல உறுப்பினர்கள் சேர்ந்து தாலுக்கா மன்றம் நடைபெறும். அந்தக் தாலுக்காவை அந்த மன்றம் ஆட்சிபுரியும். தாலுக்கா மன்றங்கள் மும்மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து ஜில்லா மன்றத்துக்கு அனுப்ப வேண்டும். பல தாலுக்கா மன்றங்களிலிருந்து வந்த உறுப்பினர்கள் ஜில்லா மன்றமாக அமைந்து அந்த ஜில்லாவை ஆட்சி புரிவார்கள். இவ்வாறு அமைந்த ஜில்லா மன்றங்கள் மூம்மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து மாகாணத் தலைநகரத்திலுள்ள பாராளுமன்றத்திற்கு அனுப்பலாம். அவர்களுக்கே அமைச்சர் குழுவை அமைக்கும் பொறுப்பு இருக்க வேண்டும். (நாடு முழுவதிற்கும் பொதுவான நாட்டுப்பாராளுமன்றத்திற்கும் மாகாண மன்றங்களே உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும்).

கட்சி அமைப்புக்கு முற்றிலும் முரணான தேர்தல் முறை இது. எவ்வாறு? செங்கல்பட்டு ஜில்லாவில் இந்த முறையின்படி தேர்தல் நடைபெறுவதாக வைத்துக் கொள்வோம். காட்டுப்பாக்கம் கிராமத்தில் ஓர் ஊர் மன்றம் (பஞ்சாயத்து) அமைய வேண்டும். அதற்கு ஐந்து பேரோ ஏழுபேரோ உறுப்பினர்கள் வேண்டும். சென்னையிலிருந்து கட்சித் தலைவர் என்ன செய்ய முடியும்? பத்திரிகைகள் கதற முடியுமா? தாம் விரும்பியவாறு உரிமை இழந்து அடங்கி நடக்கும் ஒருவரை வெளியே இருந்து கொண்டுபோய் நிறுத்தினால் ஊரார் ஏற்றுக் கொள்வார்களா? உள்ளூரார் ஒருவரையே பார்த்து அடங்கி நடப்பவரா? என்று ஆராய்ந்து தேர்தலுக்கு நிறுத்தலாம். ஆனால் ஊரார் அவருக்கே வாக்குரிமை கொடுப்பார்களா? அவருடைய பண்புகளைப் பற்றிக் கட்சித் தலைவர் சென்னையிலிருந்து சொன்னால் ஊரார் கேட்பார்களா? பத்திரிகைகள் கதறினாலும் நம்புவார்களா? "இவரைப் பற்றி எங்களுக்குத் தெரியாமல் சென்னையில் இருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்? அவர்களுக்கு இந்த ஊராரைப் பற்றி என்ன தெரிய முடியும்? என்று இகழ்வார்கள். "ஆளைப் பற்றிக் கவலை இல்லை; கட்சியே பெரியது", என்று எவ்வளவு பெரிய இடத்திலிருந்து அறிவுரை வந்தாலும் "சரி, சரி, இந்த ஆளை நிறுத்தி வைக்கலாமா? இவரை மன்றத்துக்குத் தேர்ந்தெடுத்தால், கட்சியின் பெயரே கெட்டுப் போகுமே! கட்சியின் பெயரால் இவருக்கு வாக்குரிமை கொடுப்பதை விட அதோ அந்தப் புளியமரத்துக்குக்

கொடுத்தாலும் பயன் இருக்குமே", என்று காட்டுப்பாக்கத்துத் தோசைக்கார ஆயாவும் ஓட்டுப்போட மறுத்துவிடுவாள். படித்தவர்கள் அறத்தை மறந்தாலும் படிக்காதவர்களின் மனச் சான்று மறக்காது? "இந்த ஆள் பொல்லாதவன், தன்னலம் உடையவன், பகட்டும் பெருமையும் இருந்தால் யாருக்கு என்ன? இவனுக்கு ஓட்டுப் போடுவது பாவம்", என்று உணர்ந்து அவர்களுடைய மனச்சான்று மறுத்துவிடும்.

மனச்சான்று

ஆகவே, அற நாட்டம் இல்லாதவர்களுக்கு - வெறும் பணவேட்டை உடையவர்களுக்கு - ஊர் மன்றத்திலேயே இடம் இல்லாதபடி அந்த ஊரார் செய்து விடுவார்கள். ஊர் மன்றத்திலே இடம் இல்லாதபோது தாலுக்கா மன்றம், ஜில்லா மன்றம், பாராளுமன்றம் இவற்றை எட்டிப் பார்க்க முடியுமா? ஆகவே ஒருவாறு கெட்டவர்களை வடிகட்டித் தடுக்க முடிகின்றது அல்லவா? இதுதான் தேர்தலில் தனியுரிமையை வாழவைப்பதன் பயன். மக்கள் மனச்சான்றோடு பிறந்தவர்கள். செல்வமும் செல்வாக்கும் பகட்டும் புகழும்

மிகுதியாகும்போது இந்த மனச்சான்று ஒருவாறு அடங்குகின்றது. ஆனால் இந்தச் செல்வம் முதலியவற்றைப் பெரும்பாலோர் பெறமுடியாது அல்லவா? அந்தப் பெரும்பாலோரிடமும் மனச்சான்று அப்படியே இருக்கின்றது. அவ்வாறு மனச்சான்று வாழும் வரையில் அறம் வாழ்ந்தே தீரும். ஆகையால், கருத்துத் தேர்தலின்படி ஒழுக்கம் கெட்டவர்கள், வஞ்சகர்கள், தந்திரக்காரர்கள் ஆகிய இவர்கள் ஊர் மன்றத்தை அணுக முடியாது; அதனால் பாராளுமன்றத்தைக் கைப்பற்ற முடியாது; ஆகவே அரசாட்சி நல்லவர்களின் கையில் விளங்கும், நாட்டிற்கும் உலகத்திற்கும் நல்லவர்களே தலைவர்களாக வர வேண்டும். வல்லவர்கள் தலைமை பூண்டு பயன் என்ன? வல்லவர்களின் தலைமையில் போரும் பூசலும் திறமையாக - வல்லமையோடு - நடைபெற முடியும். அதைவிட நல்லவர்களின் தலைமையே வேண்டும். அவர்களுக்கு வல்லமை குறைவாக இருந்தாலும் கவலை இல்லை. போரும் பூசலும் குறையும்; அமைதியும் அறமும் தலையெடுக்கும்.

இன்று கட்சியின் பெயரால் தனிமனிதர் உரிமையைப் பறித்துப் பெரும்பாலோரைக் கைகாட்டி மரங்களாக்கி, அவர்களுடைய மனச்சான்றைக் கொல்வதால் வல்லவர்கள் மேல்நிலை பெறலாம். ஆனால் மக்களின் பொது வாழ்க்கை குலைகின்றது. நாடுகள் வாழவில்லை; கட்சிகளே வாழ முடிகின்றது.

இன்று தேர்தல் என்றால் எந்த நாட்டிலும் மக்கள் விலங்குகளாக மாறி நடக்கும் காலம் என்று சொல்லக்கூடிய நிலைமையைக் காண்கிறோம். லட்சக்கணக்காகக் கூட்டம், அங்கங்கே பிளவுகள், பகையுணர்ச்சிகள், வெறுப்புக்குரல்கள், போராட்ட ஆரவாரங்கள், கல்லடிகள், கொள்ளைகள், கொலைகள் எல்லாம் நடைபெறும் காலம் அது. இவ்வளவுக்கும் அடிப்படைக் காரணம், கட்சியின் பெயரால் மனச்சான்று வெளிப்படாதவாறு மக்களை நடத்தும் முறையே ஆகும்; மக்கள் கருத்துரிமை இழந்த பிறகு, கட்சிக்கு அடிமைகளாய் 'ஒன்றைப்பிடி, உறுதியாய்ப் பிடி' என்று கண்மூடிகளாய்ப் பொறுமை இல்லாமல் வெறிகொண்டு திரளும் முறையே ஆகும். கூட்டங்களின் அளவில் இந்தக் கட்சிப்பகை நிற்பதில்லை. சிற்றூர்களில் அமைதியாக வாழ்ந்து ஒன்றுபட்டிருக்கின்றவர்களும் தேர்தல் காலத்தில் பிளவுபட்டுக் குழப்பத்திற்கிடையே நிற்பார்கள்; தொழிற்சாலைகளில் பிரிவுகள் அலைக்கும்; தெருப்பேச்சுகளிலே பூசல்கள் புகுந்து நலியும்; சுற்றத்தாரிடையே கட்சி காரணமாகப் பகை வளரும்; நண்பர்களின் நடுவில் வேற்றுமை மலியும்; குடும்பங்களும் குலைந்து வருந்தும். இவ்வளவுக்கும் காரணமாகக் கட்சித் தேர்தல் நடந்து நாட்டில் மக்களின் உரிமையை எல்லாம் பறித்து ஒரு கட்சியாரிடம் கொடுத்து ஒதுங்கும்.

தகுதித் தேர்தலில் இவ்வளவுக்கும் இடமில்லை. இரண்டாயிரம் மக்கள் வாழும் ஒவ்வோர் ஊரிலும் ஓர் ஊர் மன்றம் என்றால், ஐந்து பேரை அல்லது ஏழுபேரை அந்த இரண்டாயிரம் மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களுக்குள்ளும் பொறாமை, பகை, போட்டி இவை ஓரளவு இருக்கலாம். ஆனால் இவற்றை வெளியார் மிகுதிப்படுத்த முடியாது. ஏன் என்றால், அந்த ஊரார் (நகரமாயின் நகரத்துப் பகுதியார்) ஒருவர் ஒருவரை முன்னமே அறிந்திருப்பவர்கள். புதிதாக யாரும் ஒன்றும் சொல்வதிற்கில்லை. சொன்னாலும் கூட்டம் குறைவாகையால், குழப்பத்தைப் பெருக்க வழி இல்லை.

## 5. உரிமைப் பஞ்சம்

### திருத்துவதா? தீர்ப்பதா?

பகையிலும் குழப்பத்திலும் தோன்றி வளர்ந்த தேர்தல் எவ்வாறு முடிகின்றது? ஒரு கட்சியின் வெற்றியாக மலர்கின்றது. பிறகு கட்சியின் செல்வாக்காகக் காய்க்கின்றது. பொதுமக்களின் விருப்பத்திற்கு மாறாக நடக்க வேண்டி ஏற்படும்போது அடக்குமுறை ஆட்சியாகக் கனிகின்றது. அதன்

பயனாக எதிர்ப்பு உணர்ச்சி வலுத்தபோது, எதிர் கட்சியின் வாழ்வுக்கு வித்தாகின்றது. பகையும் குழப்பமும் தொடக்கத்தை விடப் பன்மடங்கு மிகுதியாகின்றன. இந்த மன்றத்தை அமைக்கும்படி வாக்குரிமை கொடுத்ததே தவறு என்று பலருடைய மனமும் எண்ண இடம் ஏற்படுகின்றது. விரைவில் மாற்றியமைக்க வேண்டும், வேறு அமைச்சர் குழு அமைக்க வேண்டும். மறு தேர்தல் நடத்த வேண்டும், என்றெல்லாம் பலவகை எண்ணங்கள் எழுகின்றன. எண்ணங்களுக்குள்ள ஆற்றல் எவ்வளவோ பெரியது அல்லவா? இன்று எண்ணமாக இருக்கலாம். நாளைக்குச் செயலாக மலர்வது அதுதானே! இப்படி எண்ணுவோர் பலர்; அவருள் சிலர் அந்த எண்ணத்தை வெளிப்படுத்த முன்வருவார்கள். ஆனால், ஆளும் கட்சி அதற்கு உரிமை கொடுக்குமா? அதுதான் அருமை. உரிமை கொடுத்தால் சிக்கல் வளராது. கொடுமை அரும்பாது. கருத்துரிமை இல்லாதபடி தடை பிறப்பதால், எண்ணம் சிலருக்குத் துணிந்த செயலாக மாறிவிடும். உரிமை கொடுக்கத் தவறினால், பெற்ற தாயின் மேலும் வெறுப்புக் கொள்ளும் அளவு குழந்தையின் மனம் கெடவில்லையா? பாலூட்டிய தாயை வெறுத்துக் கல் எடுத்து எறியக் குழந்தையும் துணியவில்லையா? அது போலவே, பேசவும் உரிமையற்ற நிலைமை. அல்லது பேசியும் பயன் விளையாத நிலைமை ஏற்பட்டபோது, சிலருடைய மனம் துணிந்து கொடுஞ்செயலில் இறங்கி விடும். நாட்டை ஆளும் தலைவர்களைக் கொன்றவர்கள், கொல்ல முயன்றவர்கள், பலர் உலக வரலாற்றில் இல்லையா?

புகைவண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. வண்டியில் ஏறி உட்கார்ந்திருந்த பலரும் எண்ணியது ஒன்று. ஆனால் வண்டியோ நேர்மாறான நெறியில் ஓடிக்கொண்டிருக்கிறது. அப்போது என்ன செய்வார்கள்? கூக்குரல் இடுவார்கள். அதையும் கேட்பார் இல்லையானால் மக்களின் மனம் பொறுமை இழக்கும் அல்லவா? அவர்களுள் சிலர் ஆத்திரமும் துணிவும் கொண்டு செயல் ஆற்ற முந்துவார்கள் அல்லவா? வண்டியை ஓட்டுகின்றவர்களின்மேல் பழி இல்லாமலிருக்கலாம். அவர்கள் மற்றவர்களின் விருப்பத்திற்காக இணங்கி ஓட்டுகின்றவர்களாக இருக்கலாம். ஆனால் பொதுமக்களின் மனம் ஓட்டுகின்றவர்களையும் அவர்களை ஆட்டுகின்றவர்களையும் வெறுக்காம லிருக்க முடியுமோ? வண்டியிலிருந்து கொண்டு கூக்குரல் இடும் போது செவி கொடுக்காமல் ஓட்டிய குற்றத்தைப் பொதுமக்கள் மறப்பார்களா? "உங்கள் விருப்பம்போல் இப்போது ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் கூக்குரல் இடக்கூடாது. பேசாமல் வர வேண்டும்", என்று ஆணையும் பிறந்தால் துணிந்த மனங்கள் அமைதியாக இருக்க முடியுமா? அவைகள் அறத்தின் எல்லையையும் கடந்து அடாத செயல்களில்

இறங்குகின்றன. இந்த நிலையில்தான் வண்டியில் கொலையும் கொள்ளையும் மலியும்; கொடுமை காணப்படும். அரசியல் கொலையியலாக மாறும் பகுதி இதுவே. தம் வாக்குரிமையைப் பெற்று மேலே பதவிகளில் விளங்குகின்றவர்களைத் திருத்த முடியாதபோது, தீர்த்து முடிக்க வேண்டும் என்ற கொடிய துணிவு பிறப்பதை எந்த நாட்டு வரலாற்றிலும் காணலாம்.

திருத்தும் உரிமை

தகுதித் தேர்தலில் இந்தக் கொடுமைக்கே இடம் இல்லை. அமைச்சர்கள் பெரும்பாலோருடைய விருப்பத்திற்கு மாறாக நாட்டை ஆண்டு வருவார்களானால் உடனே பொது மக்கள் அவர்களைக் குறைகூறுவார்கள்; அவர்களைத் தேர்ந்தெடுத்த பாராளுமன்றத்தைக் குறை கூறுவார்கள். பாராளுமன்றத்தார் உடனே பொது மக்களின் கருத்தை மதித்து, அமைச்சர் குழுவைக் கலைப்பார்கள். நாட்டில் புதிய அரசியல் முறைக்கு இடம் ஏற்படும். ஆகவே, திருத்த முடியவில்லையே என்று உரிமையற்ற நிலைமையை உணர்ந்து பகையும் ஆத்திரமும் கொள்ள வழியில்லாமல் போகும்.

பாராளுமன்றத்தார் அவ்வாறு செய்யாமல் காலம் கடத்துவார்களானால், அவர்களைத் தேர்ந்தெடுத்த ஜில்லா மன்றங்களைப் பொதுமக்கள் நெருக்குவார்கள். ஜில்லா மன்றங்கள் தாம் தாம் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திலிருந்து திரும்பி வரச் செய்தால், உடனே மாறுதல் ஏற்படும். திருத்தும் உரிமை, மாற்றும் உரிமை இந்த நிலையிலும் இருப்பதால், பொதுமக்களின் மனம் கெட வழி இல்லை.

ஜில்லா மன்றங்களும் ஒன்றும் செய்யாமல் காலம் கடத்தினால், அவற்றிற்கு உறுப்பினர்களை அனுப்பிய தாலுக்கா மன்றங்கள் அவர்களைத் திரும்பிவரச் செய்தால் அவைகள் கலைந்துவிடும். அடிப்படை அசைந்து குலுங்கினால் கட்டடம் நிற்காதது போல், அமைச்சர் குழு மாறி விடும்.

தாலுக்கா மன்றங்களும் வாளா இருந்தால், ஊர் மன்றங்கள் அந்தக் கடமையைச் செய்தால் அவைகள் அசைந்து கலையும். ஊர்மன்றங்களும் வாளா இருந்தால் அந்த ஊரிலுள்ள இரண்டாயிரம் பேரும் கூட்டம் கூடி மறுதேர்தல் நடத்திவிடலாம். இப்படிப் பெரும்பாலான ஊர்களும் தாலுக்காக்களும் ஜில்லாக்களும் அசைந்தால் ஆட்சி முறையில் மாறுதலை ஏற்படுத்திவிட முடியும்.

பெரும்பாலான ஊர் மன்றங்கள் மாறாமல், சில தாலுக்கா மன்றங்களும் அசையாமல், அதனால் அமைச்சர் குழு மாறாமல் இருக்கலாம். அப்போதும், பொது மக்களுக்கு ஆத்திரம் ஏற்பட வழி இல்லை. பெரும்பாலோர் விரும்பவில்லையே, நாம் என்ன செய்யலாம், பொறுப்போம் என்ற எண்ணம் ஏற்படும். உலகம் பொல்லாதது என்ற சோர்வு ஏற்படவும் வழி இல்லை. ஏனென்றால் மற்ற ஊர் மன்றங்களை மாற்றி அமைக்க வேண்டுமே, அதற்கு வேண்டிய மனமாற்றம் பொதுமக்களுக்கு ஏற்பட வேண்டுமே என்ற நேர்க்காரணம் புலப்படுகின்றது அல்லவா? ஒரு சில தலைவர் மேல் சினமும் ஆத்திரமும் கிளம்பிக் கத்தியையாவது துப்பாக்கியையாவது மறைத்துத் திரிய வேண்டிய கொடுமை இல்லை. திருந்தாத மக்களைத் திருத்த வேண்டும் என்ற முயற்சியும், திருத்த முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கும்போது, ஏமாற்றத்திற்கு இடம் இல்லை அல்லவா? பெரும்பாலோர் விரும்புகின்றார்கள். ஆனாலும் அமைச்சர்கள் கேட்கவில்லையே என்ற ஆத்திரம் வேறு. நாம் உணர்வதுபோல் பெரும்பாலோர் விரும்பவில்லையே, விரும்பினால் அமைச்சர்கள் மாறி விடுவார்களே என்ற ஆவல் வேறு. ஆகையால் இந்தத் தேர்தல் முறை ஒருநாளும் மனிதனை விலங்காக மாற்றுவதும் இல்லை; மனச்சான்றைக் கொன்று அறத்தைத் தாழ்த்துவதும் இல்லை.

ஆனால் ஒருவகைத் தயக்கம் ஏற்படலாம். நினைத்த போதெல்லாம் அமைச்சர் குழு மாறிக்கொண்டிருந்தால் நாட்டில் நிலைத்த அரசியல் ஏற்படாதே என்று தயங்கலாம். அது தவறான கருத்து. கட்சித் தேர்தலின் வழியாக மேலே சென்று அமைச்சரானவர்கள், பொது மக்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நம்பிக்கையால் அடக்கு முறையைக் கையாள இடம் இருக்கின்றது. ஆனால் இவ்வாறு மக்கள் தகுதித் தேர்தல் வாயிலாகச் சிறு மன்றங்களை அசைத்தால் நாமும் அசைந்து விழுவோம் என்று அறிந்தால், பொது மக்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். சிறு சிறு கிராமங்களின் நன்மையையே எப்போதும் மனத்தில் நாடி, ஊர் மன்றங்களைப் போற்றி நடப்பார்கள். ஆகையால் மாறுதலுக்கு அடிக்கடி இடம் ஏற்படாது. பெரும்பாலோர் விருப்பத்துக்கு மாறுபட்டால் நமக்குப் பதவியும் இல்லை. செல்வாக்கும் இல்லை என்று அறியக்கூடிய நிலைமையில் தகுதித் தேர்தல் இருப்பதால், பொதுமக்களின் விருப்பமே என்றைக்கும் நிறைவேறும்; அரசாட்சி நிலைபேறானதாக இருக்கும்; அடக்குமுறைக்கோ, கொலையியலுக்கோ இடம் இருக்காது. ஆனால் ஒன்று மறைந்து போகும்; கட்சி அமைப்பு மறைந்துவிடும். கட்சியை மதித்து நாட்டை மறப்பவர்களுக்கு வாழ்க்கை இருக்காது. அதனால்தான் கட்சி அமைப்பு அழியுமே என்று

அஞ்சி, இன்று உள்ள அரசியல் அறிஞர்கள் ஒருமுகமாகக் கட்சித் தேர்தலையே போற்றி வருகின்றார்கள். நிதி நிலையத்தில் பணம் சேர்த்துக் கவலையில்லாமல் வீட்டில் உறங்கி வந்தவர்கள் அதைக் கலைக்க மனம் கொள்வார்களா? ஆனால் அவர்களுடைய இன்ப வாழ்க்கைக்காக யார் பலியாவது? பொது மக்கள், எத்தனை நாள் இவ்வாறு ஏமாந்து கட்சித் தேர்தலில் தனியுரிமை இழந்து வாடுவார்கள்? விழித்து எழும் நாள் விரைவில் வரும். அன்றைக்குக் கட்சித் தேர்தலை வற்புறுத்துகின்றவர்கள் தன்னலத்தால் அவ்வாறு செய்கின்றவர்கள் என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

கட்சி அமைப்பில் நல்லவர்கள் சேர்ந்து தொண்டாற்றும்போது சில நெருக்கடியான காலங்களில் நன்மை விளைவது உண்டு. நாட்டின் பொதுப் பகைவராக உள்ள வெளிநாட்டாரை முறியடிப்பதற்கு இந்தக் கட்சி அமைப்பு உறுதியும் ஊக்கமும் தருவது உண்டு. ஆனால் அந்தக் கடமை முடிந்த பிறகு நன்மையே தரும் என்று சொல்வதற்கு இல்லை. நல்லவர்களுக்கே இடம் தருவது போய், தீயவர்களுக்குச் செல்வாக்குத் தருவது உண்டு. எப்படியும் கட்சி அமைப்பினால் விளையும் நன்மை குறைவே; அதுவும் குழந்தையை மருட்டி அடக்கித் தாய் நன்மை செய்வது போன்றதே. அன்பால் உரிமை கொடுத்துத் திருந்தும் பொறுமை இருந்தால், அதற்கு இது இணையாகுமோ?

போர் இல்லாமல், பங்கீட்டு முறை இல்லாமல், வியாபாரிகள் அரிசி விற்றுவந்த காலத்தில், அரிசிக் கடைகளில் அரிசி எப்படி இருந்தது? எப்படியாவது வியாபாரம் ஆக வேண்டும். இன்றைக்கு வாங்குகின்றவர்கள் நாளைக்கு வர வேண்டும். வாங்க வருகின்றவர்கள் வெறுப்புக் கொண்டால் வியாபாரம் நடக்காது. அதனால் நல்ல அரிசி வைத்து விற்க வேண்டும் என்று பலவகை எண்ணங்கள் கொண்டு கெட்டுப்போகாத அரிசியை - உடம்புக்கு நல்ல அரிசியை - உண்பதற்குச் சுவையான அரிசியைக் - கடைகளில் வைத்திருந்தார்கள் அல்லவா? ஆனால் போரின் விளைவாகப் பங்கீடு இருந்த காலத்தில் அதே கடைகளில் அதே வியாபாரிகள் எப்படிப்பட்ட அரிசியை விற்றார்கள்? கெட்டு அழுகிய அரிசி, நிறமும் திரிந்து சத்தும் இழந்த அரிசி, சுவை கெட்டு உடலைக் கெடுக்கும் அரிசி எதுவானாலும் மக்கள் வாங்கித் தானே தீரவேண்டும் என்று விற்றார்கள். காரணம் என்ன? மேலே உள்ள அரசாங்கத்தாரின் உறுதியான துணை. மக்களுக்கு நல்ல அரிசி கிடைக்காதபடி உணவுப் பொருள்களைச் சேர்த்துக் குவித்துள்ள திட்டம். எவ்வளவு கெட்ட அரிசியானாலும் பொது மக்களின் முறையீட்டை அரசாங்கத்தார் கேட்க மாட்டார்கள் என்னும் நம்பிக்கை. அரசாங்கத்தார் ஏற்பாட்டின்படி வந்த

அரிசி ஆகையால் நம் குற்றம் அல்ல என்று உணரும் இரக்கமற்ற உணர்ச்சி. நமக்கு வேண்டியது பணமே தவிர மக்களின் உடல் நலம் அல்ல என்று கருதும் பொறுப்பற்ற தன்மை இவ்வளவும் காரணம் அல்லவா? அதே வியாபாரி பங்கீடு எடுபட்டபின் பழையபடி நல்ல அரிசி வாங்கிச் சேர்த்துப் பொதுமக்களின் ஆதரவையும் அன்பையும் நாட வில்லையா? இப்படித்தான் கட்சித் தேர்தல் நல்ல அமைச்சர்களையும் கெடுத்துப் பொல்லாத அதிகாரிகளாக, பொறுப் பற்றவர்களாக, உணர்ச்சி அற்றவர்களாக மாற்ற வல்லது. ஆனால் தகுதித் தேர்தலோ பொதுமக்களின் நல்வாழ்வையே குறிக்கோளாகக் கொள்ளச் செய்து தன்னலம் உடையவர்களையும் பொதுமக்களின் உண்மை ஊழியர்களாக, தொண்டர்களாக மாற்ற வல்லது.

பகை உணர்ச்சி

பகையுணர்ச்சி கொலைக் கருவிகளைவிடப் பொல்லாதது; திருத்த முடியாது என்று தெரிந்த பிறகு பதவியில் உள்ளவர்களைப் பகைக்கும் நிலைமை மக்களுக்கு ஏற்படுகின்றது. அந்தப் பகை எண்ணத்தளவில் நிற்கும்போது நாட்டில் பெரிய புரட்சி ஒன்றும் ஏற்படுவதில்லை. ஆனால் செயலளவில் நிகழும் போது நாடு முழுவதும் விழித்து அலறுகின்றது. இதனால் செயல் பொல்லாதது என்று எல்லோரும் கலங்குகின்றார்கள்; ஆனால், எண்ணத்தளவில் நின்ற பகையுணர்ச்சியோ அதைவிடப் பொல்லாதது என்பதை மறக்கக் கூடாது. கொலை முதலிய கொடுஞ் செயல் நேர்ந்தபோது உடனே நாட்டினர் எல்லோரும் அந்தச் செயல் செய்தவர்களைப் பழிக்கின்றார்கள்; கொடுஞ்செயல் செய்தவர்களும் வருந்துகின்றார்கள்; அறத்தின் சிறப்பை அவர்களுடைய மனச்சான்றும் உணர்த்துகின்றது. ஆகையால் அந்தக் கொடுமை ஒரு வகையில் அறத்தை நிலைநாட்டுவதற்கே பயன்படுகின்றது.

ஆனால், செயலளவில் வாராமல் எண்ணத்தளவில் நிற்கும் பகையுணர்ச்சியோ நின்று வேலை செய்கின்றது. அறத்திற்கு நேர்மாறான வழியில் இழுத்துச் செல்கின்றது. ஆளும் கட்சிக்கு எதிர்ப்பாக ஆள் திரட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றது. பொதுமக்களின் மனத்தை மாற்றுவதற்காகப் பொய் விதைக்கின்றது; புறங்கூறுவதைக் கலை ஆக்குகின்றது; ஆக்க வேலையை மறக்கின்றது; அழிவு வேலைகளுக்குத் தூண்டுகோல் செய்கின்றது; அன்பு, இன்சொல், இரக்கம் முதலிய நல்ல பண்புகளால் பயனில்லை என்று உணர்த்துகின்றது; இவைகள் கோழையின் பண்புகள் என்றும், நாட்டு

நன்மைக்கு உதவாதவைகள் என்றும் உணர்த்துகின்றது. பகை, வன்சொல், சினம், வெறுப்பு, கடுமை முதலியவைகளை வீரம், ஆண்மை முதலிய பெயர்களால் விளங்கச் செய்து தீநெறியை வளர்க்கின்றது. எதிர்கட்சியார் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஒத்திருந்தாலும், ஒவ்வாத பத்து பங்கையே எடுத்தெடுத்துப் பேசி வேறுபாட்டையே விளக்கமாக்கிப் பகை மனப்பான்மையை வளர்க்கச் செய்கின்றது. எதிர்கட்சியார் காக்கை கறுப்பு என்று சொன்னாலும் அவர்கள் சொல்கின்றார்கள் என்பதற்காகவே, வேறு வேறு காரணங்களை மூளை கொண்டு கற்பித்துக் காக்கை கறுப்பு அல்ல என்று மறுத்து முழங்கச் செய்கின்றது. எதிர்கட்சிப் பத்திரிகைகள் எழுதுகின்ற அத்தனையும் மறுத்து அவற்றிற்கெல்லாம் முரணான செய்திகளையே எழுதி எழுதிச் சாதிக்கும்படி பத்திரிகைகளை நடத்தச் செய்கின்றது. தம் குணமும் எதிரிகளின் குற்றமும் எடுத்துப் பறையடித்து, அவர்களாகக் குணமும் குற்றமும் ஒருங்கே நாடாதபடி பொதுமக்களை மந்தைகளாக்கிப் பழக்கச் செய்கின்றது. இவ்வளவும் செய்வதன் மூலமாகவே தம் கட்சியை எதிர்கட்சிக்கு நிகரான ஆற்றலுடையதாக வளர்த்துக் கொள்ளச் செய்கின்றது.

கட்சிச் சுவர்

இவ்வளவுக்கும் காரணம் கொலைக்கருவிகள் அல்ல; பகையுணர்ச்சி ஒன்றேதான். இந்தப் பகையுணர்ச்சியை வளர்த்து அறத்தை மறக்கச் செய்வதற்குக் கட்சி அமைப்புக் காரணம் அல்லவா? ஒரு கட்சி வலுவடைந்து உயர்வு பெறுவதைக் கண்டவர்கள் அதில் சேர முயல்கின்றார்கள். கட்சிக்குள் சேர்வதால் பயனில்லை என்று கண்டபோது கட்சிச் சுவர்க்கு வெளியே நிற்கின்றார்கள். சுவரை இடித்துத் தள்ள முயல்கின்றார்கள். ஆனால் அது முடியாது என்று கண்டதும், அந்தச் சுவரையே தம் எல்லையாக வைத்துக் கொண்டு, சுவருக்கு இப்பால் இருந்து, " நீங்கள் இங்கே வரக்கூடாது தெரியுமா? நாங்கள் உங்கள் எதிர்கட்சி உங்களோடு நாங்கள் சேரமாட்டோம். அதற்காகவே இந்தச் சுவர்", என்று அவர்கள் கட்டிய சுவரையே தம் அரணாகப் பயன்படுத்துகின்றார்கள். ஒரு கட்சி அறநெறியில் வளர்ந்திருக்கலாம்; பல நன்மை செய்து உயர்ந்திருக்கலாம். ஆனால் அந்தக் கட்சி எழுப்பிய சுவர்களையே பயன்படுத்திக் கொண்டு இப்பால் வந்து நின்று மற்றொரு கட்சி அதற்கு நிகராக வளர்ந்து விடலாம்; அறத்தை மறந்து விடலாம். நன்மை செய்யாமலிருக்கலாம்; ஆனால் கட்சியை வலுப்படுத்திவிடலாம். பெரிய கட்சியை எதிர்க்கும் ஒரு கட்சி மிக எளிதில் அதற்கு நிகரான பெரிய கட்சி ஆகிவிடும். இதுவும் உலகெங்கும் காணப்படும் உண்மையே. ஆகவே ஒரு கட்சி அமைத்தபோது மற்றொரு

கட்சிக்கும் நிகரான இடம் கொடுத்து வளர்க்கும் வேலையைத் தம்மை அறியாமல் செய்துவிடுகின்றார்கள்; ஆக்க வேலையால் தாம் உயர்ந்தால், அழிவு வேலையால் அவர்கள் உயர இடம் கொடுக்கின்றார்கள். நல்ல வழியால் தாம் உயர்ந்தால், பொல்லாத வழியால் அவர்கள் உயர இடம் கொடுக்கின்றார்கள். தன் வயலைச் சுற்றி வேலி அமைக்கின்ற ஒருவன் தன்னை அறியாமல் தன்னை அடுத்த மாற்றான் வயலுக்கும் அதே வேலி பயன்படச் செய்கின்றான் அல்லவா? நம் தோட்டத்திற்கும் அரண் செய்யும் சுவராக அமைகின்றது அல்லவா? நமக்கு நன்மை என்று தன்னலத்தால் எழுப்பினோம். நம்மைப் பிரிப்பதற்கும் நம்மை எதிர்ப்பதற்கும் அது நம் எதிரிக்குப் பயன்படுகின்றது. இதுதான் அறத்தின் அருஞ்செயல். தன்னலத்தால் எவன் செய்யும் செயலும் அவனை அழிக்கவே திரும்பப் பயன்படுமாறு செய்கின்றது அறம். இவ்வாறு ஒரு கட்சியின் அமைப்பு முதலில் தான் வலுவடைகின்றது; பிறகு மற்றொரு கட்சி அமைப்புக்கு இடம் தருகின்றது; தான் உயர, உயர, தன்னை அறியாமல் அதையும் உயர்த்திவிடுகின்றது. அறம் மறைவதுபோல் இருந்து, இரண்டு கட்சியும் தாக்குண்டு அழியச் செய்கின்றது. இவ்வளவுக்கும் கட்சி வளர்த்த பகையுணர்ச்சி காரணமாக இருக்கின்றது என்பதை உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் காணலாம்.

நாடு ஒரு குழந்தை. குழந்தையைக் காக்க வேண்டும் என்று கருதி அறிஞரும் தொண்டரும் கூடி ஒரு பசு வாங்கினார்கள். கட்சி அமைப்பே அந்தப் பசு. பசு நன்றாகச் செழிக்க வேண்டுமென்ற எண்ணம் வளர, வளர அகத்திக் கீரை வாங்கி ஊட்டுவதிலும் பருத்திக் கொட்டையை அரைத்துக் கொடுப்பதிலும் மற்றப் பாங்கான வளர்ச்சியிலுமே காலமும் காசும் செலவாயின. பசு வளர்ந்து செழித்தது மட்டும் அல்ல; கொழுத்தது. குழந்தையை மெல்ல மெல்ல மறந்துவரத் தலைப்பட்டார்கள். "பசு வளர்ந்து செழித்த பிறகு குழந்தையைக் காப்பாற்றி விடலாம், கொஞ்சம் பொறுங்கள்", என்றார்கள். இதைக் கேட்டுக் கவலை கொண்ட சிலர் வேறொரு பசு வாங்கினார்கள். ஆனால் குழந்தையோ அந்தக் கட்சியாரின் கையில் சிக்குண்டு இருந்தது. அதனால் பாலூட்ட உரிமை இல்லை. ஆகையால் கவலை ஆத்திரமாக வளர்ந்தது. அந்தப் பசுவை இந்தப் பசுவைக் கொண்டு தாக்கிக் கொல்ல முற்பட்டார்கள். இந்தப் பசுவையும் கொழுக்க வைத்தார்கள். பசுச்சண்டை முற்றியது. குழந்தை அப்படியே இருந்தது. இது தான் உலகம் அறிந்த கட்சிக் கதை.

தேவையும் பொறுப்பும்

ஒரு நாடு வாழவேண்டுமானால் உணவு வளம் வேண்டும். கைத்தொழில் வளம் வேண்டும், ஆட்சியுரிமை வேண்டும். பழங்காலத்தில் ஒவ்வொரு சிறிய ஊரிலும் அந்த ஊருக்கு வேண்டிய உணவு இருந்தது; அந்த ஊருக்கு வேண்டிய பொருள்களைச் செய்யக்கூடிய குடிசைக் கைத்தொழில்கள் இருந்தன; அந்த ஊரை ஊராரே ஆளக்கூடிய மன்ற ஆட்சி (பஞ்சாயத்து) இருந்தது. இப்படியே பல ஊர்களிலும் அமைந்திருந்த காரணத்தால், நாடு வாழும் முறை எளிதாக இருந்தது. ஓர் ஊர் மற்றோர் ஊரை உணவுக்காகவோ, கைத்தொழிலுக்காகவோ எதிர்ப் பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலைமை இல்லை; ஓர் ஊரை மற்றோர் ஊரிலுள்ளவர்கள் உறிஞ்சி ஆளும் தொல்லையும் இல்லை. அதனால் கிராமங்களில் அமைதியான வாழ்க்கை நிலவிவந்தது. ஆனால் புகழுக்கும் பெருமைக்கும் ஆசைப்பட்ட சில மன்னர்கள் மண்ணாசை கொண்டு படையெடுத்து எதிர்த்துப் போர் செய்யும் நிலைமை இருந்தது. இதுவும் பெரும்பாலும் எல்லைகளில் உள்ள ஊர்களையே கலக்கியது; அரசர்கள் வாழ்ந்த தலைநகரங்களையே கலக்கியது.

இந்த முறை பலவகையிலும் நல்ல முறையே ஆகும். ஒவ்வோர் ஊரில் உள்ள வயல்களுக்கும் வேண்டிய நீரை அந்த அந்த ஊரிலேயே ஏரியாகக் கட்டி நீரைத் தேங்க வைத்து வயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதைப் போன்றது இந்த ஊர்த்தேவை நிலை. மற்றோர் ஊரிலுள்ள ஏரியை எதிர்பார்க்க வேண்டிய கவலையும் இல்லை; மற்றோர் ஊரைப் பற்றிய பொறாமையும் இல்லை. பல ஊர்களின் வயல்களுக்கும் பொதுவாக ஒரு நல்ல இடத்தில் அணை கட்டி அளவற்ற நீரைத் தேங்கவைத்து அந்த அந்த ஊர்களுக்கு வேண்டிய அளவு அவ்வப்போது வாய்க்கால்கள் வழியாக அனுப்பிப் பாய்ச்சுவது மற்றொரு முறை. இந்த முறைப்படி பல ஊர்களும் இந்த ஓர் அணையையே எதிர்பார்த்திருக்க வேண்டும். இந்த அணையின் அதிகாரிகளே செல்வாக்கு உள்ளவர்களாக இருப்பார்கள். அணையில் ஒரு சிறு பழுது நேர்ந்தாலும் பல ஊர்களுக்கும் இடையூறும் பெருந்துன்பமும் ஏற்படும். கெட்டவர்கள் அந்த அணையைக் காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால், அவர்கள் அத்தனை ஊர்களையும் எளிதில் அல்லல்படுத்த முடியும். நல்லவர்கள் பொறுப்பில் அது இருந்து ஒழுங்காக நடைபெற்றால் ஊர்கள் எல்லாம் கவலை இல்லாமல் அமைதியாக வாழ வழி உண்டாகும். இப்போது உணவுப் பொருளைக் குவிக்கும் முறைகளும் பெரிய பெரிய கைத்தொழிற்சாலைகளும், அரசியல் தலைமை நிலையங்களும் பெரிய நகரங்களில் அமைந்திருக்கின்றன அல்லவா? நாட்டிலுள்ள எல்லா ஊர்களும் இந்தப் பெரிய நகரங்களையே எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லையா? இந்த

நகரங்களில் தேங்கிய உணவுப் பொருள்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டால் நாட்டில் உணவு இல்லாத பஞ்சம்; கைத்தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் நடந்தால், நாடு முழுவதும் உடை முதலியவற்றிற்குப் பஞ்சம், அரசியல் தலைமை நிலையங்களில் ஊழல் மலிந்தால் நாடு முழுதும் ஊழல். இவ்வாறு எல்லா ஊர்களும் இருக்கின்றது. இந்த நிலைமையை நாட்டுத் தேவை நிலை என்று குறிப்பிடலாம்.

குடிசைக் கைத்தொழில்கள் மட்டும் நிறைந்து போக்குவரவு குறைந்து உலகத் தொடர்பு குன்றியிருந்த பழங்காலத்தில் ஊர்த்தேவை நிலை இருந்தது. குடிசைக் கைத்தொழில்கள் குன்றி, போக்குவரத்து அளவில்லாமல் பெருகி உலகப் பிணைப்பு மிகுந்துள்ள இந்தக் காலத்தில் நாட்டுத் தேவை நிலையே இருக்கமுடியும். இதை மாற்றியமைக்க முடியாது. மாற்றியமைக்க வேண்டுமானால், முதல் முதலில் செய்ய வேண்டிய கடமை குடிசைக் கைத்தொழில்களை வளர்ப்பது அல்ல; ரயில், மோட்டார் முதலிய போக்குவரவுக் கருவிகளை உலகெங்கும் நிறுத்துவதே நேர்மையான வழி. வெளி நகரத்திலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் பொருள்கள் வர வில்லையானால், அந்த அந்த ஊரார் அவரவர்களுக்கு வேண்டிய உடை முதலியவற்றைத் தாமே செய்து கொள்வார்கள். ஆகவே, குடிசைக் கைத்தொழில்கள் சொல்லாமல் வளர்ந்துவிடும். அதை விட்டுவிட்டு, ஒரு பக்கம் யந்திரங்களை அளவில்லாமல் பெருகவிட்டு, போக்குவரவுக் கருவிகளையும் போற்றிக் கொண்டிருந்தால், ஒரு நாளும் குடிசைக் கைத்தொழில்கள் வளர முடியாது. அவற்றை அகற்றாமல், குடிசைக் கைத்தொழில்களை வளர்க்க முயல்வது, கண்ட இடமெல்லாம் இனிய தின்பண்டங்களைப் பரப்பி வைத்துவிட்டுக் குழந்தைகளை உணவுப் பத்தியம் இருக்கச் செய்வது போன்றது. ஆகவே, வெறுங்கனவு காண்பது போல் ஏங்குவதால் பழைய நிலைமை வராது. அதை மாற்ற உண்மையான முயற்சி வேறு; அதைச் செய்வது அருமையிலும் அருமை. அது வரையில் ஊர்த் தேவை நிலை திரும்பாது; நாட்டுத் தேவை நிலையே வாழும்.

ஆனால் எப்படியாவது நிலைமை மாறுவது நல்லது என்று நல்லெண்ணம் கொண்ட சிலர், உணவையும் மற்றப் பொருள்களையும் பொறுத்தவரையில் ஊர்த்தேவை நிலையை அமைக்க வேண்டும் (Decentralisation) என்று திட்டம் இடுகின்றார்கள். அணையோ கட்டி ஆகிவிட்டது. ஏரிகள் பழையபடி இல்லை. ஏரிகளுக்கு நீர் வராதபடி அணையே எல்லா நீரையும் தடுத்து வைத்திருக்கின்றது. அப்படி இருப்பது தெரிந்தும், பழையபடியே ஏரிகளையே நம்ப வேண்டும். ஏரிகளாலேயே நீர் பாய்ச்ச வேண்டும் என்று முயற்சி

செய்வதைப் போன்றதுதான் இது. ஒன்று, அணையை உடைத்தெறிந்து நீரை ஏரிகளுக்குக் கொண்டு வர வேண்டும். அல்லது அணையை ஆளும் பொறுப்பில் பங்கு பெற வேண்டும்; அந்தப் பங்கு உரிமையான பங்காக இருக்க வேண்டும்; நன்மை செய்யாத முறையில் இருந்தால் அதை மாற்றியமைக்கும் உரிமையும் இருக்க வேண்டும்.

## வலிய தலைமை

ஆட்சி முறையிலும் இவ்வாறு மாறுதல் செய்ய வேண்டுமானால் பஞ்சாயத்து என்னும் ஊர் மன்றங்களை அமைக்கச் செய்ய வேண்டும். ஆனால் அந்த ஊர் மன்றங்களை அமைக்கும் பொறுப்பும் கலைக்கும் பொறுப்பும் அந்த அந்த ஊராருக்கே இருக்க வேண்டும் தவிர, தாலுக்கா அதிகாரிக்கோ, ஜில்லா அதிகாரிக்கோ, மாகாண அதிகாரிக்கோ, அமைச்சருக்கோ இருக்கக் கூடாது. இருந்தால் அது உண்மையான மாறுதல் அல்ல. இரண்டாவதாக, அந்த ஊர் மன்றங்களுக்குப் பாராளுமன்றத்தை அசைக்கும் ஆற்றல் இருக்க வேண்டும். அதாவது, முன் குறிப்பிட்டது போல், ஊர் மன்றத்திலிருந்து தகுதித் தேர்தல் நடைபெற வேண்டும்; அது படிபடியாகப் பாராளுமன்றத்து உறுப்பினர் தேர்தலுக்குக் காரணமாக இருக்க வேண்டும்; ஆட்சி முறையில் கோளாறு நேர்ந்த போது, பெரும்பாலான ஊர் மன்றங்கள் விரும்பினால் பாராளுமன்றத்தை அசைக்கவும் கலைக்கவும் உரிமை இருக்க வேண்டும். அந்த உரிமை இருந்தால்தான் ஊர் மன்றத் திட்டம் உண்மைப் பயன் தரமுடியும். இல்லையானால், "அணையில் உங்களுக்கு உரிமை இல்லை; ஆனால் இதிலிருந்து வரும் நீரை உங்கள் ஊரிலுள்ள வயல்களுக்குப் பங்கிட்டுப் பாய்ச்சுவதில் உங்களுக்கே முழு உரிமை", என்று சொல்வதைப் போல் இருக்கும். உணவுப்பொருள்களையும் கைத்தொழில் பொருள்களையும் பொறுத்தவரையில் குடிசைக் கைத்தொழில் என்ற தலைகீழ் முறையைக் கையாள்வதால் பயனில்லை. ஆட்சி உரிமையைப் பொறுத்தவரையில் உரிமையில்லாமல் மன்றங்கள் அமைப்பதாலும் பயன் இல்லை.

அணையில் தக்க அளவு உரிமை இருந்தால், ஏரியமைப்புத் திட்டமே வேண்டாம். அரசியல் உரிமையுள்ள ஊர்த்தேவை நிலை இருந்தால், வாணிகத்திலும் கைத்தொழில் பெருக்கத்திலும் அது வேண்டியதே இல்லை. வலுவான தலைமை அமைப்பு ஒன்று அரசியலில் இல்லையானால், பகைவர்கள் படையெடுப்புக்கு என்ன செய்வது என்று கவலை பிறக்கும். வலிய தலைமை அமைப்பு இருந்து மட்டும் என்ன பயன்? வல்லரசுகள்

இருந்தும் உலகப் போர்களைத் தடுக்க முடிந்ததா? உண்மையை நோக்கினால், வல்லரசுகளே போருக்குக் காரணமாக இருக்கின்றன; வல்லரசுகளே போருக்கு இரையாகின்றன. படைவலிமை குறைந்த மற்ற நாடுகளில் அவ்வளவு அழிவும் அல்லலும் நேர்வதில்லை எனலாம். மற்ற நாடுகளின் உரிமையை அடக்கி அவற்றைச் சுரண்டி வாழ்கின்ற வல்லரசுகள் இருக்கின்ற வரைக்கும் போர்கள் இருந்துகொண்டே இருக்கும் என்றுதான் உலக அறிஞர்கள் உணர்கின்றார்கள். ஆகவே, வலிய தலைமை அமைப்பு ஒரு நாட்டில் இருப்பதே போருக்கு வித்து என்று சொல்லாம். தன் நாட்டில் எத்தனையோ ஊர்களின் ஆட்சியுரிமையைப் பறிக்கும் பயிற்சி கொண்ட தலைமை அமைப்பு, தன்னைவிட வலிமை குறைந்த அரசுகளை அடக்கி ஆளவே முயலும். இந்தப் பயிற்சியும் முயற்சியுமே உலகப்போரை நடத்தத் தூண்டுகோலாகின்றன.

இதற்கு மாறாக, ஊராட்சி முறையும் ஊர் மன்றங்களின் அடிப்படை கொண்டு நடக்கும் பாராளுமன்றமும் இருந்தால், அந்தத் தலைமை அமைப்பு ஒருநாளும் போர் வெறி கொள்ளாது. அப்போது உள்ள அமைச்சர் குழு போர் வெறி கொண்டாலும், "நாளைக்கு எதிரிகளின் குண்டுகள் நம் தலை மேல் தானே விழும்? அதற்கு வரவேற்பு செய்வதா நம் கடமை? என்று ஊர்தோறும் மனச்சான்று எழுந்து அமைச்சர் குழுவின் போக்கைத் தடுக்கத் திரளும். வேறுவழி இல்லையானால் பெரும்படை திரட்டிப் போர்க்குத் துணை செய்யும். அப்போது பெரும்பாலான ஊர் மன்றங்களின் விருப்பமே நிறைவேறும். போர் வேண்டாம் அல்லது வேண்டும் என்று முடிவு செய்வது தலைவர்களின் வெறியைப் பொறுத்து இருக்கும். வேண்டாம் என்று ஒதுங்குகின்ற எந்த நாடும் போரால் அவ்வளவு அழிவு பெறுவதில்லை. போர் வேண்டாம் என்று மறுக்கக் கூடிய அவ்வளவு உணர்வு பெற்ற ஆட்சி உரிமை ஊர் மன்றங்களுக்கு இருந்தால், அந்த நாட்டின் மேல் வேறு எந்தநாடும் படையெடுக்கவும் முடியாது; படையெடுத்துக் கைப்பற்றினாலும் அடக்கியாள முடியாது. ஆகவே, இப்படி வலிய தலைமை அமைப்பு என்று ஆசைகொண்டு நாட்டு மக்களின் உரிமையைப் பறிப்பதை விட, ஊர் மன்றங்களை வலுப்படுத்தி, அவற்றின் வல்லமையே தலைமை அமைப்பின் வல்லமையாகக் கொண்டால், நாட்டுக்கும் நன்மை; உலகத்திற்கும் நன்மை; போர்களைத் தடுக்க அறிஞர்கள் முயலும் முயற்சிக்கும் இது பெருந்துணையாகும்.

ஆனால் இவ்வாறு உணராமல், முயலாமல், அமைக்காமல் இருப்பதற்கு யார் காரணம்? எது காரணம்? செல்வாக்கின் கூட்டுப் பண்ணைகளான

கட்சிகளே காரணம்; கட்சியமைப்பே வலிய தலைமை அமைப்பால், கட்டுப்படுவது; ஊர்க்கட்சிகளுக்கு உரிமை தராமல், தலைமைக் கட்சி மட்டும் வாழப் பார்ப்பது; ஆகவே வலிய தலைமை அமைப்பை உடைய கட்சி ஒன்று, அது எதுவானாலும் சரி, அது அமைக்கும் ஆட்சிமுறை எப்போதும் வலுவான தலைமை அமைப்பையே போற்றி நிற்கும்; இந்த உண்மையை உலகெங்கும் காணலாம். புலி, புலிக் குட்டியைத்தான் ஈன்று வளர்க்கும்; மான் கூட்டத்தையா வளர்க்கும்?

இவற்றை எல்லாம் பொறுமையோடு எண்ணிப் பார்த்தால், அறத்தின் ஆற்றலை மறந்து அமைக்கும் கட்சித் தேர்தல் எவ்வெவ்வாறோ வளர்ந்து வளர்ந்து, எதிர் கட்சியைப் படைத்து ஒன்றை ஒன்று தாக்கி அழியச் செய்து, அரசியல் ஆட்சி பெற்றபோது ஒரு நாட்டை ஒரு நாடு தாக்கும் போராக முற்றி, உலகப் போராக முதிர்ந்து அழிவுக்கலையை அளவில்லாமல் பெருக்கிவிடுகின்றது. 'அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு' என்று தனிப்பட்டவருக்குத் திருவள்ளுவர் சொன்ன உண்மை, கட்சிகளுக்கும் பொருந்துகின்றது. நாடுகளுக்கும் பொருந்துகின்றது. ஆகவே, மக்களிடம் மந்தையுணர்ச்சியை வளர்த்துப் போருக்குப் பலியிடும் கட்சித் தேர்தல் ஒழிந்து மனச்சான்றை வளர்த்து ஆக்க வேலையை வளர்க்கும் தகுதித் தேர்தல் உலகமெல்லாம் ஓங்க வேண்டும். இவ்வாறு மந்தையுணர்ச்சியைப் போக்கி மனச்சான்றை வாழ வைத்தால்தான் உரிமைப் பஞ்சம் தீரும். அறம் ஓங்கும். அரசியலும் திருந்தும்.